www.padippakam.com

மே 2009
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



## ஈழப் போரும் இந்திய மேலாதிக்க நலன்களும்

படிப்பகம்

www.padippakam.com



# “ஈழத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கப்போருக்கு பதிலடி கொடுப்போம்! தேர்தலைப் புறக்கணிப்போம்!”

## -தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்-பிரச்சார இயக்கம்

ஈழத்தமிழ் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும், சிங்கள பாசிச அரசு நடத்தி வரும் இனவெறிப்போரை எதிர்த்தும், இக்கொடிய போரில் சிங்கள அரசுடன் கைகோர்த்து நிற்கும் மேலாதிக்க இந்திய அரசை வீழ்த்த அறைகூவியும் தமிழகமெங்கும் ம.க.இ.க.; வி.வி.மு.; பு.மா.இ.மு.; பு.ஜ.தொ.மு.; பெ.வி.மு.; ஆகிய புரட்சிகர அமைப்புகளும் மனித உரிமை பாதுகாப்பு மையமும் இணைந்து தமிழகமெங்கும் கடந்த 5 மாதங்களாக வீச்சான பிரச்சாரத்தையும் போர்க்குணமிக்க போராட்டங்களையும் நடத்தியுள்ளன.



திருச்சியில்...

தற்போது, சிங்கள பாசிச அரசின் தமிழின அழிப்புப் போர் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், ‘‘இது சிங்கள இனவெறிப் போர் மட்டுமல்ல; ஈழ மக்கள் மீது இந்தியா நடத்தும் ஆக்கிரமிப்புப் போர்! அங்கே, பச்சை இரத்தப் படுகொலை; இங்கே, பாராளுமன்றத் தேர்தலா? தேர்தலைப் புறக்கணிப்போம்! போரை நிறுத்தக் கிளர்ந்தெழுவோம்! ஈழத்தமிழனுக்கு நச்சுவாயுக்குண்டு; இந்தியத் தமிழனுக்கு நாடாளுமன்றத் தேர்தலா? மானமுள்ள தமிழகமே தேர்தலைப் புறக்கணி!’’ எனும் முழக்கங்களோடு சென்னை, திருச்சி, மதுரை, கோவை, ஒசூர், பென்னாகரம், கோவில்பட்டி, தஞ்சை, கடலூர், விருத்தாசலம், வேலூர், புதுச்சேரி-என தமிழகத்தின் பல இடங்களிலும் இவ்வமைப்புகள் கடந்த ஏப்ரல் 10-ஆம் தேதியன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

ஈழத்தமிழர்களின் பிணங்களின் மீது ஏறி நாற்காலி பிடிக்க அலையும் ஓட்டுப் பொறுக்கிகளைத் திரைகிழித்தும், இந்தியாவின் மேலாதிக்கத்தை மூடிமறைக்கும் ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தியும், தமிழக மக்களைத் தேர்தலைப் புறக்கணித்து போராட அறைகூவியும் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டங்களும் தொடர்ச்சியாக இவ்வமைப்புகள் நடத்திவரும் பிரச்சார இயக்கமும் தமிழக மக்களிடம் பெருத்த வரவேற்பையும் ஆதரவையும் பெற்று வருகின்றன.

பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர்களின் குழந்தைகள் செங்கொடியேந்தி, திருச்சி பேருந்து நிலையத்தில், ‘‘ஈழத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கப்போருக்குப் பதிலடி கொடுப்போம்! தேர்தலைப் புறக்கணிப்போம்’’ எனும் முழக்கங்கள் அச்சிடப்பட்ட செஞ்சட்டையணிந்து தொடர்ந்து நடத்திய பிரச்சாரம், இப்பகுதிவாழ் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்பிரச்சாரத்தைக் கண்ட வெளிநாட்டில் வாழும் ஈழத்தமிழர் ஒருவர், ‘‘உங்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்




வேலூரில்...



புதுச்சேரியில்...



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24
இதழ் 7
மே 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561

# ஈழம்:
# தமிழினக் குழுக்களின் துரோகம்

**த**மிழ் விரோத - தமிழர் விரோத பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவுக்கு மக்கள் மத்தியில் அங்கீகாரம் தேடித்தரும் திருப்பணியை மேற்கொண்டு, அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்கக் கோரி கிளம்பியிருக்கிறார்கள், சில ஈழ ஆதரவாளர்கள். ''ஈழ மக்களைக் கொன்று குவிக்கத் துணைபோகும் காங்கிரசை, துரோகம் செய்யும் தி.மு.க.வைத் தேர்தலில் தோற்கடிப்போம்'' என்று கூறிக் கொண்டு அத்வானியையும் ஜெயலலிதாவையும் ஆட்சியில் அமர்த்தும் ஆழ்வார் வேலையில் இறங்கியிருக்கிறார்கள், இந்தத் தமிழினவாதிகள். ''காங்கிரசுக்குப் போடாதே ஓட்டு; தமிழினத்துக்கு வைக்காதே வேட்டு! காங்கிரசுக்குப் போடும் வாக்கு - தமிழினத்திற்குப் போடும் தூக்கு!'' என்று பிரச்சார முழக்கங்களை வடித்துக் கொண்டு அ.தி.மு.க. வுடன் இணைந்து ஓட்டுப் பொறுக்கும் தேர்தல் பரப்புரைகளையும் அவர்கள் செய்து வருகிறார்கள்.

''ஈழத் தமிழர்களின் இன அழிப்புப் போருக்கு சோனியா தலைமையிலான காங்கிரசு ஆட்சி அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அனைத்து உதவிகளையும் இலங்கை அரசுக்கு வழங்கி வருகிறது. இந்நிலையில் காங்கிரசுக்கும் காங்கிரசுக்குத் துணை போகும் தி.மு.க.வுக்கும் தமிழர்கள் பாடம் புகட்ட வேண்டும். காங்கிரசு ஆட்சி அகற்றப்படுவதன் மூலமே ஈழத்தில் இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்த முடியும். எனவே, காங்கிரசு-தி.மு.க. வேட்பாளர்களைத் தோற்கடிப்பதே இத்தேர்தலில் தமிழர் கடமையாக இருக்க முடியும். களத்தில் சம போட்டியில் நிற்கக் கூடிய வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதன் மூலமே, இவர்களைத் தோற்கடிக்க முடியும். இவர்களை எதிர்த்து நிற்கும் வலிமையான கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும். நிச்சயமாக அந்த வலிமையான கூட்டணி அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணிதான்!'' என்று இச்சந்தர்ப்பவாதத்துக்குக் கொள்கை சாயம் பூசி பேட்டியளித்துள்ளனர், பெரியார் தி.க.வின் கோவை இராமகிருஷ்ணனும் 'விடுதலை' இராசேந்திரனும்.

பார்ப்பன-பாசிசத்தைச் சித்தாந்தமாகக் கொண்டுள்ள அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, தொடக்கத்திலிருந்தே ஈழ விடுதலைப் போரை எதிர்த்தும் ஈழ ஆதரவாளர்களை ஒடுக்கியும் வந்தவர் என்பது நாடறிந்த உண்மை. ஈழத் தமிழர்கள் மீதான சிங்கள பாசிச அரசின் தற்போதைய கொடிய போரின்போது கூட, ''போர் என்றால் மக்கள் மடியத்தான் செய்வார்கள்'' என்று திமிராகப் பேசிப் போரை ஆதரித்து நின்றார். காங்கிரசுக்குத் தூதுவிட்டு பேரம் படியாத நிலையில், தேர்தல் ஆதாயத்துக்காக கூட்டணி கூஜாக்களின் ஆலோசனையின்பேரில், போர் நிறுத்தம் கோரி உண்ணாவிரத நாடகமாடிய அவர், இப்போது ''தனித் தமிழ் ஈழம்தான் ஒரே தீர்வு'' என்று சவடால் அடித்து வருகிறார்.

இருப்பினும், ''கடந்த காலங்களில் ஈழத் தமிழர் விவகாரத்தில் துரோகத்தனமான நிலைப்பாடுகளை எடுத்து வந்துள்ள ஜெயலலிதா, தற்போது சந்தர்ப்பவாதமாக ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த போதிலும், அவர் தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிறார். ஜெயலலிதாவின் சந்தர்ப்பவாதம் தமிழர்களின் உணர்வுகளுக்கு ஆதரவாகவும், கருணாநிதியின் சந்தர்ப்பவாதம் தமிழர் உணர்வுகளுக்கு எதிராகவும் இருப்பதால், ஜெயலலிதாவின் சந்தர்ப்பவாதத்தை ஆதரிப்பதே இச்சூழலில் சரியான முடிவாக இருக்க முடியும்'' என்று தமது பச்சையான சந்தர்ப்பவாதத்துக்கு கூச்சநாசமின்றி இவர்கள் நியாயம் கற்பிக்கின்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவுடன் கூட்டணி கட்டுவதற்கான உந்து பலகையாக, ''இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்'' என்ற பெயரில் ஒரு அணியை உருவாக்கி ஏய்த்த வை.கோ., நெடுமாறன், ராமதாசு, தா.பாண்டியன் ஆகியோர், பின்னர் தேர்தல் கூட்டணி கட்டிக் கொண்டு ஜெயலலிதாவுக்குக் கூஜா தூக்குகின்றனர். இத்தகைய ஓட்டுக்கட்சி சந்தர்ப்பவாத அரசியலுக்கு அப்பாற்பட்ட கொள்கைபூர்வ இயக்கமாகக் காட்டிக் கொள்ளும் சில தமிழின குழுக்களும் காங்கிரசையும், தி.மு.க.வையும் தேர்தலில் வீழ்த்துவதே முதன்மைப் பணி என்று கூறிக் கொண்டு பிழைப்புவாதத்தில் மூழ்கி, பார்ப்பன-பாசிச ஜெயாவுக்கு வெட்கமின்றி காவடித் தூக்குகின்றன.

இச்சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்த, ''கருப்பனைக் கட்டி வைத்து அடித்தால், வேலன் வேலியை முறித்துக் கொண்டு ஓடுவான்'' என்ற பழமொழியைக் கூறுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



ஈழப் போருக்கு எதிராகப் பெண்கள் அமைப்பினர் சென்னையில் நடத்திய உண்ணாவிரதம், இறுதியில் ஜெயலலிதாவிற்கு ஒட்டுப் பொறுக்கும் மோசடியில் முடிந்து போனது.

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலரான பெ.மணியரசன். ''ஓர் ஊரில் கருப்பையா, வேலையா என்று இரண்டு திருடர்கள் இருந்தார்கள்; இரண்டு பேரும் பிடிபடாமல், திருடித் திரிந்தார்கள்; ஒருநாள் கருப்பையா மட்டும் பிடிபட்டார்; அப்போது சொன்ன பழமொழி இது'' என்று அவர் விளக்கமளிக்கிறார். அதாவது காங்கிரசு, பா.ஜ.க. எனும் இரண்டு திருடர்களில், இப்போது காங்கிரசு பிடிபட்டு விட்டதாம். காங்கிரசைத் தேர்தலில் வீழ்த்தினால், அத்வானியும் ஜெயலலிதாவும் தமக்கும் இதுபோல் நேர்ந்துவிடும் என்று அஞ்சி ஈழ விடுதலையை ஆதரிப்பார்களாம். தமது பிழைப்புவாதத்துக்கு இப்படி விளக்கமளித்து காதில் பூ சுற்றுகிறார் மணியரசனார்.

''இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்'' என்ற பெயரில் ஒரு அணியை அமைத்து பார்ப்பன-பாசிச ஜெயாவுக்கு விசுவாச சேவை செய்த பழ.நெடுமாறன், இப்போது ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணைபோகும் காங்கிரசு - தி.மு.க. கூட்டணியை தேர்தலில் வீழ்த்தக் கோரியும், ஜெயலலிதாவுக்கு வாக்களிக்கக் கோரியும் தமிழருவி மணியன் முதலான காங்கிரசு பிரமுகர்களையும் இணைத்துக் கொண்டு வாகனப் பிரச்சாரம் செய்யக் கிளம்பிவிட்டார். பெரியார் தி.க.வினரும் இதேபோல பேனர்கள், வாகனப் பரப்புரை, பொதுக் கூட்டங்கள் என அமர்க்களப்படுத்துவதோடு, அ.தி.மு.க. பிரமுகர்களையும் தமது மேடையில் அமர்த்தி தேர்தல் பிரச்சாரம் செய்யவும் துணிந்து விட்டார்கள். சென்னை-இராயப்பேட்டையில் பெரியார் தி.க.வைச் சேர்ந்த பத்ரி நாராயணன் என்ற முன்னணி ஊழியரின் கொலையில் சம்பந்தப்பட்டுள்ள பன்னீர் செல்வம் என்ற உள்ளூர் அ.தி.மு.க. பிரமுகரை தமது மேடையில் அமர்த்தி தேர்தல் பரப்புரை செய்யுமளவுக்கு பெரியார் தி.க.வினரின் பிழைப்புவாதம் எல்லோரையும் விஞ்சி நிற்கிறது.

இந்த அளவுக்கு சந்தர்ப்பவாத புதை சேற்றில் மூழ்கி முத்துக் குளிக்காமல், அறிவார்ந்த முறையில் சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துகிறார், பெ. மணியரசன். ''நாம் யாருக்கும் வாக்களிக்கச் சொல்லவில்லை. வாக்களிக்க விரும்புவோர் காங்கிரசுக்குப் போடாதீர் என்று வேண்டுகிறோம்'' என்று - அதாவது அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று - அதிமேதாவித்தனமாகக் கோருகிறார் அவர்.

பேராசிரியர் சரசுவதி தலைமையில், ஈழப் போரை உடனடியாக நிறுத்தக் கோரி 13 நாட்களாக சென்னையில் தொடர் உண்ணாவிரதம் இருந்த பெண்கள், கருணாநிதி உள்ளிட்டு பலரும் வேண்டுகோள் விடுத்த போதிலும் உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்த அவர்கள், ஏப்ரல் 25-ஆம் தேதியன்று 'அம்மா'வின் வேண்டுகோளை ஏற்று உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்கள். காங்கிரசு 'அன்னை'க்கு எதிராகத் தொடங்கிய உண்ணாவிரதம் 'அம்மா'வின் கடைக்கண் பார்வையால் முக்தி அடைந்துள்ளது. இப்போது பேராசிரியர் சரசுவதி தலைமையிலான அப் பெண்கள் குழு, அ.தி.மு.க. கூட்டணியை ஆதரித்துப் பிரச்சாரம் செய்யப் போகிறதாம்.

ஈழப் பிரச்சினையில் சுப்பிரமணிய சாமி, சோ-வின் கொள்கைதான் பா.ஜ.க. - அ.தி.மு.க.வின் கொள்கை என்பது உலகறிந்த உண்மை. ஆனால் இது, இந்த ஈழ ஆதரவாளர்களுக்குத் தெரியாது போலும்! வாஜ்பாயி பிரதமராக இருந்தபோது, ''யாழ் கோட்டையில் சிக்கிக் கொண்ட 20,000 சிங்கள சிப்பாய்களை விடுவிக்கா விட்டால், இந்திய விமானப் படையை அனுப்புவோம்'' என்று புலிகளை மிரட்டியது பா.ஜ.க. அரசு. அந்த 'பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாளை ராஜபக்சேவை மிரட்டும்' என்று நம்மை இவர்கள் நம்பச் சொல்கிறார்கள்.

ஈழம், சேதுக் கால்வாய், காவிரி, ஒகேனக்கல், முல்லைப் பெரியாறு, மீனவர் படுகொலை - என அனைத்துப் பிரச்சினைகளிலும் தமிழகத்துக்கு எதிரானதுதான் காங்கிரசு, பா.ஜ.க. மற்றும் போலி கம்யூனிஸ்டுகளின் நிலை. அதற்குத் துணைபோவதுதான் பிற கட்சிகளின் நிலை. இருந்தாலும் என்ன? டெல்லியில் அதிகாரத்திலிருக்கும் கட்சிகளிடம் கருணை மனு கொடுப்பதன் மூலம் ஈழப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியும் என்று நம்புகிறார்கள். இந்தப் பிழைப்புவாத ஈழ ஆதரவாளர்கள். 'இத்தாலி மாதா'வுக்குப் பதில் 'பாரத மாதா'வின் ஆட்சியமைந்து அந்த ஆட்சி மனது வைத்தால் ஈழம் மலர்ந்து விடும் என்று பா.ஜ.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் வாக்களிக்க சொல்லி, கடைந்தெடுத்த துரோகத்தனத்தை கூசாமல் செய்து வருகிறார்கள். காஷ்மீர்-வடகிழக்கிந்திய தேசிய இன மக்கள் மீது இராணுவ அடக்குமுறையை ஏவிவரும் இந்திய அரசு, ஈழ விடுதலை மீது கருணை காட்டும் என்று நாட்டு மக்களை நம்ப வைத்து ஏய்த்து வருகிறார்கள்.

இலங்கையிலும் தெற்காசிய வட்டகையிலும் இந்திய ஆளும் வர்க்கங்களின் அரசியல், பொருளாதார, இராணுவ ஆதிக்க நோக்கங்கள் தான் டெல்லி ஆட்சியாளர்களை வழிநடத்துமேயன்றி, ஈழத் தமிழ் மக்களின்


படிப்பகம்

www.padippakam.com




# மாயாவதியின் பார்ப்பன சேவை பல்லிளித்தது தலித்தியம்

**தாழ்த்தப்பட்டோருக்கு அதிகாரம் என நீட்டி முழக்கிய தலித்தியம், பார்ப்பனியத்திற்கு முட்டுக் கொடுக்கும் தூணாகி விட்டது.**

**எத்தகைய தேர்தல் தோல்வியும் பாசிச காங்கிரசுக்குப் பாடம் புகட்டாது: எத்தகைய தேர்தல் வெற்றியும் அகண்ட பாரதவெறி பிடித்த அத்வானியையும், பார்ப்பன -பாசிச ஜெயலலிதாவையும் ஈழ ஆதரவாளர்களாக மாற்றிவிடாது.**

அவலமோ, தமிழக மக்கள் அளிக்கும் வாக்குகளோ அல்ல. எத்தகைய தேர்தல் தோல்வியும் பாசிச காங்கிரசுக்குப் பாடம் புகட்டாது; எத்தகைய தேர்தல் வெற்றியும் அகண்ட பாரத வெறி பிடித்த அத்வானியையும், பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவையும் ஈழ ஆதரவாளர்களாக மாற்றி விடாது.

இந்து - இந்தி - இந்தியா எனும் பார்ப்பன தேசியத்தை எதிர்ப்பதையே தமது கொள்கை - இலட்சியமாக அறிவித்துக் கொண்ட இந்தப் பிழைப்புவாத ஈழ ஆதரவாளர்கள், இன்று வெளிப்படையாகவே தமிழ் விரோத பார்ப்பன - பாசிச ஜெயாவையும் பா.ஜ.க.வையும் ஆதரிக்கக் கிளம்பிவிட்ட பிறகு, இத்துரோகக் கும்பலை தமிழக மக்களிடம் அம்பலப்படுத்தி முடக்காமல், ஈழத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கப் போரைத் தடுத்து நிறுத்திட முடியாது. •

**தா**ழ்த்தப்பட்டோரை ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் சாதி ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவந்து விடலாம் எனும் அரசியலை முன்வைத்து, ''பார்ப்பனர்கள், வைசியர்கள், ராஜபுத்திரர்களை செருப்பால் அடிப்போம்'' என்ற புகழ்பெற்ற முழக்கத்தின் மூலம் தனது அடித்தளத்தை உ.பி.யில் உருவாக்கி இருந்தது பகுஜன் சமாஜ் கட்சி. தற்பொழுது இம்மூன்று சக்திகளுடன் சமரசமாகியதன் மூலமும், பார்ப்பனர்களுக்குப் பதவிகளைக் கொடுத்ததன் மூலமும் அக்கட்சி உ.பி.யில் 2007-இல் தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி அதிகாரத்துக்கு வந்தது. தமிழ்நாட்டில் தலித்தியம் பேசிக் கொண்டிருக்கும் அறிவுஜீவிகளும், தாழ்த்தப்பட்டோரின் வாக்கு வங்கியை வைத்துப் பிழைப்பு நடத்தும் சந்தர்ப்பவாத அரசியல் வித்தகர்களும் இப்பரிசோதனைக்காக மாயாவதியைப் போற்றிப் புகழ்ந்தார்கள். திருமாவளவன் கூட, ''இந்திய நாடெங்கும் இந்த வெற்றியின் தாக்கம் தீயாய்ப் பற்றிப் பரவும்'' என மதிப்பிட்டிருந்தார்.

தற்போது நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சி தமிழ்நாட்டிலும் அதே உத்தியுடன் களமிறங்கியுள்ளது. அதிகார வர்க்கப் பார்ப்பனர்களையும், சாதிவெறியர்களையும், கிரிமினல்களையும் சேர்த்துக் கொண்டு மாயாவதி தனது கட்சியைத் தமிழ்நாட்டில் வளர்க்க களம் இறங்கியிருக்கிறார். இந்தியா முழுவதும் இக்கட்சி பெருமளவில் பார்ப்பனர்களையே வேட்பாளர்களாய் நிறுத்தியிருப்பதோடு, அச்சாதியில் இருக்கும் ஏழைகளின் நலனுக்காகப் பாடுபடப்போவதாகக் கூறுகிறது. தமிழகத்திலும் ஓய்வு பெற்ற மூன்று பார்ப்பன ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடுகின்றனர். சமூகநீதி பேசி வந்த 'பகுஜன்' சமாஜ் கட்சி, தற்போது 'சர்வஜன'மான பிறகு பொருளாதார ரீதியில் பின்தங்கிய உயர்சாதியினருக்கும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் எனக் கூறி வருகிறது. இதை உ.பி.யில் நடைமுறைப்படுத்தப் போவதாக ஏற்கெனவே அறிவித்து விட்டார், மாயாவதி.

பெருமளவில் பார்ப்பனர்கள் கட்சியில் சேர்க்கப்பட்டதால், அவர்கள் மனம் கோணாமல் இருக்க உ.பி.யில் தங்கள் கட்சி சுவரொட்டிகளில் இருந்து பெரியார் படத்தை நீக்கியது, பகுஜன் சமாஜ் கட்சி, தமிழ்நாட்டிலோ பெரியாரைக் காட்டி ஓட்டுப் பொறுக்குகிறது. ''புதியகோடங்கி'' யில் முனிமா எனும் புனைபெயரில் பெரியார் மீது சேற்றை வாரி இறைத்து, அவரைத் தலித் விரோதி என அவதூறு செய்து வந்த சிவகாமி ஐ.ஏ.எஸ். இப்போது இக்கட்சியின் கன்னியாகுமரி தொகுதி வேட்பாளர். தாழ்த்தப்பட்டோரின் எதிரியாக பெரியாரைச் சித்தரித்த இந்த இலக்கியவாதி, 'தாழ்த்தப்பட்டோர் சுத்தபத்தமாக் கோவிலுக்கு வாங்கோ' என இழிவுபடுத்திய சங்கராச்சாரியை, தனது கட்சியைச் சேர்ந்த செல்வப்பெருந்தகை சந்தித்து ஆசி வாங்கியதைப் பற்றி

**'வெகுஜன அதிகாரம்' படைக்கப் புறப்பட்டுள்ள தலித்திய பிழைப்புவாதி சிவகாமி ஐ.ஏ.எஸ்.**





படிப்பகம்

www.padippakam.com

என்ன நினைப்பார்? இதுவரை அவர்களை 'பார்ப்பான்' என அழைத்து வந்த இதே தலித்திய எழுத்தாளருக்கு இப்போது அவர்கள் 'பிராமணர்' ஆகிவிட்டபடியால், சங்கராச்சாரி தங்களை அழைத்துப் பேசியதை பெருமையாகக் கூட நினைத்திருக்கலாம்.




**தலித்தியத்தின் பெயரால் பார்ப்பன மீட்சிக்குப் பாடுபடும் மாயாவதியின் மதுரை தேர்தல் பிரச்சாரம்.**

மாயாவதியின் கட்சி பார்ப்பனியத்துடன் சமரசமாகச் செல்வதன் காரணத்தை அறிய நாம் மண்டையைக் குடைய வேண்டியதில்லை. சிவகாமி அம்மையாரே 'அதிகாரமில்லை எனில் வாழ்வில்லை. அதை வெகுஜன அதிகாரமாக்க வேண்டும்' என்று எளிதில் விளக்கிவிட்டார். தலித் இலக்கியத்தை தலித்துதான் எழுத வேண்டும் என்று இந்த 'இலக்கியவாதி' சொல்லிக் கொண்டிருந்தபோது தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்காக அம்மக்களை மட்டும் திரட்டும் குழுக்கள் தோன்றின. இப்படித் தோன்றிய குழுக்கள் ஓட்டுப் பொறுக்கும் அரசியலில் நுழைந்த போது, தனித்து நின்றால் பெரும்பான்மையைப் பெற முடியாது எனும் யதார்த்தம், அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுடனும், முசுலிம்களுடனும் கூட்டணி கட்ட வைத்தது. அதிலிருந்து தனிப் பெரும்பான்மை இடங்களைப் பெற்றிடவும் ஒரே பாய்ச்சலில் முன்னேறவும் பார்ப்பனியத்துடன் சமரசம் செய்து கொண்டது. செல்வி மாயாவதியோ, 'உயர் சாதி மக்களையும் சேர்க்காமல் மத்தியில் நாம் ஆட்சி அமைக்க முடியாது. உயர்சாதி மக்கள் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் முன்னேற்ற வேண்டும்', என்று திருவாய் மலர்ந்திருக்கிறார், மாயாவதி.

'வெகுஜன அதிகாரம்' என இவர்கள் கூறுவது அவர்கள் கட்சியில் புதிதாகச் சேர்ந்துள்ள பேராசிரியர் தீரனின் வன்னிய சாதிவெறியையும், சங்கராச்சாரியின் பார்ப்பனியத்தையும் உள்ளடக்கியதே. ஒரே சமயத்தில் பார்ப்பனியத்துடனும் பெரியாருடனும் அம்பேத்கருடனும் கூட்டுவைத்துக் கொண்டு இந்தக் கேடுகெட்ட சந்தர்ப்பவாதத்துக்கு 'வெகுஜன அதிகாரம்' என நாமகரணம் சூட்டி இருக்கிறார்கள்.

இந்த ஒட்டுரக அரசியலை குருமூர்த்தி, சோ போன்றவர்களும் விரும்புகிறார்கள். பார்ப்பனர்களில் கணிசமானோர் வரவேற்கின்றனர். அவர்களின் ஒத்துழைப்பிற்காகத்தான் தென்சென்னை, கோவை, மயிலாடுதுறை தொகுதிகளுக்குப் பார்ப்பன வேட்பாளர்களை பகுஜன் சமாஜ் கட்சி நிறுத்தி உள்ளது.

''இந்த 40 ஆண்டுகளில் மக்கள் எந்தெந்த வகையில் ஏமாற்றப்பட்டு மேலும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்பது முக்கியம். இதை முன்னிலைப்படுத்தித் தாழ்த்தப்பட்டோர் மட்டுமின்றி, ஏனைய பிரிவினரையும் ஒருங்கிணைக்க வேண்டும்; திராவிடக் கட்சிகள் மீதான அதிருப்தியை உணரும்படிச் செய்ய வேண்டும்'' என்று கூறும் பகுஜன் சமாஜ் கட்சியின் சிவகாமி குறிப்பிடும் விளிம்பு நிலை மக்களாகப் பார்ப்பனர்களும் இருக்கின்றனர்.

**ஏழைப் பார்ப்பனர்களுக்காக கசிந்துருகும் சிவகாமியின் கட்சி நிறுத்தி இருக்கும் 3 பார்ப்பன வேட்பாளர்களும் ஏழைகளா? திருச்செந்தூர் போன்ற வரும்படி மிக்கக் கோவில்களை நம்பி இருக்கும் பார்ப்பனர்களை ஏழைகள் என்று சொல்வதே கடைந்தெடுத்த பொய் அல்லவா?**

திருச்செந்தூர் அக்ரஹாரத்தில், ''நாங்கள் சாதி வித்தியாசம் பார்ப்பதில்லை. பிராமணாளைக் காப்பாத்துங்கோ'' என்றார்களாம். ஏழைப் பார்ப்பனர்களுக்காக கசிந்துருகும் சிவகாமியின் கட்சி நிறுத்தி இருக்கும் 3 பார்ப்பன வேட்பாளர்களும் ஏழைகளா? மயிலாடுதுறை சப்தரிஷி அய்.ஏ.எஸ்., என்ன உண்டக்கட்டிப் பார்ப்பானா? திருச்செந்தூர் போன்ற வரும்படி மிக்கக் கோவில்களை நம்பி இருக்கும் பார்ப்பனர்களை ஏழைகள் என்று சொல்வதே கடைந்தெடுத்த பொய் அல்லவா?

●●●

இவ்வாறு பார்ப்பனர்களை மட்டும் வைத்துக் கட்சி நடத்த முடியுமா? ஏனைய சாதிச் சங்கங்கள் வேண்டாமா? கிரிமினல் தாதாக்கள் வேண்டாமா? அதற்கும் ஆள் பிடித்துள்ளனர் இவர்கள்.

எண்பதுகளில் வன்னியர் சங்கம் எனும் சாதிவெறி அமைப்பை நிறுவியவர்களில் ஒருவரான பேராசிரியர் தீரன் இப்போது பகுஜன் சமாஜ் கட்சியின் முக்கியத் தலைவர். வன்னியர் சங்கத்தை பாட்டாளி மக்கள் கட்சியாக மாற்றி, எம்.எல்.ஏ. பதவி வரை அனுபவித்த தீரன், தனக்கும் ராமதாசுவுக்கும் இடையில் உருவான பதவிச் சண்டையால் பா.ம.க.விலிருந்து 10 ஆண்டுகளுக்கு முன் வெளியேறினார். கருணாநிதியின் இதயத்தில் மட்டும் இடம்பிடித்துப் பதவி ஏதும் பெற வழி இல்லாததால், சென்ற


படிப்பகம்

www.padippakam.com

தேர்தலில் பா.ஜ.க.வுக்கும் ஒரு சுற்றுப் போய்விட்டு, தற்போது இக்கட்சிக்கு வந்துள்ளார். ராமதாசை விட்டு விலகியதும் ''ராமதாசு வன்னியர்களுக்கு செய்த துரோகங்கள்'' என்றொரு பிரச்சார நூல் வெளியிட்டு, வன்னிய சொந்தங்களின் ஆதரவினைப் பெற முயன்ற வன்னிய சாதி வெறியர் தீரன், பகுஜன் கட்சியில் இணைந்திருப்பது சாதியில்லாத சமுதாயம் படைக்கவா?

தீரனின் பின்னணி இப்படி என்றால், பத்தாண்டுகளில் 4 கட்சிகள், பல கட்டைப் பஞ்சாயத்துக்கள் எனப் புகழோடு இருக்கும் திடீர் பணக்கார கிரிமினல் பேர்வழியான செல்வப் பெருந்தகை, தமிழ்நாட்டின் பகுஜன் கட்சி பொறுப்பாளர். 90-களில் சென்னை யிலுள்ள சட்டமன்ற விடுதியில் எடுபிடியாக வேலை செய்து வந்த இந்நபர், ஆட்களைப் பிடித்து ரிசர்வ் வங்கியில் கடைநிலை ஊழியராகச் சேர்ந்தார். ஆனால், திடீரென கோடிகளுக்கு அதிபதி ஆனார். அப்போது அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்பை வைத்திருந்த பூவை.மூர்த்தியின் கட்டைப் பஞ்சாயத்துக்களைக் கவனித்துக்கொண்டே வங்கியில் வேலை செய்த செல்வம் (அப்போதைய பெயர்) அவ்வமைப்பின் பொதுச்செயலாளர் ஆனார்.


ஸ்பிக் முத்தையாவின் நெருங்கிய கூட்டாளியாக இருந்த பாண்டியன் எனும் தனிக்கையாளர், நலிவடைந்திருந்த முத்தையாவின் நிறுவனம் ஒன்றை ஏற்று நடத்திப் பணக்காரர் ஆனவர். அந்நிறுவனத்தைத் தனக்கே சொந்தமாக்கிட பாண்டியன் முனைந்ததால் முத்தையாவிடம் இருந்தும், விவாகரத்து செய்து பாண்டியன் விரட்டியிருந்த அவருடைய முன்னாள் மனைவியிடமிருந்தும் கொலை மிரட்டல் வந்ததால் பாதுகாப்புக்காக தாதாக்களை அணுகினார். செல்வம் பொறுப்பேற்றுக் கொண்டு அதற்கு ஈடாகக் கல்குவாரிகளைப் பெற்றார். இந்நிலையில் 1995-இல் பாண்டியன் அவருடைய வீட்டிலேயே கொல்லப்பட்டார்.

செல்வத்துக்கும் பூவை மூர்த்திக்கும் கொள்ளையடித்த சொத்துக்களைப் பங்கு பிரிப்பதில் பூசல் வந்ததும் செல்வம் புதிய தமிழகத்தில் இணைந்து பொதுச்செயலாளர்

**எண்பதுகளில் வன்னியர் சங்கம் எனும் சாதிவெறி அமைப்பை நிறுவியவர்களில் ஒருவரான பேராசிரியர் தீரன், இப்போது பகுஜன் சமாஜ் கட்சியின் முக்கியத் தலைவர். சாதி வெறியர் தீரன், பகுஜன் கட்சியில் இணைந்திருப்பது சாதியில்லாத சமுதாயம் படைக்கவா?**

ஆனார். பாண்டியன் கொலை வழக்கின் புலன்விசாரணை செல்வத்தை நோக்கி நகரவும் அப்போதைய சென்னை போலீசு கமிஷனர் காளிமுத்து மூலம், செல்வம் வழக்கை ஆறப்போட வைத்தார். 2001-இல் புது அதிகாரிகள் பொறுப்பேற்றதும் வழக்கு தூசி தட்டப்பட்டது. செல்வத்தைத் தேடிய சிறப்புப் படை அவர் தங்கி இருந்த அடுக்குமாடிக் குடியிருப்பைச் சுற்றி வளைத்தது. போலீசிடமிருந்து தப்ப மாடியிலிருந்து குதித்து கால் ஒடிந்து பிடிபட்டார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பாக கோவை தொகுதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள, அக்கட்சியின் மாநிலச் செயலாளரும் பார்ப்பன சாதியைச் சேர்ந்தவருமான ராமசுப்பிரமணியன்.



அன்னாரின் கிரிமினல் குற்றம் அப்போதுதான் தெரிந்து போல கிருஷ்ணசாமி, செல்வத்தைக் கட்சியை விட்டு நீக்கினார். அடுத்து விடுதலைச்சிறுத்தைகள் கட்சிக்குத் தாவிய செல்வம், அங்கே எம்.எல்.ஏ. பதவி வரை உயர்ந்தார். தற்போது தேசியக் கட்சியின் பண மழையில் நனைய பகுஜன் கட்சிக்கு வந்து சேர்ந்திருக்கிறார். அன்று செல்வப்பெருந்தகையைக் காப்பாற்ற பெருமுயற்சி எடுத்தவரும், அவரால் 'அங்கிள்' எனச் செல்லமாக அழைக்கப்பட்டவருமான போலீசு கமிஷனர் காளிமுத்துவும் தற்போது ஓய்வு பெற்று, இதே கட்சியில் இணைந்திருக்கிறார்.

பகுஜன் கட்சியின் தாதா கூட்டணி செல்வப் பெருந்தகையோடு முடியவில்லை, தென் மாவட்டங்களில் 80-களிலிருந்தே கூலி வாங்கிக்கொண்டு கொலை செய்வதில் தேர்ச்சிபெற்ற ஜான் பாண்டியனும் தற்போது பகுஜன் கட்சியில் ஐக்கியமாகியுள்ளார். இவர் தனது கிரிமினல் நடவடிக்கைகளுக்காகத் தண்டனை அடையாமல் தப்பித்துக் கொள்ள தலித் அரசியலைக் கவசமாகப் பயன்படுத்தி வந்தார். எல்லா கிரிமினல் அரசியல்வாதிகளும் கல்வி வள்ளல்களாக மாறியபோது அண்ணனும் மருந்தியல் கல்லூரி கட்டி வள்ளலாகவும் மாறி இருந்தார். கூலிக்காக செய்த குற்றம் ஒன்று நிரூபிக்கப்பட்டு அன்னார் இப்போது ஆயுள்கைதியாக உள்ளதால், அண்ணனின் மனைவி ஜெசிந்தா தற்போது பகுஜன் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கூலிப்படை கிரிமினல்கள், சாதிவெறியர்கள், திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகள் - இவர்களுடன் பார்ப்பனர்களும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகளும் சேர்ந்து அமைத்திருக்கும் இந்த சர்வஜன பொறுக்கிக் கும்பல், பாடையில் வைக்க வேண்டிய பார்ப்பனியத்துக்கு மறு உயிர் தந்து நாட்டை மீண்டும் படுகுழிக்குள் தள்ளும் நோக்கத்துடன் களத்துக்கு வந்துள்ளது.

இந்தக் கும்பலை அம்பலப்படுத்தி முறியடிப்பதில்தான் கோடானுகோடி ஒடுக்கப்பட்டோரின் விடுதலை அடங்கி யுள்ளது.

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

# குசேலன் குபேரனான கதை

## சி.பி.எம். கட்சிக்குக் கோடிக்கணக்கில் சொத்து குவிந்தது எப்படி?

சி.பி.எம். என்பது ஒரு கட்சியல்ல; அதுவொரு முதலாளித்துவக் கம்பெனி. கம்பெனி என்றால் அதற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கும். ஆண்டுதோறும் சொத்து விவரங்களைத் தணிக்கை செய்து, வருமான வரி அலுவலகத்துக்குச் சட்டப்படி தாக்கல் செய்யும். சி.பி.எம். கம்பெனியும் இப்படி ஆண்டுதோறும் சொத்துக் கணக்கைத் தாக்கல் செய்து வருகிறது. கடந்த 2006 மார்ச் 31-ஆம் தேதி முடிய உள்ள நிதியாண்டில் சி.பி.எம். கம்பெனியின் மொத்த சொத்து மதிப்பு ரூ. 77.27 கோடிகளாகும்.

இழப்பதற்கு ஏதுமில்லாத தொழிலாளி வர்க்கத்தின் கட்சி; பஞ்சைப் பராரிகளின் கட்சி; சொத்துடைமை முறையை ஒழித்து சோசலிசத்தைப் படைக்கப் போவதாகக் கூறிக் கொள்ளும் கட்சி - இப்படிப்பட்ட கட்சிக்கு கோடிக்கணக்கில் சொத்துக்களா என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் அதுதான் உண்மை. முதலாளித்துவ கம்பெனிகளின் சொத்து நாள்தோறும் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி, பல்கிப் பெருகுவதைப் போல, சி.பி.எம். கம்பெனியின் சொத்து மதிப்பும் பல மடங்கு அதிகரித்துள்ளது.

சி.பி.எம். கம்பெனி தாக்கல் செய்துள்ள கணக்கு விவரங்களின்படியே, 2002 மார்ச்சில் அதன் சொத்து மதிப்பு ரூ. 38.4 கோடி. நான்காண்டுகளில் இச்சொத்து இருமடங்காக அதிகரித்துள்ளது. கட்சிக்கு நன்கொடைகள் மூலமாகவும் உறுப்பினர்கள் கட்சிக்கு மாதந்தோறும் செலுத்தும் தொகை (லெவி) மூலமாகவும் இப்படி சொத்து அதிகரித்துள்ளதாக சி.பி.எம். கம்பெனி கணக்கு காட்டுகிறது.

2001-02 நிதியாண்டில் இக்கம்பெனிக்கு நன்கொடை மூலம் கிடைத்த தொகை ரூ. 8.69 கோடி. இது 2004-05 இல் ரூ. 12.89 கோடியாக உயர்ந்தது. 2005-06-இல் இது திடீரென ரூ. 17.89 கோடியாகியுள்ளது. அதாவது, நான்காண்டு காலத்தில் நன்கொடை வரவு இருமடங்காக அதிகரிக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் இக்கட்சிக்கு அள்ளிக் கொடுத்துள்ளார்களாம்! இதுவொருபுறமிருக்க, கட்சி உறுப்பினர்கள் கட்சிக்கு மாதந்தோறும் செலுத்தும் தொகை (லெவி) மூலமாகவும் சி.பி.எம். கம்பெனியின் சொத்து அதிகரித்துள்ளது. 2001-02 நிதியாண்டில் கட்சிக்கு லெவி மூலமாகக் கிடைத்தத் தொகை ரூ. 6.17 கோடி. 2005-06 இல் இது ஏறத்தாழ மூன்று மடங்கு — அதாவது, ரூ. 16.77 கோடியாக அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக, 2005 மார்ச் 31-ஆம் தேதியிலிருந்து 2006 மார்ச் 31-ஆம் தேதி வரையிலான ஓராண்டு காலத்தில் லெவி வருவாய் 30% அதிகரித்துள்ளது.

இப்படி லெவி வருவாய் அதிகரிக்கிறது என்றால், சி.பி.எம். கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் சி.பி.எம். கட்சி ஆவணங்களின்படி, 2004 முதல் 2006 வரையிலான காலத்தில் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 13% தான் அதிகரித்துள்ளது. அப்படியிருக்க லெவி வருவாய் அதிகரித்தது எப்படி?

கட்சியானது, கட்சி உறுப்பினர்களுக்கான லெவி தொகையை உயர்த்தியிருந்தால், லெவி வருவாய் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆனால், அண்மைக்காலங்களில் கட்சியானது அப்படி லெவித் தொகையை அதிகரித்துள்ளதாக எந்த அறிவிப்பும் செய்யவில்லை. அப்படியிருக்க, கட்சிக்கு லெவி மூலம் கிடைக்கும் தொகை அதிகரித்தது எப்படி? தொழிலாளிகள் - விவசாயிகள் ஆகிய வர்க்கங்களிலிருந்து அல்லாமல், நடுத்தர-குட்டி முதலாளித்துவ வர்க்கங்களிலிருந்து வந்தவர்கள் சி.பி.எம் கட்சிக்குள் அதிகரித்திருப்பதாலேயே, கட்சிக்கு லெவி வருவாயும் அதிகரித்துள்ளது.

தொழிலாளிகள் - விவசாயிகள் என்றால் அவர்களுக்கு வருமானம் குறைவு. இதனால் அவர்கள் கட்சிக்குச் செலுத்தும் லெவித் தொகையும் குறைவான அளவில்தான் இருக்கும். இதற்கு மாறாக, நடுத்தர வர்க்கத்தினர், சிறுமுதலாளிகள், ஒப்பந்தக்காரர்கள், கந்து வட்டிக்காரர்கள் முதலானோர் சி.பி.எம். கட்சிக்குள் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளதாலேயே, வருமானம் அதிகமுள்ள அவர்கள் செலுத்தும் லெவித் தொகையும் உயர்ந்து, மொத்தத்தில் கட்சியின் லெவி வருவாய் அதிகரித்துள்ளது. சி.பி.எம். கட்சியின் லெவி வருவாய் கணக்கு விபரமே, அக்கட்சியின் வர்க்கத் தன்மையை நிரூபித்துக் காட்டுகிறது.




சொத்து மதிப்பைக் குறைத்துக் காட்டி, வருமான வரி அலுவலகத்துக்கு தாக்கல் செய்வதற்கென்று ஒரு கணக்கு; பல்வேறு பினாமி பெயரில் சொத்துக்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு தனியாக ஒரு கருப்புப் பணக்கணக்கு என்று முதலாளித்துவக் கம்பெனிகள் மோசடி செய்வது வாடிக்கை. சி.பி.எம். என்பதும் அத்தகையதொரு கம்பெனி அல்லவா? அதனால்தான், எங்களிடம் ரூ. 77.27 கோடி சொத்து மட்டும் தான் இருக்கிறது என்று வருமானவரி அலுவலகத்துக்கு ஒரு கணக்கு காட்டி விட்டார்கள். மற்ற சொத்து விவரங்களை திறமையாக மூடி மறைத்து வருகிறார்கள்.

கேரளாவில், கிறித்துவ திருச்சபைகளுக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய கோடீசுவர நிறுவனம் சி.பி.எம். கம்பெனி தான் என்று ஏற்கெனவே பத்திரிகைகள் அம்பலப்படுத்தியுள்ளன. "கைரளி" தொலைக்காட்சி அலைவரிசை, மலப்புரம் மாவட்டத்தில் ஐந்து நட்சத்திர மருத்துவமனை, தலைச்சேரியில் ஒரு பேரங்காடி (ஹைப்பர் மார்க்கெட்), தகவல்-தொழில்நுட்ப மையம், ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களின் சொத்துக்கள், பெருநகரங்களில் வீட்டுமனைகள், இதுதவிர கண்ணனூர்



படிப்பகம்

www.padippakam.com




மாவட்டத்தில் உலகத் தரமிக்க பலகோடி செலவிலான தண்ணீர் விளையாட்டு - கேளிக்கைப் பூங்கா என கோடீசுவர கம்பெனியாக சி.பி.எம். கட்சி வளர்ந்துள்ளது. கேரளாவில் மட்டும் சி.பி.எம். கம்பெனியின் சொத்து மதிப்பு ரூ. 4,000 கோடிகளுக்கும் மேலாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. கேரளாவில் சி.பி.எம்.இன் உள்ளூர் கட்சிக் கமிட்டிகள் கூட பல கோடி ரூபாய் சொத்துக்களைக் கொண்டுள்ளன. கேரளாவில் அச்சுதானந்தன் கோஷ்டிக்கும் பினாரயி விஜயன் கோஷ்டிக்குமிடையே இச்சொத்துக்களை அனுபவிப்பதற்காகவே குழுச் சண்டைகள் பகிரங்கமாக நடக்கின்றன.

இதுதவிர, தலைநகர் டெல்லியில் கூட சி.பி.எம். கம்பெனி அண்மையில் கோடிக்கணக்கில் சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளது. ஏற்கெனவே டெல்லியின் கோலே மார்க்கெட் பகுதியில் பலகோடி மதிப்பிலான அடுக்குமாடி கட்டிடமான கட்சி அலுவலகத்தை (ஏ.கே.ஜி. பவன்) சி.பி.எம் கம்பெனி வைத்துள்ளது. இதுதவிர, ரவுஸ் அவென்யூ பகுதியில் சி.ஐ.டி.யு. தொழிற்சங்க அலுவலகத்துக்கென பல கோடி மதிப்பிலான அடுக்குமாடி கட்டிடத்தையும் வைத்துள்ளது. இவையும் போதாதென்று, அண்மையில் தீனதயாள் சதுக்கம் பகுதியில் 2850 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தை வாங்கியுள்ளது. இது ரூ. 45-50 கோடி மதிப்புடையது.

முதலாளிகள் சூறையாடுவதற்கு மட்டுமின்றி, ஓட்டுக் கட்சிகளும் பொறுக்கித் தின்பதற்கு ஏராளமான வாய்ப்புகளையும் சட்டரீதியான ஏற்பாடுகளையும் நாடாளுமன்ற மோசடி ஜனநாயகம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. அரசு சட்ட விதிகளின்படி, ஒரு ஓட்டுக் கட்சி 50 முதல் 100 வரையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருந்தால், ஒரு ஏக்கர் (ஏறத்தாழ 4000 சதுர மீட்டர்) அரசாங்க நிலத்தை சலுகை விலையில் பெற முடியும். சி.பி.எம். கட்சியிடம் போதுமான அளவுக்கு எம்.பி.க்கள் உள்ளதால் டெல்லி - தீனதயாள் சதுக்கத்திலுள்ள 2850 சதுரமீட்டர் பரப்பளவுள்ள நிலத்தை ரூ. 60 லட்சத்துக்கு வாங்கியுள்ளது. உண்மையில் இந்த நிலத்தின் மதிப்பு ரூ. 45-50 கோடிகள் என்றும், காங்கிரசு கூட்டணி அரசுக்கு ஆதரவளித்து சி.பி.எம். கட்சியினர் காரியத்தைச் சாதித்துக் கொண்டுள்ளார்கள் என்றும் டெல்லி பத்திரிகைகளே உண்மைகளைப் போட்டு உடைத்துள்ளன.

இப்படி கட்சியே கோடீசுவர கம்பெனியாகி விட்ட பிறகு, அக்கட்சி நிறுத்தும் நாடாளுமன்ற வேட்பாளர்கள் பலரும் இலட்சாதிபதிகளாக - கோடீசுவரர்களாகவே வலம் வருகிறார்கள். கர்நாடகத்தில் குல்பர்கா தொகுதியில் போட்டியிடும் மாருதி மனபடா என்ற சி.பி.எம். வேட்பாளரின் சொத்து மதிப்பு ரூ. 20 இலட்சமாம்! கடந்த நான்காண்டுகளில் இவரது சொத்து மதிப்பு 7393% அதிகரித்துள்ளது என்று வேட்பாளர்களின் முக விலாசத்தை அம்மாநிலப் பத்திரிகைகளே அம்பலப்படுத்தியுள்ளன.

கோடீசுவர முதலாளித்துவக் கம்பெனிகள் தமது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொண்டு ஆதிக்கம் செய்ய குண்டர் படைகளைக் கட்டியமைத்துக் கொண்டு போராடும் உழைக்கும் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கின்றன. அதேபோல கோடீசுவர சி.பி.எம். கம்பெனியும் குண்டர்படையைக் கட்டியமைத்துள்ளது. சிங்கூர் - நந்திகிராம் மட்டுமல்ல; அண்மையில் லால்காரில் உழைக்கும் மக்கள் மீது அது நடத்தி வரும் தாக்குதல்களே இந்த உண்மையை நிரூபித்துக் காட்டுகிறது.

இப்படி கோடீசுவரர்களையும், குண்டர்கள் - கிரிமினல்களையும், பிழைப்புவாதிகளையும் அணிகளாகக் கொண்டுள்ள

**கேரளாவில் உள்ள கிறித்துவ திருச்சபைகளுக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய கோடீசுவர நிறுவனமான சி.பி.எம். கம்பெனியின் சொத்து மதிப்பு ரூ. 4,000 கோடிகளுக்கும் மேலாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.**

கோடீசுவர சி.பி.எம். கட்சி, ஏழை மக்களுக்குப் பாடுபட்டு புரட்சி செய்யப் போகிறதாம்! நீங்களும் ஒரு முதலாளித்துவ காம்ரேடாக - கோடீஸ்வர கம்யூனிஸ்டாக விரும்பினால், சி.பி.எம். கம்பெனியில் சேர்ந்து புர்ர்ரட்சி செய்யலாம். இத்துரோகக் கும்பலை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான மகத்தான புரட்சிப் போரில் பங்கேற்க விரும்பினால், நீங்கள் உண்மையான கம்யூனிசப் புரட்சியாளர்களுடன் அணிவகுக்கலாம்.

நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

• குமார்



படிப்பகம்

www.padippakam.com

# கோடீசுவர வேட்பாளர்கள் கோவணத் துணியோடு மக்கள்

## இந்த முரண்பாட்டை விமர்சிக்காதவர்கள் யாராவது உண்டா? ஆனால், இதற்கு மாற்று என்ன என்பதுதான் நம் முன்னுள்ள சவால்!

மதுரை நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மு.க. அழகிரி, ''தி.மு.க. கூட்டணி வேட்பாளர் அழகிரி வந்திருக்கேன், எனக்கு ஓட்டுப் போடுவீங்களா?'' என்று அழகம்மா என்ற வாக்காளரிடம் கேட்க, அவரோ ''நாங்க ஓட்டுப் போடுவோம் நீங்க எப்ப நோட்டைப் போடுவீங்க?'' என்று எதிர்கேள்வி கேட்டிருக்கிறார். இந்தியத் தேர்தலில் பண நாயகம் பல்லிளிப்பதைக் காட்டும் ஒரு சோற்றுப் பதம் இது.

தேர்தலில் வாக்குறுதிகளைக் கொடுத்த காலம் போய், கொள்ளையடிப்பதில் மக்களுக்கும் பங்காக 'இலவசங்கள்' கொடுத்த காலமும் போய், ஒரு ஓட்டுக்கு இவ்வளவு ரூபாய், எங்க வீட்டில் இவ்வளவு பேர், இவ்வளவு ரூபாய் கொடுங்கள் என வாக்காளர்களே, வேட்பாளரைத் தேடிச் செல்லும் புதிய தொரு பரிணாமத்தை இந்தியத் தேர்தல் களம் தொட்டுள்ளது. திருமங்கலம் இடைத்தேர்தல் தந்த படிப்பினையில் வாக்காளர்கள் இவ்வாறு விழிப்படைந்திருப்பதால், அதற்கேற்ப அரசியல் கட்சிகளும் தங்களது வேட்பாளர் பட்டியலையும், தேர்தல் பட்ஜெட்டையும் தயாரித்துள்ளன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பார்த்தாலே இது புரிந்துவிடும். தி.மு.க. சார்பில் ஸ்ரீபெரும்புதூரில் போட்டியிடுபவர் திரைகடல் ஓடி திரவியம் தேடிய டி.ஆர்.பாலு. மன்மோகன் அரசில், கப்பல் போக்குவரத்துத் துறையின் அமைச்சராக 'உழைத்துச் சேர்த்த' பணத்தைக் கொட்டியிறைத்து எந்தத் தொகுதியையும் தேர்தல் சமயத்தில் வளமாக்கக் கூடியவர் என்பதால், அன்னாருக்கு எல்லாத் தொகுதியிலும் வெற்றி வாய்ப்பு அதிகம்.

அடுத்தது, மத்திய சென்னை வேட்பாளர் தயாநிதி மாறன். சன் டி.வி., தினகரன் பத்திரிக்கை எனப் பெரும் ஊடகங்களைக் கையில் வைத்துக் கொண்டு தி.மு.க.வையே ஒரு கலக்கு கலக்கியவர். ஊடக பலமும் பண பலமும் ஒருங்கே அமைந்த இவரது வளர்ச்சி கண்டு கருணாநிதியின் குடும்பமே கதிகலங்கிப் போனது. இந்தக் கலக்கத்தின் விளைவாகக் கல்லாக் கட்டிய ஸ்பெக்ட்ரம் புகழ் ராசாவோ நீலகிரி தொகுதியில் நிற்கிறார்.

தி.மு.க.வின் தென்மாவட்டத் தளபதி, கட்டப்பஞ்சாயத்து புகழ், அஞ்சா நெஞ்சன் அழகிரி மதுரைத் தொகுதி வேட்பாளர். இவர் தங்களது தொகுதியில் நிற்கிறார் எனக் கேள்விப்பட்டதும், மதுரையே திருமங்கலமாக மாறிவிட்டதாக உடன் பிறப்புகள் கொண்டாடினர். எதிர்க் கட்சிகள் பீதியில் உறைந்திருக்க, அன்னாரோ சிறிதும் கூச்சமின்றி எதிர்க்கட்சியினரால் தனக்கு ஆபத்து எனத் தேர்தல் கமிசனிடம் மனுக் கொடுத்திருக்கிறார்.

இம்முறை தி.மு.க. சார்பில் இரண்டு சினிமா நடிகர்கள் போட்டியிடுகின்றனர். தகவல் தொழில்நுட்ப நிறுவனம் நடத்திக்கொண்டு டாலர்களில் புரளும் மாவீரன் நெப்போலியன் பெரம்பலூர் தொகுதியிலும், தான் நடித்த சினிமாக்களுக்கு 'நூறு' ரூபாயும், பிரியாணியும் தந்து ரசிகர்களைத் திரையரங்குக்கு வரவழைக்கும் அளவிற்கு 'சேர்க்கப்பட்ட' பணத்தை அள்ளி இறைத்திட்ட 'வீரத் தளபதி', 'வள்ளல்' ஜெ.கே ரித்தீஸ் ராமநாதபுரம் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள். கந்து வட்டி பினாமியான ரித்தீஸ், தனது தொகுதிக்கு மட்டும் செலவு செய்யாமல், தென்மாவட்டங்களின் அனைத்துத் தொகுதிகளுக்கும் பணம் கொடுப்பதாகவும், தான் வெற்றி பெற்றால் தி.மு.க. ஒன்றியச் செயலாளர்கள் அனைவருக்கும் அவர்கள் பெயரிலேயே கார் வாங்கித் தருவதாகவும் வாக்களித்துள்ளார்.

இவர்கள் மட்டுமன்றி, கல்லூரிகள் கட்டிக் கல்லா கட்டிக் கொண்டிருக்கும் ஜெகத்ரட்சகன், தமிழகம், கர்நாடகம் என மாநிலம் கடந்து கல்வித் தொழில் நடத்தும் தம்பித்துரை, நிலக்கரி ஊழல் புகழ் ராஜ கண்ணப்பன், பா.ம.க.வின் 'மாவீரன்' காடு வெட்டி குரு என அனைத்துக் கட்சிகளிலும் உள்ள ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல் குற்றவாளிகள், கந்து வட்டி, கருப்புப்

தி.மு.க. சார்பில் கோதாவில் இறங்கியுள்ள கோடீசுவர வேட்பாளர்கள் (இடமிருந்து) மு.க. அழகிரி (மதுரை), ஜெ.கே. ரித்தீஸ் (இராமநாதபுரம்), ஜெகத்ரட்சகன் (அரக்கோணம்) மற்றும் தயாநிதி மாறன் (மத்திய சென்னை).





படிப்பகம்

www.padippakam.com

பணப் பினாமி பேர்வழிகள் அனைவரும் இந்தத் தேர்தலில் களம் காணுகின்றனர்.

தேர்தலில் நின்று பொறுக்கித் தின்ன வேண்டுமா? வெறும் ஐந்து கோடியிருந்தால் போதும்; எங்கள் கட்சியின் சார்பில் நில்லுங்கள் என விளம்பரம் செய்யாத குறையாக எல்லாக் கட்சிகளும் கூவியழைக்கின்றன. கல்வி வியாபாரத்தைப் போன்று தேர்தல் வியாபாரமும் படுஜோராக நடைபெறுகிறது.

•••

தேர்தலில் வெற்றி பெறுவதற்காகப் போட்டியிடுவது என்றில்லாமல், ஓட்டுக்களைப் பிரிப்பதற்காகப் பணம் வாங்கிக் கொண்டு போட்டியிடும் பினாமி அரசியலை, ஒரு கிளைத் தொழிலாகவே, தே.மு.தி.க. உருவாக்கியுள்ளது. காங்கிரசின் பினாமியாக தேர்தலில் நின்று ஓட்டுக்களைப் பிரிப்பதற்குக் கூலியாக வாங்கிய பணத்தில் தனது பல கோடி கடனை அடைத்தது தே.மு.தி.க., தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் 21 தொகுதிகளில் போட்டியிட ஆள்தேடிக் கொண்டிருந்த போது, 40 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துச் சூடு கிளப்பினார், விஜயகாந்த். நாற்பது தொகுதிக்கும் வேட்பாளருக்கு இவர் எங்கே போவார்? என்னதான் கடவுளுடன் கூட்டணி கட்டினாலும் தேர்தல் செலவுக்கு உண்டியலிலா கை வைக்க முடியும்? யாரிடம் கையேந்துவார்? எனத் தமிழகமே எதிர்பார்த்திருந்தது.

தேர்தலில் முதலீடு செய்யுமளவுக்கு பணம் உள்ளவர் யாராயிருந்தாலும், எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களுக்கு தே.மு.தி.க. சார்பில் போட்டியிட வாய்ப்பு உறுதி என அறிவிக்காத குறையாக, கல்வித் தந்தைகளையும், ரியல் எஸ்டேட் தரகர்களையும், தரகு முதலாளிகளையும் வேட்பாளர்களாக தே.மு.தி.க. நிறுத்தியுள்ளது. மாஃபா எனும் நிறுவனத்தின் மூலம் வெளி நாட்டு, உள் நாட்டு நிறுவனங்களுக்கு ஆளனுப்பும் உலகமயத் தரகர் 'மாஃபா' பாண்டியராஜன் தே.மு.தி.க. சார்பில் விருதுநகரில் போட்டியிடுகிறார்.

திண்டுக்கல்லில் இக்கட்சியின் வேட்பாளரான முத்துவேல் ராஜு, உலகமயத்தினால் பலனடைந்து பெரும் பணக்காரரானவர். சென்னையிலும் அமெரிக்காவிலும் கணிணி மென்பொருள் தொழிலுக்கு ஆட்களைப் பிடித்து அனுப்பித் தரகு வேலை பார்க்கும் இவர், அமெரிக்கத் தேர்தலில் ஜனநாயகக் கட்சிக்கே நன்கொடை தரும் அளவிற்கு 'முன்னேறியவர்'. தமிழகத்தில் சுயநிதிக் கல்லூரிகள் கட்டி தே.மு.தி.க. மூலம் மக்களுக்குச் சேவை(!) செய்ய தற்போது களமிறங்கி இருக்கிறார், முத்துவேல் ராஜு.

ஆஸ்திரேலியாவில் படித்து திருப்பூரில் ஏற்றுமதி நிறுவன அதிபராகவும் ரியல் எஸ்டேட் முதலையாகவும் இருக்கும் தினேஷ்குமார் திருப்பூர் தொகுதியிலும்; மினரல் வாட்டர் நிறுவனம்-ரியல் எஸ்டேட் தொழிலதிபர் ஆரணி தொகுதியிலும்; மும்பையில் தொழில்நிறுவனம் நடத்தி, சென்னையில் சினிமா தயாரிக்கும் அளவிற்கு உயர்ந்திருக்கும் ராயப்பன் நெல்லை தொகுதியிலும் தே.மு.தி.க. சார்பில் நிற்கிறார்கள். ஆசியாவின் பெரும் பணக்காரரான தயாநிதியை எதிர்கொள்ள தே.மு.தி.க. நிறுத்தியுள்ள ராமகிருஷ்ணனோ, பல தொழில் நிறுவனங்களின் ஆலோசகர். தனியாக ஏற்றுமதி நிறுவனம் நடத்துபவர்.

ரியல் எஸ்டேட் தரகர்கள் துரை காமராஜ், தமிழ் வேந்தன், மகா.முத்துக்குமார், தொழிலதிபர்கள் ஆர்.பாண்டியன், பனியன் ஏற்றுமதி தொழிலதிபர் சண்முகசுந்தரம் எனத் தேர்தலில் முதலீடு செய்து பணம் சேர்க்க ஒரு படையே தே.மு.தி.க.வில் திரண்டுள்ளது.



**171 கோடி ரூபாய் பெறுமான ரியல் எஸ்டேட் மோசடி வழக்கில் சி.பி.ஐ.ஆல் விசாரிக்கப்பட்டு வரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வேலாயுதம் விழுப்புரம் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின் கருணாநிதியிடம் ஆசி பெறும் திருக்காட்சி.**

•••

வேட்பாளர் அறிவிப்பிலேயே தேர்தல் ஜனநாயகம் துகிலுறிந்து நிற்க, அதன் மானம் காக்கும் கலியுகக் கண்ணனாக அவதாரமெடுத்திருக்கிறது, தேர்தல் கமிசன். தேர்தல் நடத்தை விதிகள் என்று புதிதாக எதையாவது இவர்கள் அறிவிப்பார்கள், உடனே அதனை அனைத்து ஓட்டுக் கட்சிகளும் எதிர்ப்பார்கள், பிறகு தேர்தல் கமிசனின் மிரட்டலுக்குப் பயந்து அனைத்துக் கட்சியினரும் அடிபணிவார்கள். இப்படிப் பிரமாதமான நாடகக் காட்சிகள் வரிசையாக அரங்கேறுகின்றன.

இந்தத் தேர்தல் கமிசனால் எதையும் கிழிக்க முடியாதென்பதை, திருமங்கலம் இடைத்தேர்தலில் பார்த்தோம். ரொக்கப் பணம், மொபைல் போன், விசிடி பிளேயர் என வாக்காளர்களை விழுந்து விழுந்து கவனித்ததை இவர்கள் பார்த்துக் கொண்டு சும்மாதான் நின்றார்கள். நடத்தை விதிகள், நடவடிக்கைகள் என்று திரைப்படத்தில் இடையிடையே வரும் நகைச்சுவைக் காட்சிகளை மிஞ்சும் இவர்களது மிரட்டலையும், அதற்குக் கட்டுப்படுவது போல நடிக்கும் வேட்பாளர்களின் திறமையையும் பார்த்து கோடம்பாக்கத்து வடிவேலே அசந்து போவார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தனது சொத்துக் கணக்கை ஒப்படைக்க வேண்டும் என்ற விதிமுறை, எந்தப் பொருளாதார வீழ்ச்சியும் இதுவரைச் சாதிக்க முடியாததைச் சாதித்துள்ளது. பரம்பரைப் பணக்காரர்களையும், பல கோடிகளுக்கு அதிபதிகளையும் ஒரே இரவில் ஏதுமற்ற ஏழைகளாய் மாற்றிய சாதனையை அது செய்துள்ளது. இப்படி ஏழையானவர்களிலேயே 'அன்னை' சோனியாவுக்குத்தான் முதலிடம். இவரது மொத்த சொத்தின் மதிப்பு வெறும் 18 லட்ச ரூபாய் மட்டும்தான். சொந்தமாக வீடு வாசலோ, காரோ கூட கிடையாது. அன்னைதான் இப்படியென்றால், அவரது மகன் ராகுல் காந்தியோ 23 லட்சம் கடனாளியாக நிற்கிறார். மிகப்பெரிய கோடீஸ்வர நேருவின் குடும்பத்தினர், காலம் காலமாக மக்க



படிப்பகம்

www.padippakam.com

ளுக்குச் 'சேவை' செய்து, இன்று பரம ஏழைகளாகக் களத்தில் நிற்கின்றார்கள்.

காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து மக்களுக்குத் தொண்டாற்றுவதன் மூலம் தனது சொத்தே அழிந்தாலும் பரவாயில்லை எனச் 'சத்தியம்' செய்து களத்தில் இறங்கியுள்ளார் ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி. இவர் சென்றமுறை காட்டிய சொத்துக் கணக்கைவிட இம்முறை காட்டிய சொத்துக்கணக்கு குறைவாயிருப்பதே அந்த 'சத்தியத்தின்' சாட்சி.

ஆந்திரத்தின் முன்னாள் முதல்வரும், ஏழைகளின் தோழனுமான சந்திரபாபு நாயுடு, 13 கோடி ரூபாய் சொத்து வைத்திருந்தாலும், தனக்கென ஒரே ஒரு அம்பாசிடர் கார் மட்டுமே வைத்துள்ள எளிமையின் சிகரம்.

15 லட்ச ரூபாய் செல்பேசி, 5 லட்ச ரூபாய் கைக்கடிகாரம், 25,000 மதிப்புள்ள காலணிகள், கிலோக்கணக்கில் தங்கம், வெள்ளி, கர்நாடகா முழுவதும் சொத்துக்கள் என ராஜாங்கம் நடத்தி வருகிறார், பா.ஜ.க.வின் வேட்பாளர் குருடப்பா நாகமரபள்ளி.

விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் முதலில் களமிறக்கப்பட்டு பின்பு விலக்கிக் கொள்ளப்பட்ட வேலாயுதம் 171 கோடி நில மோசடி செய்த வழக்கில் சி.பி.ஐ.ஆல் விசாரிக்கப்படும் குற்றவாளி. இந்தியாவிலேயே அதிகளவு சொத்துக் கணக்குக் காட்டியுள்ள வேட்பாளர் ஆந்திராவின் லகடபதி ராஜகோபால். இவர் கணக்கு காட்டியுள்ளது மட்டும் 299 கோடிகள்.

ராமன் ஆண்டாலும், ராவணன் ஆண்டாலும் என் கட்சிக்கு இரண்டு நிரந்தர மந்திரி பதவி மட்டும் போதும் என்ற உயரிய கொள்கையுடன், தொடர்ந்து மத்திய அரசில் பங்கெடுத்து வருகிறது பா.ம.க. பா.ம.க.வின் ஆர். வேலு ரயில்வே அமைச்சராக இருந்து தன்னை செழுமைப்படுத்திக் கொண்டார். ராமதாசின் அருந்தவப் புதல்வன் பின்வாசல் பேர்வழி அன்புமணி தேர்தலிலேயே நிற்காமல், ராஜ்யசபா மூலம் சுகாதாரத்துறை மந்திரியாகி 'எவ்வளவு' முடியுமோ அவ்வளவு சேவை செய்தார். இந்த தேர்தலிலும் இதே உயரிய கொள்கையை நடைமுறைப்படுத்த ராமதாசின் பா.ம.க. முதலீடு செய்து களம் இறங்கியுள்ளது.

இந்திய மக்களில் 77% பேர் ஒருநாளைக்கு ரூபாய் 20-இல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் நாட்டில், பத்து ராஜ்யசபை உறுப்பினர்கள் கணக்குக் காட்டியுள்ள அவர்களின் மொத்த சொத்து மதிப்பு 1,500 கோடி ரூபாய் என்று ''இந்தியா டுடே'' பத்திரிகை நடத்திய ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. பொய்க் கணக்கில் கூட ஏழைகளாக வேசம் கட்ட முடியாத அளவுக்கு சொத்துக் குவித்துள்ள, பண முதலைகளும், திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளும் தேர்தல் கமிசனால் ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் தங்களது சொத்துக் கணக்கை குறைத்துக் காட்டியுள்ளனர்.

அரசியல் அநாதைகளாகிப்போன சமத்துவ நாயகன் சரத், நடிகர் கார்த்திக் எல்லாம் ஒருவருக்கொருவர் ஆறுதலாக கூட்டுச் சேர்ந்து மொத்தமாக ஒரு ரேட்டுக்கு பேரம் பேசி வருகிறார்கள். இவர்களுக்கும், புதிய தமிழகம் கிருஷ்ணசாமி போன்றவர்களுக்கும் தமிழகத்தில் ஓரங்கட்டப்பட்ட பா.ஜ.க. ஆதரவளித்து வருகிறது. சமத்துவ நாயகன் சரத்திடம் ஒரு கோடி பேரம் பேசியது பா.ஜ.க., தொகுதிக்கு ஒரு கோடியா என்று வாயைப் பிளந்த நாட்டாமையை, மொத்தமாகவே ஒரு கோடிதான் என்று வாயடைத்தது பா.ஜ.க. கிடைத்த வரை அமுக்கலாம் என்று கமுக்கமாக ஒத்துக் கொண்டார், ''மிஸ்டர்'' சமத்துவம்.

> **கட்சிகளெல்லாம் கார்ப்பரேட் நிறுவனங்களாகவும், வேட்பாளர்களெல்லாம் அதன் முதலீட்டாளர்கள் போலவும், தேர்தலே ஒரு தொழிலாகவும் பரிணாமம் அடைந்துள்ளது**

எல்லாக் கட்சியும் இவ்வாறு பணநாயகத்தில் மூழ்கி இருந்தாலும் சி.பி.எம். கட்சி மட்டும் எளிமை என யாரும் எண்ணிவிட வேண்டாம். மதுரை மோகனும், நாகர்கோவில் பெல்லார்மினும் ஐந்தாண்டுகளாக நாடாளுமன்றத்தின் பல்வேறு நிலைக் குழுக்களில் பதவியில் இருந்தவர்கள்தான் .

பெரும் தொழில்நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் கருப்பட்டிப்பானைதான் இந்த நிலைக்குழுக்கள் என்பதும், சி.பி.எம். உறுப்பினர்களும் இந்தப் பானைக்குள் 5 வருடம் கைகளை வைத்திருந்தனர் என்பதும் ஆழ்ந்த 'பொருள்' கொண்டது.

தேர்தல் என்பது இன்றைக்குப் பணம் முதலீடு செய்து அபரிமிதமாக லாபம் எடுக்கும் ஒரு தொழிலாக பயன்படுகிறது என்பதைத்தான் இந்த நிலைமைகள் காட்டுகின்றன. கட்சிகளெல்லாம் கார்ப்பொரேட் நிறுவனங்களாகவும், வேட்பாளர்களெல்லாம் அதன் முதலீட்டாளர்கள் போலவும், தேர்தலே ஒரு தொழிலாகவும் பரிணாமம் அடைந்துள்ளதுதான் 60 வருட இந்தியப் போலி ஜனநாயகம் கண்ட வளர்ச்சி. அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும் ஊழல் படுத்தி முதலாளிகள் காரியம் சாதித்த காலம் போய், அரசு அதிகாரத்தில் நேரடியாக உட்கார்ந்து கொள்வதன் மூலம் தொழிலை இலாபகரமாக நடத்துவதற்காக அதிகார வர்க்கத்துடன் நெருங்குவதற்கும், தொழிலில் ஏகபோகமாக உருவாகத் தடையாக இருக்கும் விதிகளையே மாற்றிவிட நிலைக்குழுக்களில் ஒட்டிக்கொண்டு காரியம் சாதிக்கவும் தேர்தல் பயன்படுவதாலேயே தரகு முதலாளிகள் இந்தத் தேர்தலில் வகை தொகையின்றிக் களமிறங்கியுள்ளனர்.

இன்னொரு பக்கம் எந்த தொழிலும் பார்க்காமல் முதலாளிகளுக்கு அநீதியான ஒப்பந்தங்களை போட்டுக் கொடுப்பதன் மூலமும், நாட்டைக் கூட்டிக் கொடுக்கும் தரகு வேலை பார்ப்பதன் மூலமும் பல ஆயிரம் கோடிகளில் சுருட்டலாம் என்ற வாய்ப்பு சர்வ கட்சி கேடிகளையும், தரகு முதலாளிகளையும் ஒருங்கே ஈர்க்கிறது. பல கோடிகளைத் தேர்தலில் முதலீடு செய்யும் இக்கும்பல் மக்கள் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பிக் கொண்டு இனியும் ஏமாற முடியாது.

பணம் காய்ச்சி மரமாக மாறி அம்பலமாகி நிற்கும் இந்தப் போலி ஜனநாயகத் தேர்தல் முறையையும் அது உறுதிப்படுத்தும் அதிகாரவர்க்க ஆட்சியையும் ஒழித்துக் கட்டினால்தான், உண்மையான மக்கள் ஜனநாயகத்தை உருவாக்க முடியும்.

• ரகுபதி



படிப்பகம்

www.padippakam.com

# சந்தால் பழங்குடியின மக்களின் எழுச்சி: மண்டியிட்டது சி.பி.எம்.

## சமூக பாசிஸ்டுகளாக சி.பி.எம். சீரழிந்து போய் நிற்பது மீண்டும் அம்பலமாகி விட்டது.

உயர்ந்தோங்கி நிற்கும் மரங்கள் நிறைந்த அடர்ந்த காடு; அக்காட்டின் நடுவே திடீரென "டும், டும்" என முரசொலிக்க, எங்கும் எதிரொலிக்கிறது. அடுத்த சில நிமிடங்களில் வில்-அம்பு, கோடரி, அரிவாள், தடிகளுடன் பழங்குடியின மக்கள் பெருங்கூச்சலிட்டுக் கொண்டு அணிதிரள்கிறார்கள். "கொலைகாரர்கள் வந்துவிட்டார்களா? சி.பி.எம். குண்டர்கள் எங்கே?" என்று பதற்றத்தோடு நாற்புறமும் அவர்கள் தேடுகிறார்கள். முரசொலி கேட்டதும் திரண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டு அஞ்சி, அவர்கள் பின்வாங்கி ஓடி விட்டார்கள் என்று தெரிந்த பிறகு, அம்மக்கள் திரும்பிச் செல்கிறார்கள்.

"கடந்த நவம்பரிலிருந்து இப்படியொரு முன்னெச்சரிக்கை ஏற்பாட்டை நாங்கள் செய்துள்ளோம். உயர்மான மரங்களில் ஏறி, எங்களில் ஒருவர் கண்காணிப்பார். சி.பி.எம். குண்டர்களோ, போலீசோ, அரசு அதிகாரிகளோ இப்பகுதிக்குள் நுழைந்தால், உடனே அவர் முரசொலிப்பார். உடனே நாங்கள் அணிதிரண்டு அவர்களை முற்றுகையிடுவோம்" என்கிறார் சுபாஷ் மஹடோ என்ற பழங்குடியின விவசாயி.

போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தின் மித்னாபூர் மாவட்டத்தின் லால்கார் வட்டாரத்தில் உள்ள சந்தால் பழங்குடியின் மக்கள் கடந்த ஆறு மாதங்களாக போலீசு அடக்குமுறைக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருகிறார்கள். சந்தால் பழங்குடியின் மக்களின் வாழ்வாதாரமாக உள்ள இப்பகுதியிலுள்ள காடுகளை அழித்து 5000 ஏக்கர் பரப்பளவில் ஜிண்டால் எனும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனம் எஃகு ஆலை நிறுவத் தீர்மானித்துள்ளது. "மாநிலத்தின் தொழில் வளர்ச்சி" என்ற பெயரில் இப்பகுதியில் ஜிண்டால் நிறுவனத்தின் சூறையாடலுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவ போலி கம்யூனிச ஆட்சி ஏற்பாடுகளைச் செய்து வந்தது.



சி.பி.எம். குண்டர்களுக்கு எச்சரிக்கை விடுத்து, கொல்கத்தா நகரில் நடந்த பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் திரண்ட சந்தால் பழங்குடியின மக்கள்.

இதற்கெதிராக சந்தால் பழங்குடியின மக்களைப் போராட்டத்துக்கு அணி திரட்டி வந்த மாவோயிஸ்டுகள், கடந்த நவம்பர் 2-ஆம் நாளன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தி விட்டுத் திரும்பிய மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா மற்றும் மைய அரசின் அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் ஆகியோர் வாகனங்கள் மீது கண்ணி வெடித் தாக்குதல் நடத்தி எச்சரித்தனர். இத்தாக்குதலில் வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டதைத் தவிர வேறு எவருக்கும் பாதிப்பில்லை. இருப்பினும், நக்சல்பாரி பயங்கரவாதிகளுக்கு எதிரான தேடுதல் வேட்டை என்ற பெயரில் மே.வங்க போலீசு, பயங்கரவாத அடக்குமுறையை சந்தால் பழங்குடியினர் மீது கட்டவிழ்த்து விட்டது. விடிய விடிய 3 நாட்களுக்கு மே.வங்க போலீசு நடத்திய இப்பயங்கரவாத வெறியாட்டத்தால் மித்னாபூர் மாவட்டமே பீதியில் உறைந்து போனது.

அடக்குமுறையால் துவண்டு போன மக்களை நம்பிக்கையூட்டி அணிதிரட்டிய மாவோயிஸ்டுகள், 600-க்கும் மேற்பட்ட கிராமத் தலைவர்களைக் கூட்டி "போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டி"யைக் கட்டியமைத்தனர். அக்கமிட்டியின் வழிகாட்டுதலின்படி, நவம்பர் 6-7 தேதிகளில் சந்தால் பழங்குடியின மக்கள் வில்-அம்பு, கோடரி, அரிவாளுடன் 5000 பேருக்கு மேல் திரண்டு லால்கார் போலீசு நிலையத்தைச் சூறையாடி, அவர்களை அடித்து விரட்டினர். அடுத்த இரு நாட்களில் சந்தால் பழங்குடியினர் நிறைந்த மித்னாபூர், புருலியா, பங்குரா மாவட்டங்களில் எழுச்சிமிகு பேரணிகள் நடந்து, போலீசும் அரசு அதிகாரிகளும் மக்களால் துரத்தியடிக்கப்பட்டனர். இம்மூன்று மாவட்டங்களிலும் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்து, பழங்குடியின மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளும் விடுதலைப் பிரதேசங்களாக மாறின. (பார்க்க: புதிய ஜனநாயகம், டிசம்பர் 2008).

கடந்த 6 மாதங்களாக இப்பகுதிக்குள் போலீசு நுழைய முடியவில்லை. அரசு அலுவலகங்களும் செயல்படவில்லை. சிறப்


படிப்பகம்


www.padippakam.com

ஓர் பொருளாதார மண்டலத் திட்டத்தை முற்றாக ரத்து செய்ய வேண்டும்; பழங்குடியின மக்களைக் காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கிய போலீசு அதிகாரிகள் மக்கள் முன்னிலையில் தோப்புக்கரணம் போட்டு பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்; போலீசின் தாக்குதலில் படுகாயமடைந்தோருக்கு உரிய நிவாரணத் தொகை அளிப்பதோடு, பழங்குடியினர் மீதான பொய் வழக்குகளை ரத்து செய்ய வேண்டும்; புறக்கணிக்கப்பட்ட இம் மாவட்டங்களில் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் சந்தால் பழங்குடியின மக்கள் போராட்டத்தைத் தொடர்கிறார்கள்.

இப்போராட்டத்தை திசைதிருப்பி ஒடுக்கும் நோக்கத்தோடு, நந்திகிராமத்தில் நடத்திய தாக்குதலைப் போல திடீர் தாக்குதலை சி.பி.எம். குண்டர்கள் கடந்த பிப்ரவரி 2-ம் தேதி நடத்தினர். 50-க்கும் மேற்பட்ட சி.பி.எம். குண்டர்கள் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த இரு போராட்ட செயல்வீரர்கள் அடுத்த இரு நாட்களில் மாண்டு போயினர். அதைத் தொடர்ந்து சி.பி.எம் கட்சியின் உள்ளூர் தலைவர்கள் அனைவரும் இப்பகுதியிலிருந்து அடித்து விரட்டப்பட்டுள்ளனர். மீண்டும் சி.பி.எம். குண்டர்கள் திரளாக வந்து தாக்கியபோது, பழங்குடியினர் எதிர்த்தாக்குதல் நடத்தி விரட்டினர். இம்மோதலில் படுகாயமடைந்த சி.பி.எம். கட்சியின் உள்ளூர் தலைவரான நந்தலால் பால் என்பவர், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மாண்டு போனார். இப்படி அடுத்தடுத்து சி.பி.எம். குண்டர்கள் தாக்குதல் நடத்துவதால், முன்னெச்சரிக்கையுடன் இருப்பதற்காகவே பழங்குடியின மக்கள் முரசறிவிக்கும் ஏற்பாட்டைச் செய்துள்ளனர்.

இந்நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, இத்தொகுதியில் போட்டியிடும் ஓட்டுக் கட்சிகளும் வேட்பு மனுத்தாக்கல் செய்து முடித்து விட்டன. இருப்பினும் எந்த ஓட்டுக் கட்சியும் இப்பகுதியில் பிரச்சாரம் செய்து ஓட்டுப் பொறுக்க வரவில்லை. அரசு எந்திரம் முற்றாகச் செயலிழந்து விட்ட இப்பகுதியில் தேர்தலை எப்படி நடத்துவது, ஜனநாயகத்தை எப்படி நிலைநாட்டுவது என்று புரியாமல் அதிகார வர்க்கம் கையைப் பிசைந்து கொண்டு நின்றது.

ஏனெனில், பழங்குடியின மக்களை மிருகத்தனமாக ஒடுக்கிய போலீசு அதிகாரிகள் பகிரங்கமாக மக்கள் முன் தோப்புக்கரணம் போட்டு மன்னிப்பு கேட்காதவரை, இப்பகுதிக்குள் போலீசார் நுழைய பழங்குடியின மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்; போலீசாரின் துணையில்லாமல் தேர்தலை நடத்த அதிகாரிகளாலும் இயலாது; இப்பகுதியில் தேர்தலை நடத்தாவிட்டால், நாடாளுமன்ற அரசியலமைப்பு முறைக்கு அவமானம் ஏற்படும்; பின்னர், லால்கார் வழியில் நாட்டின் பலதரப்பட்ட மக்களும் போராடத் தொடங்கிவிட்டால், நாட்டின் ஒட்டுமொத்த அரசியலமைப்பு முறைக்கே ஆபத்தாகி விடும் என்று அதிகார வர்க்கம் அஞ்சியது. மறுபுறம், பழங்குடியின மக்களின் போராட்டத்தை ஒடுக்கி, போலீசைக் குவித்து தேர்தலை நடத்தினால் அது மனித உரிமை - ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதாகி, நாடெங்கும் போலி கம்யூனிச ஆட்சி கண்டனத்துக்கு ஆளாக நேரிடும்.



போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டியின் தலைவர் சத்ரதார் மஹடோ.

இதனால், தமக்கு அவப்பெயர் ஏற்படாதிருக்கும் சூழ்ச்சியோடு ''லால்கார் பகுதியில் தேர்தல் நடத்துவது பற்றி தேர்தல் கமிசன் முடிவு செய்யும்; அம்முடிவின்படி மாநில அரசு செயல்படும்'' என்று போலி கம்யூனிச ஆட்சியாளர்கள் அறிவித்தனர். தேர்தலை நடத்த போலீசைக் குவித்து அடக்குமுறையை ஏவினால், இதற்குத் தாங்கள் காரணம் அல்ல என்றும், தேர்தல் கமிசன்தான் இதற்கு உத்தரவிட்டது என்றும் கூறி தப்பித்துக் கொள்ளும் ஏற்பாடுதான் இது. ஆனால், தேர்தல் கமிசனோ, சட்டம்-ஒழுங்கைக் கையாள வேண்டியது மாநில அரசின் பொறுப்பு என்றும், தேர்தலை நடத்துவது மட்டும்தான் தமது வேலை என்றும் கூறிவிட்டது.

இருப்பினும், லால்கார் கொந்தளிப்பான பகுதியாக இருப்பதால், சுமுகமாகத் தேர்தலை நடத்த தேர்தல் கமிசன்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உபதேசித்த போலி கம்யூனிச ஆட்சியாளர்கள் மறுபுறம், நந்திகிராம வழியில் சி.பி.எம். குண்டர் படையைக் கொண்டு லால்கார் பழங்குடியின மக்கள் மீது தாக்குதல் நடத்தவும், அதைத் தொடர்ந்து போலீசார் உள்ளே நுழைந்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடவும் சதிச் செயல்களில் இறங்கினர். இதன்படியே ஏப்ரல் 2-ஆம் தேதியன்று 50-க்கும் மேற்பட்ட சி.பி.எம் குண்டர்கள் பழங்குடியின மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதைத் தொடர்ந்த இரு நாட்களில் வெவ்வேறு இடங்களில் சி.பி.எம் குண்டர்கள் தாக்குதல் நடத்தக் கிளம்பி, பழங்குடியின மக்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

சமூக பாசிஸ்டுகளாகச் சீரழிந்துவிட்ட சி.பி.எம். ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகள் - சதிகளைப் புரிந்து கொண்ட பழங்குடியின மக்கள், தாங்கள் கட்டியமைத்துள்ள ''போலீசு அட்டூழியங்களுக்கு எதிரான மக்கள் கமிட்டி'' (PCAPA) முடிவின்படி, ஏப்ரல் 6-ஆம் தேதியன்று கொல்கத்தா நகரில் ஆர்ப்பாட்ட பேரணியையும் பொதுக்கூட்டத்தையும் நடத்தினர். பல்வேறு மனித உரிமை - ஜனநாயக உரிமைக்கான அமைப்புகளும், எழுத்தாளர்கள் - பத்திரிக்கைகள் - கலைஞர்கள் உள்ளிட்ட அறிவுத் துறையினரும் பங்கேற்ற இந்தப் பேரணியும் பொதுக்கூட்டமும், லால்கார் பகுதியை இன்னுமொரு நந்திகிராமமாக இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கத் துடிக்கும் போலி கம்யூனிச

**சி.பி.எம். கட்சியின்**
**சூழ்ச்சிகள் - சதிகள் - தாக்குதல்களை**
**முறியடித்து மித்னாபூர் மாவட்டம் மட்டுமின்றி,**
**சந்தால் பழங்குடியினர் நிறைந்துள்ள புருலியா,**
**பங்குரா மாவட்டங்களிலும் போராட்டம்**
**பற்றிப் படர்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சியாளர்களை மக்களிடம் திரைகிழித்துக் காட்டுவதாக அமைந்தது.

''தேர்தலைக் காரணம் காட்டி மாநில போலீசு எமது பகுதிக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம்; நாங்கள் தேர்தலையோ - ஓட்டுப் பதிவையோ எதிர்க்கவில்லை; தேர்தல் அதிகாரிகளுக்கு நாங்களே முழு பாதுகாப்பு அளிக்கிறோம்; மனித உரிமை இயக்கத்தினரும் அறிவுத்துறையினரும் பார்வையாளர்களாக இருந்து இத்தேர்தலை நடத்த நாங்கள் அழைக்கிறோம்'' என்று லால்கார் பழங்குடியினப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் அறிவித்தார்கள். இதைத் தொடர்ந்து மாநிலத் தேர்தல் தலைமை அதிகாரி போராட்டக் கமிட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.



''சி.பி.எம். குண்டர்களையோ, போலீசையோ, அரசு அதிகாரிகளையோ, எமது பகுதியினுள் நுழைய அனுமதிக்க மாட்டோம்!'' - நிலப்பறிப்புக்கும் அடக்குமுறைக்கும் எதிராக சந்தால் பழங்குடியின மக்களின் ஆர்ப்பாட்டப் பேரணி.

இதற்கிடையே, ஏப்ரல் 6-ஆம் தேதியன்று நந்திகிராம பாணியில் 200 சி.பி.எம். குண்டர்கள் துப்பாக்கியுடன் நள்ளிரவில் வந்து, லால்கார் மக்கள் மீது திடீர்த் தாக்குதலை நடத்தினர். சி.பி.எம். குண்டர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் படுகாயமடைந்தனர். முன்னெச்சரிக்கையுடன் இருந்த பழங்குடியின மக்கள், எதிர்த்தாக்குதல் நடத்தி இக்குண்டர்களை விரட்டியடித்தனர். பின்னர், ஏப்ரல் 12-ஆம் தேதியன்று மீண்டும் 30 குண்டர்கள் நாட்டு வெடிகுண்டுகளை வீசியபோது, பழங்குடியின மக்கள் அவர்களை விரட்டியடித்தனர். அதேநாளில், தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வந்த சல்போனி வட்டார வளர்ச்சி அதிகாரி, பழங்குடியின மக்களால் ''கெரோ'' செய்யப்பட்டு துரத்தப்பட்டார். அதைத் தொடர்ந்து கிராமங்கள் தோறும் சோதனைச் சாவடிகள் - தடுப்பரண்கள் அமைக்கப்பட்டு, சி.பி.எம். குண்டர்களோ, போலீசோ, அதிகாரிகளோ நுழைய முடியாதபடி பழங்குடியின மக்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். அதையும் மீறி கொடிய ஆயுதங்களுடன் தாக்க வந்த சி.பி.எம். குண்டர்கள் 7 பேரைச் சிறைபிடித்த பழங்குடியின மக்கள், அடுத்தநாளில் அவர்களை எச்சரித்து விடுவித்தனர்.

மறுபுறம், போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டியின் 600-க்கும் மேற்பட்ட கிராமங்களின் பிரதிநிதிகள் கூடி, தேர்தல் அதிகாரியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான குழுவைத் தேர்வு செய்தனர். இக்கமிட்டியின் தலைவரான சத்ரதார் மஹடோ தலைமையிலான குழு, தேர்தல் அதிகாரிகளுடன் 2 சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இத்தொகுதியில் தேர்தல் நடக்கும் ஏப்ரல் 30-ஆம் தேதியன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டும் மத்திய ரிசர்வ் போலீசுப் படையின் பாதுகாப்பில் தேர்தல் நடத்துவது என்றும், வாக்குப் பதிவு முடிந்ததும் இப்படை திரும்பி விடும் என்றும், மாநிலப் போலீசு உள்ளே வரவோ, நிரந்தரமாகத் தங்கவோ செய்யாது என்றும் இப்பேச்சு வார்த்தைகளில் முடிவாகியுள்ளது. இதை மீறி மாநிலப் போலீசோ, சி.பி.எம். குண்டர்களோ இப்பகுதிக்குள் நுழைய முற்பட்டால் லால்கார் மக்கள் ஆயுதமேந்திப் போராடுவார்கள் என்று சத்ரதார் மஹடோ அறிவித்துள்ளார். தமது கோரிக்கைகளை வலியுறுத்தியும், சி.பி.எம். குண்டர்களை எச்சரித்தும் பழங்குடியின மக்கள் பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு ஏப்ரல் 19-ஆம் தேதியன்று ஜார்கிராம் நகரில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்தியுள்ளனர்.

சந்தால் பழங்குடியின மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தால் அம்பலப்பட்டுப் போயுள்ள சி.பி.எம். கட்சி அரண்டு போய் நிற்கிறது. ''லால்கார் பகுதியிலுள்ள 44 வாக்குச் சாவடிகளில் எங்களுக்கு ஒரு ஓட்டுகூட விழாவிட்டாலும், எங்கள் வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்திட முடியாது'' என்று ஆத்திரத்தில் வெறியைக் கக்குகிறார், சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான பிமன்போஸ். ஆனால் சி.பி.எம். கட்சியின் சூழ்ச்சிகள் - சதிகள் - தாக்குதல்களை முறியடித்து மித்னாபூர் மாவட்டம் மட்டுமின்றி, சந்தால் பழங்குடியினர் நிறைந்துள்ள புருலியா, பங்குரா மாவட்டங்களிலும் போராட்டம் பற்றிப் படர்கிறது. பழங்குடியின மக்களின் நீதியான இப்போராட்டத்தை வேறு வழியின்றி எதிர்க்கட்சிகள் ஆதரிக்க வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகியுள்ளன. 44 வாக்குச்சாவடிகளுக்குப் பதில் 4 வாக்குச்சாவடிகள் மட்டும் நிறுவி தேர்தலை நடத்திக் கொள்ளுமாறு போராட்டக் கமிட்டி முன்வைத்த கோரிக்கையை தேர்தல் அதிகாரிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஏப்ரல் 30-ஆம் தேதி லால்கார் பகுதியில் பெயரளவிலான தேர்தல் நடந்து, நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் தூக்கிப் பிடித்து நிலைநாட்டி விட்டதாக ஆட்சியாளர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால், இந்நாடாளுமன்ற ஜனநாயக அரசியலமைப்பு முறையின் யோக்கியதையைத் திரைகிழித்துக் காட்டி, அதிகாரவர்க்க - போலீசு அடக்குமுறைக்கு எதிரான சந்தால் பழங்குடியின மக்களின் போராட்டம் ஓயப் போவதில்லை. மே.வங்க கொலைகார போலீசும் அதிகார வர்க்கமும் சி.பி.எம். குண்டர்களும் இனி இப்பகுதியில் காலூன்றவும் வாய்ப்பில்லை.

போலீசின் அரசு பயங்கரவாத அடக்குமுறைக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் மக்கள் போராடி வந்துள்ள போதிலும், அவை விரைவிலேயே அடக்கியொடுக்கப்பட்டு நீர்த்துப் போய்விடுகின்றன. ஆனால், நக்சல்பாரி புரட்சியாளர்கள் தலைமையேற்று வழிநடத்துவதாலேயே லால்கார் மக்களின் போராட்டம் தொடர்ந்து முன்னேறி வருகிறது. புரட்சிகர தலைமை இருந்தால் மட்டுமே, எந்தவொரு மக்கள் போராட்டத்தையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியும்; அரசை அடிபணிய வைக்க முடியும்; மக்களை புரட்சிப் பாதையில் வழிநடத்த முடியும் - என்ற அரிய படிப்பினைகளை உணர்த்தியுள்ள லால்கார் பழங்குடியின மக்கள், அடுத்தகட்டப் போராட்டத்துக்கு அணிதிரண்டு வருகிறார்கள்.

**● மனோகரன்**


படிப்பகம்

www.padippakam.com

### ஈழப் 'போர் நிறுத்தம்':

# காங்கிரசு - தி.மு.க. கம்பெனியின் கபட நாடகம்

**"கெட்டிக்கார" கருணாநிதியின் போர் நிறுத்தப் புளுகு ஒரு மணி நேரம்கூடத் தாக்குப் பிடிக்கவில்லை.**

ஈழத்தில் தொடரும் மிக்க கொடிய இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வக்கற்ற காங்கிரசு - தி.மு.க. கூட்டணி அரசின் மீது தமிழக மக்களின் வெறுப்பு அதிகரித்து வருகிறது. தேர்தல் நெருங்க நெருங்க, கருணாநிதிக்கு அச்சமும் அதிகரித்துக் கொண்டே போகிறது. சவடால் அடித்தும், பிரதமருக்கும் சோனியாவுக்கும் தந்தி அடித்தும், சிவசங்கர் மேனன் - எம்.கே.நாராயணன் ஆகியோர் ராஜபக்சேவைச் சந்தித்து போர் நிறுத்தத்தை வலியுறுத்திவிட்டு வந்துள்ளதாக ஏய்த்த பின்னரும் கூட, போர் நிறுத்தம் நிகழவில்லை. இதோ, இன்னும் இரண்டே நாளில் நல்ல முடிவு ஏற்படும் என்று கருணாநிதி கூறிய கெடு முடிந்த பின்னரும், ஈழத் தமிழின அழிப்புப் போர் நிறுத்தப்படவில்லை. இதனால், தமிழக மக்களின் வெறுப்பும் ஆத்திரமும் அதிகரிக்கும் முன்னே அதைத் திசைதிருப்பும் நோக்கத்தோடு, ''இலங்கையில் போர் நிறுத்தம் கோரி சாகும் வரை உண்ணாவிரதம்'' எனும் சூப்பர் நாடகத்தை கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி அதிகாலைக் காட்சியாக அரங்கேற்றினார், இந்த 'தமிழின'த் தலைவர்.

இதற்குக் கதை, வசனம், நடிப்பு, இயக்கம் - அனைத்துமே அவர்தான். கதாநாயகனும் அவர்தான். கதாநாயகிகள் இருவர். அவர்கள் கருணாநிதியின் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் அமர்ந்து கொள்ள, அந்தச் சோகக் காட்சிக்காக ஆஸ்கார் பரிசு அளிக்காததுதான் பாக்கி. இந்த நாடகம் ஃபாஸ்ட் ஃபுட் உணவைப் போல, காலை 6 மணிக்குத் தொடங்கி பகல் 12 மணிக்குள் வெகு விரைவாக முடிந்து விட்டது. மற்ற ஓட்டுக் கட்சிகளெல்லாம் காலை உணவை முடித்துக் கொண்டு பகல் உணவை மட்டும் தவிர்க்கும் பழைய பாணி உண்ணாவிரத நாடகத்துக்குப் பதிலாக, அதிகாலையிலேயே உண்ணாவிரதத்தைத் தொடங்கி பகல் சாப்பாட்டுக்கு முன்னரே உண்ணாவிரதத்தை முடித்து, புதுமைப்பாணியில் அவர் இந்த நாடகத்தை நடத்தியுள்ளார்.

உண்ணாவிரதம் தொடங்கிய அடுத்த சில மணி நேரத்தில், ''எனக்கு தொலைபேசி செய்தி வந்துள்ளது'' என்று அவரே ஒரு அறிக்கை வாசித்து விட்டு, 'ஈழத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறி அவரே உண்ணாவிரத நாடகத்தை முடித்துக் கொள்கிறார். இந்த நாடகத்தின் துணை வசனகர்த்தாவான ப.சிதம்பரம், மைய அரசின் கோரிக்கையை ஏற்று ராஜபக்சே போர்நிறுத்தத்தை அறிவித்துள்ளார் என்று பின்பாட்டுப் பாடுகிறார். ''கலைஞரின் உண்ணாவிரதப் போராட்டம் வெற்றி! போரை நிறுத்திவிட்டதாக இலங்கை அறிவிப்பு!'' என்று சன் டி.வி.யும் பிற ஊடகங்களும் பரபரப்பூட்டின. மாலையில் ''இலங்கையைப் பணிய வைத்த கலைஞரின் உண்ணாவிரதம்'' என்று கொட்டை எழுத்துக்களில் நாளேடுகளில் செய்திகள் வெளியாகின.

ஆட்சியதிகாரத்திலிருக்கும் கருணாநிதியின் அரைநாள் பட்டினிக்கே, இலங்கை அரசு அஞ்சி நடுங்கி போர் நிறுத்தத்தை அறிவிக்கிறதென்றால், அவ்வளவு வலிமை கொண்ட அவர் இதை ஏன் முன்னரே செய்யவில்லை? ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் செத்து மடிந்த பின் உண்ணாவிரதம் இருக்க வேண்டியதன் அவசியம்தான் என்ன? ஈழத் தமிழர்களின் கொலைகளைத் தடுத்து நிறுத்துமளவுக்கு அதிகாரம் கொண்ட அவர் இத்தனை காலமும் முடங்கிக் கிடந்தது ஏன்? தியாகி முத்துக்குமார் தொடங்கி, தமிழகத்தின் பல்வேறு தரப்பு மக்களும், புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களும் போர் நிறுத்தம் கோரி



கருணாநிதி ''ஆல் இன் ஆல் அழகு ராஜாவாக'' இருந்து நடத்திய உண்ணாவிரத நாடகம்.

தொடர்ந்து போராடி வந்த நிலையில் அவர்களுடைய போராட்ட உணர்வுகள் மீதும் தியாகங்கள் மீதும் மலத்தில் தோய்த்தெடுத்த செருப்பால் அடித்தது போல் அமைந்திருக்கிறது, 'கலைஞரின் உண்ணாவிரதத்தால் இலங்கையில் போர் நிறுத்த அறிவிப்பு என்ற மோசடி.

போர் நிறுத்தமுமில்லை; புண்ணாக்குமில்லை என்று அடுத்த நாளே அறிவித்து விட்டது இலங்கை அரசு. ''பயங்கரவாதப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் எந்தவிதத் தற்காலிக இடைநிறுத்தமும் இல்லை. போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக இந்திய அரசும் ஊடகங்களும் கூறுவது தவறான தகவல்'' என்று வெளிப்படையாக அறிவித்துள்ளது, இலங்கை இராணுவ அமைச்சகம். விடுதலைப் புலிகள் போர்



படிப்பகம்

www.padippakam.com

நிறுத்தத்தை அறிவித்துள்ள நிலையில், இந்தியா மற்றும் உலக நாடுகளின் நிர்பந்தங்கள் காரண மாக இலங்கை அரசு போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது என ஊடகங்கள் திரிக்கப்பட்ட தவறான செய்தியை வெளியிட்டுள்ளன என்று இராணுவ அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



காங்கிரசு - தி.மு.க. கம்பெனி அவிழ்த்துவிட்ட 'போர்நிறுத்த' அறிவிப்புக்குப் பின், இலங்கை இராணுவம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்.

''புலிகளுக்கு எதிரான போர் நடவடிக் கைகள் தர்க்க ரீதியாக அவற்றின் இறுதி முடிவை எட்டியுள்ளதாக இலங்கை அரசு கருது கிறது. பொது மக்களுக்குப் பாதிப்பையும் உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தும் கனரக ஆயுதங்கள் மற்றும் போர் விமானங்களைப் பயன்படுத்துவதையும் வான்வழித் தாக்குதல் நடத்துவதையும் முடிவுக்குக் கொண்டு வருமாறு ராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது. புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதி யிலுள்ள தமிழ் மக்களை மீட்கும் நடவடிக்கை களில் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப்பட வில்லை. இது போர் நிறுத்தப் பகுதியில் ஏற்கெனவே நிலவி வரும் இராணுவ நடவடிக் கைகள் பற்றிய கொள்கையின் தொடர்ச்சியே தவிர, போர் நிறுத்தம் அல்ல. புலிகளைத் தாக்கி அழிக்கும் போர் நடவடிக் கையில் தமிழ் மக்களுக்கு உயிரிழப்பு ஏற்படாமல், பொது மக்களின் பாதுகாப்பு விசயத்தில் மிகுந்த முன்னெச்சரிக்கை யுடன் செயல்படுமாறு இராணுவத்துக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. வெற்றியை நெருங்கி விட்டதாக இராணுவ அமைச்சகம் கருதுகிறது'' என்று அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை அதிபர் ராஜபக்சேவும் தான் போர் நிறுத்தம் எதையும் அறிவிக்கவில்லை என்கிறார்.

இருப்பினும், போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தமிழனை இளிச்சவாயனாகக் கருதிக் கொண்டு காதில் பூ சுற்று கிறார் கருணாநிதி. இலங்கை இராணுவ அமைச்சகம் வெளி யிட்ட அறிக்கைக்கு புதிய விளக்கமும் பொழிப்புரையும் எழுது கிறார் ப.சிதம்பரம். போர் நடவடிக்கைகள் அதன் இறுதி முடிவை எட்டியுள்ளன என்ற இலங்கை அரசின் கூற்றுக்கு, இதன் பொருள் போர் நடவடிக்கைகள் தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன என்று அயோக்கியத்தனமாக விளக்கமளிக் கிறார் அவர். கனரக ஆயுதங்களுடன் தாக்குதல் இருக்காது - பீரங்கித் தாக்குதலுக்குப் பதிலாக துப்பாக்கிச் சூடும் எறி கணைத் தாக்குதலும் தொடரும் - என்று இலங்கை இராணுவ அமைச்சகம் குறிப்பிடுவதை தொடரும் போர்த் தாக்குதல்கள் முடிவுக்கு வந்து விட்டதாக இந்திய அரசு பொருள் கொள்கிறது; இந்த அறிவிப்பு எமக்கு ஆறுதல் அளிக்கிறது என்று தமிழனைக் கேணையாகக் கருதிக் கொண்டு விளக்கமளிக்கிறார்.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்று அறிவித்துக் கொண்டே, மறுநாளே சிங்கள பாசிச இராணுவம் பீரங்கித் தாக்குதலையும் வான்வழித் தாக்குதலையும் நடத்தி, போர் நிறுத்தப் பகுதியிலேயே நூற்றுக்கணக்கானோரைக் கொன்றொழித்துள்ளது. கயவாளிகளின் புளுகு அடுத்தநாளே நாறியது. இருப்பினும் ''மழை விட்டாலும் தூவானம் விடவில்லை'' என்று இப்போர்த் தாக்குதலுக்கு வெட்கங்கெட்ட முறையில் விளக்கமளிக்கிறார், கருணாநிதி.

ஈழத் தமிழர்களின் குலையறுக்கும் இக்கொடிய போரின் சூத்திரதாரியே இந்திய மேலாதிக்க அரசுதான். எனவேதான் இந்தக் கயவாளிகள் சொல்லி வைத்த மாதிரி நாடகத்தைத் திறமையாக நடத்துகிறார்கள். தமிழகத் தேர்தலுக்கு முன்னதாக, பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்து, புலிகளை அழித்தொழித்து, போர் வெற்றிக்கு இலக்கு தீர்மானித்துக் கொண்டு இந்திய-இலங்கை அரசுகள் போர்த் தாக்குதலைத் தீவிரப்படுத்தின. ஆனால் போர் நிறுத்தம் கோரி போராட்டங்கள் வலுப்பெற்று நிர்பந்தம் ஏற்பட்டதால் இந்திய அரசின் வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனனும் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனும் இலங்கைக்குப் பறந்து ராஜபக்சே விடம் விரைவில் இலக்கை நிறைவேற்றக் கோரி பேச்சு வார்த்தை நடத்தினர். அதன்படி 2 நாளில் இலக்கை முடித்து விட ராஜபக்சே உறுதியளித்திருக்கிறார். அதைத்தான் 2 நாளில் நல்ல முடிவு ஏற்படும் என்று கருணாநிதியும் கூறிவந்தார். அந்த நல்ல முடிவு இலங்கை அரசிடமிருந்து அறிக்கையாக வெளி வரும் என்று தெரிந்துதான் அரசியல் ஆதாயமடையும் நோக்கு டன் திடீர் உண்ணாவிரத நாடகத்தை நடத்தியுள்ளார். இந்தக் கபட நாடகத்துக்கு ஒத்தூதிக் கொண்டு தங்கபாலுவும் சேலத் தில் உண்ணாவிரதமிருந்ததுதான் கயமையின் உச்சகட்ட காட்சி.

காங்கிரசு - தி.மு.க. கம்பெனிகளின் இந்த மோசடி நாட கத்தை விஞ்சும் வகையில் பார்ப்பன-பாசிச் ஜெயா, தமிழனை அடி முட்டாளாகக் கருதிக் கொண்டு அதிரடி நாடகத்தை அரங் கேற்றி வருகிறார். தனி ஈழம்தான் ஒரே தீர்வு என்று கூட்டணி கூஜாக்களைத் திருப்திபடுத்த தேர்தல் பிரச்சாரம் செய்துவந்த அவர் இப்போது, ''இந்தியாதான் இலங்கைக்கு ஆயுதங்கள் கொடுத்து இந்தப் போரை நடத்துகிறது. இதை நான் இரண்டு ஆண்டுகளாக எதிர்த்து வந்தேன். ஈழத் தமிழரின் துயர் போக்க தனி ஈழம் அமைக்கப் பாடுபடுவேன்'' என்று சாமியாடத் தொடங்கிவிட்டார்.

தேர்தல் நெருங்க நெருங்க தமிழனைக் கேணையனாகக் கருதிக் கொண்டு, இக்கயவாளிகள் நடத்தும் மோசடி நாட கங்கள் தீவிரமாகலாம். ஈழத் தமிழின அழிப்புப் போருக்கு எதிராகப் போராடி வரும் தமிழக மக்கள், இக்கேடு கெட்ட மோசடி நாடகக் கூட்டத்தை முச்சந்தியில் கட்டி வைத்து தோலுரிக்காவிட்டால், இனித் தமிழினம் சூடு - சொரணையற்ற கூட்டம் என்ற அவப்பெயர்தான் வரலாற்றில் எழுதப்படும்.

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# ஈழப் போரும் இந்திய மேலாதிக்க நலன்களும்

## இந்திய அரசு, ஈழப் போரை வழிநடத்துவதன் பின்னணி என்ன?

ஈழத்தின் மீதான போரை வழிகாட்டி நடத்தி வருவது இந்திய அரசுதான் என்பது இன்று தெளிவாகவே அம்பலமாகி விட்டது. இந்தியா இந்தப் போரை ஏன் வழிநடத்த வேண்டும்? அதனால் இந்தியாவிற்கு என்ன இலாபம்? என்ற கேள்விகளுக்கான உண்மையான பதிலைத் தமிழக மக்கள் தெரிந்துகொண்டால்தான், இந்தப் போரை எதிர்த்துப் போராடும் நடவடிக்கைகளை மிகச் சரியான முறையில் வகுத்துக் கொள்ள முடியும்.

வை.கோ., நெடுமாறன் போன்றோர் இலங்கை விரித்த வலைக்குள் இந்தியா சிக்கிக் கொண்டுவிட்டதாக நெடுங்காலமாகக் கூறி வருகிறார்கள். 'வல்லரசாக' வளர்ந்து வரும் இந்தியா, ஒரு குட்டி நாடு விரித்த வலையில் சிக்கிக் கொண்டுவிட்டதாகக் கூறுவதைக் கேட்பதற்குக்கூடக் கூச்சமாக இருக்கிறது.

இதுவொருபுறமிருக்க, ''பல நேரங்களில் இலங்கை இந்தியாவிற்கு எதிராக நடந்து கொண்டிருப்பதால், சிங்களர்களை இந்தியா நம்பக் கூடாது; தமிழீழம் அமைய விடுதலைப் புலிகளுக்கு இந்தியா உதவுவதுதான், அதற்கு நல்லது'' என்றும் இவர்கள் ஆலோசனை கூறி வருகிறார்கள். விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகூட இதுதான். 'சுதந்திர' தமிழீழம் என்பது இந்தியாவின் அடியாளாக இருக்கும் என்று உத்தரவாதம் அளிக்கும் நிலைக்குக்கூட இவர்கள் சென்றிருக்கிறார்கள்.

இந்தியாவோ விடுதலைப் புலிகளை நம்பாமல், சிங்களப் பேரினவாதக் கும்பலைத்தான் நண்பனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் கேட்டால், வெளியுறவுத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த மலையாள அதிகாரிகள்தான் தமிழின வெறுப்போடு தவறாக வழிகாட்டுவதாக இவர்கள் 'அப்பாவித்தனமாக'க் கதைக்கிறார்கள். அப்படியென்றால், வெளியுறவுத் துறைச் செயலராக ஒரு தமிழன் இருந்திருந்தால், இந்த அவல நிலைமை ஏற்பட்டிருக்காதா? ஒரு சில அதிகாரிகளின் விருப்பு வெறுப்புதான் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கிறதா? என்ற கேள்விகள் இங்கே தவிர்க்க முடியாமல் எழுந்து விடுகின்றன.

விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் தமிழினவாதக் குழுக்கள், ''சோனியா காந்தி தனது கணவர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதை மனதில் வைத்துக்கொண்டு, ஈழத் தமிழினத்தையே அழித்தொழிக்க சிங்களப் படையின் மூலம் போர் நடத்துவதாக''க் குறிப்பிடுகின்றன. ''அப்படியென்றால், நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசு தோற்றுப் போய், பா.ஜ.க.வோ அல்லது மூன்றாவது அணியோ ஆட்சிக்கு வந்துவிட்டால், இந்திய அரசு சிறீலங்கா அரசுக்கு இராணுவ உதவிகள் அளிப்பதும் வழிகாட்டுவதும் நின்று விடுமா?'' என்ற கேள்விக்கு இக்குழுக்கள் பதில் சொல்லியாக வேண்டும். அந்த நப்பாசையில்தான், தமிழினக் குழுக்கள் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக வாக்களிக்குமாறு தமிழக மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகின்றன.

இந்தியா, சிறீலங்கா அரசுக்கு இராணுவ உதவிகள் அளிப்பதை ஆதரிக்கும் கோஷ்டியினர், ''இந்தியா உதவி அளிக்காவிட்டால், அந்த இடத்தை சீனா, பாகிஸ்தான் போன்ற இந்தியா



விடுதலைப் புலிகளிடம் உதைபட்டு இந்தியாவிற்குத் திரும்பும் இந்திய அமைதி காக்கும் படையைச் சேர்ந்த சிப்பாய்கள்.
(கோப்புப்படம்)

வின் எதிரி நாடுகள் பிடித்துக் கொண்டுவிடும்'' என்று பீதியூட்டுகின்றனர். இதன் மூலம், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய கேள்வியை வெறும் அரசியல் தந்திரப் பிரச்சினையாகச் சுருக்கி விடுகின்றனர்.

இந்தப் பதில்கள் அனைத்தும் அம்புஜா, டாடா, மித்தல் போன்ற இந்தியத் தரகு முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய அரசின் வர்க்கத் தன்மையையும்; அம்முதலாளிகளின் நலனில் இருந்துதான் இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கை தீர்மானிக்கப்படுகிறது என்பதையும்; அம்முதலாளிகளின் நலனுக்காகத்தான் இந்திய அரசு தெற்காசியப் பகுதியில் தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முயலுகிறது என்பதையும்; இந்த அடிப்படைகளில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்துதான் இந்திய அரசு சிங்களப் பேரின வாத ராஜபட்ச அரசுக்கு இராணுவ உதவிகளை அளித்து வருகிறது என்பதையும் பார்க்க மறுக்கின்றன; அல்லது மூடிமறைக்கின்றன.

1987-க்கு முன்பு விடுதலைப் புலிகள் உள்ளிட்ட பல்வேறு ஈழப் போராளிக் குழுக்களுக்கு இந்திய அரசு ஆயுதப் பயிற்சி அளித்ததற்கும்; 1998-க்குப் பிறகு இந்தியா சிறீலங்கா அரசுடன் நெருக்கமாகி, இன்று ஈழப் போரை வழிநடத்துவதற்கும் நாம் மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படைகள்தான் காரணமாக அமைகின்றன. மாறாக, இந்திரா, எம்.ஜி.ஆர்., சோனியா போன்ற தனிப்பட்ட தலைவர்களின் விருப்பு-வெறுப்போ, தலைமைப் பண்போ காரணமாக அமைவதில்லை. 1998-க்குப் பிறகு இந்தியா-சிறீலங்கா அரசுகளிடையே ஏற்பட்டுள்ள வர்த்தக மற்றும் இராணுவ நெருக்கம் மட்டுமின்றி, 2001-க்குப் பிறகு உலக அளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும்; இந்தியா- அமெரிக்கா இடையே ஏற்பட்டுள்ள நெருக்கத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், ஈழப் போரை இந்தியா வழிநடத்தி வருவதற்கான உண்மையான காரணங்களைக் கண்டு கொள்ள முடியும்.





**இந்தியாவின் ''சியட்'' டயர் கம்பெனி பொது மேலாளர் ரவி தாத்லானியிடமிருந்து, சுற்றுலா கண்காட்சி விழா நடத்துவதற்கான காசோலையைப் பெற்றுக் கொள்ளும் இலங்கை சுற்றுலா வாரிய அதிகாரி தம்மிக ஹெவபதிரனா.** (கோப்புப் படம்)

•••

இலங்கையில் புகுந்த இந்திய அமைதி காக்கும் படை விடுதலைப் புலிகளிடம் அடிபட்டுத் திரும்பிய பிறகு, இந்திய அரசு ஈழப் பிரச்சினையில் நேரடியாகத் தலையீடு செய்வதைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது. இதற்குக் காரணம், இந்தியா சைவப் புலியாக மாறிவிட்டது என்பதல்ல. மாறாக, அக்காலக் கட்டத்தில் சோவியத் யூனியன் சிதைந்து உருவான அமெரிக்காவின் ஒற்றைத் துருவ மேலாதிக்கத்தின் கீழ், இந்தியா தனக்கான இடத்தைப் பிடித்துக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. அரசியல், பொருளாதார, இராணுவ மட்டங்களில் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதன் மூலம், இந்தியா அமெரிக்காவின் ஆசியோடு தெற்காசியாவில் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளை எடுத்து வந்தது.

இதே காலகட்டத்தில், 1998-ஆம் ஆண்டு, சி.பி.எம்.-இன் ஆதரவுடன் நடைபெற்று வந்த ஐக்கிய முன்னணி ஆட்சியின் பொழுது (தி.மு.க., த.மா.கா., சி.பி.ஐ., ஆகியவை இந்த ஐக்கிய முன்னணி ஆட்சியில் உறுப்புகளாக இருந்தன.) இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இரு நாடுகளும் பரஸ்பரம் தமக்குள் முதலீடு செய்வதற்கு இருந்து வந்த தடைகளை நீக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்த இந்த ஒப்பந்தம், 2002 -ஆம் ஆண்டு வாஜ்பாயி தலைமையில் நடந்து வந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சியில் முழுமையாக நடைமுறைக்கு வந்தது.

**சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக, சிங்கள இராணுவத்தால் முத்தூரில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் குடியமர்த்தப்பட்ட கந்தலி அகதி முகாம்.** (கோப்புப் படம்)



இதற்கும் மேலாக, இந்தியா - சிறீலங்கா அரசுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகளில் மேலும் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக, ''முழுமையான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தை'' உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளும் அப்பொழுதே தொடங்கின. இந்தப் பொருளாதார நெருக்கத்திற்கு இணையாக இராணுவப் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்தின் அடிப்படையில் 2002-ஆம் ஆண்டே வாஜ்பாயி-ரணில் விக்கிரமசிங்கெ கூட்டறிக்கையும் வெளியிடப்பட்டது.

இதே சமயத்தில், அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்ட பின், அனைத்துலக அரசியல் நிலைமைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏவிவிட்ட ஆக்கிரமிப்புப் போர்களை இந்தியாவும், சிறீலங்கா அரசும் ஒருசேர ஆதரித்தன. தாராளமயப் பொருளாதாரக் கொள்கை


படிப்பகம்

www.padippakam.com

களைப் பின்பற்றும் இந்தியாவும் சிறீலங்காவும் ஒரே அணியில் இருப்பதை அமெரிக்கா மகிழ்வோடு வரவேற்றது.

இந்தியா, அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர்களை ஆதரித்ததன் பலனாக, அமெரிக்காவுடனான அதனின் இராணுவ உறவுகள் பலப்பட ஆரம்பித்தன. கூட்டு இராணுவப் பயிற்சிகள் என்பதையும் தாண்டி, அமெரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம், அணுசக்தி ஒப்பந்தம் போட்டுக் கொள்வதற்கான அடிப்படைகள் அக்காலகட்டத்தில் தான் உருவாயின. மேலும், இந்தியாவை வல்லரசாக்கப் போவதாக அறிவித்ததன் மூலம், அமெரிக்கா தெற்காசியாவில் தனது அடியாளாக இந்தியாவை அங்கீகரித்தது.




அமைதிப் பேச்சுவார்த்தையையும், போர் நிறுத்தத்தையும் கைவிடக் கோரி சிங்கள இனவெறி அமைப்புகள் கொழும்பில் நார்வே தூதரகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்தி, அவ்வமைப்பை அமெரிக்காவிலும் கனடாவிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் தடை செய்ததன் மூலம், இலங்கையின் மனதையும் குளிர வைத்தது, அமெரிக்கா. நார்வே நாட்டின் மேற்பார்வையில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த சமயத்திலும்கூட, விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட சிறீலங்கா அதிபர் சந்திரிகா குமாரதுங்கே, சமாதான பேச்சு வார்த்தைகளையும் போர் நிறுத்தத்தையும் சீர்குலைக்கும் முயற்சிகளைச் செய்து வந்தார். அதேபொழுதில், இந்தியப் பிரதமர் வாஜ்பாயியும் சிறீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கெயும் இணைந்து அக்டோபர் 2003-இல் வெளியிட்ட கூட்டறிக்கையில், "இலங்கையில் அதிகாரப் பகிர்வுக்கான தற்காலிக ஏற்பாடுகள் எதும், இலங்கையின் ஒற்றுமை, பிரதேச ஒருமைப்பாடு என்னும் சட்டகத்திற்குள்ளேதான் உருவாக்கப்பட வேண்டும்" என்று கோரியதோடு, "பயங்கரவாதத்திற்கு எதிராக இரு நாடுகளும் ஒன்றிணைந்து போராடும்" என்றும் அறிவித்தனர்.

இலங்கையில் மகிந்த ராஜபட்ச கூட்டணியும், இந்தியாவில் காங்கிரசு கூட்டணியும் ஆட்சியைப் பிடித்த பிறகு, இந்தியா-சிறீலங்கா உறவில் நெருக்கம் மேலும் அதிகமானது. இலங்கையில் ராஜபட்ச கூட்டணி நவம்பர் 2005-இல் பதவியேற்றபொழுது, "சிறீலங்காவின் தேசப் பாதுகாப்பிற்கு இந்தியா பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது; சிறீலங்காவின் இறையாண்மையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்கு இந்தியா தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்" என்று சிறீலங்காவிற்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ், சிறீலங்காவின் பிரதமரிடம் தெரிவித்தார். இதன் மூலம் இந்திய அரசு, இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் உரிமையும்; தெற்காசியப் பகுதியில் தனது மேலாண்மையை உறுதிசெய்து கொள்ளும் உரிமையும் தனக்கு உண்டு என வெளிச்சம் போட்டுக் காட்டியது.

ஜனதா விமுக்தி பெரமுன, ஜாதிக ஹேல உருமய ஆகிய இரு சிங்களப் பேரினவாதக் கட்சிகளும், "விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முற்றிலுமாக மாற்றியமைக்க வேண்டும்" என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் ராஜபட்ச அரசுக்கு ஆதரவளித்தன. இதுவொரு புறமிருக்க, சரிந்து வரும் இலங்கைப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த வளர்ந்துவரும் இந்தியப் பொருளாதாரத்துடன் அதை இணைப்பதே நல்லது என சிறீலங்காவின் ஆளும் வர்க்கங்கள் கருதின. இவை இரண்டையும் சிரமேற்கொண்டு செய்து முடித்தார், மகிந்த ராஜபட்ச.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மட்டுமின்றி, இரட்டை வரியைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தம், இரு தரப்பு முதலீட்டுப் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு ஒப்பந்தம் ஆகியவற்றோடு, விமானப் போக்குவரத்து, சிறு தொழில்கள், சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தங்களும் போடப்பட்டன. இப்பொருளாதார நெருக்கம் ஒருபுறமிருக்க, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் தடுப்பு ஒப்பந்தம், தண்டனை விதிக்கப்பட்ட நபர்களை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் போன்ற அரசியல்ரீதியான ஒப்பந்தங்களும் இந்தியா-சிறீலங்காவிற்கு இடையே கையெழுத்தாகின.

இந்த நெருக்கத்தின் பயனாக, சிறீலங்காவின் ஒட்டுமொத்த வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கு ஆறில் ஒரு பங்காக அதிகரித்தது; 2007-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பு 280 கோடி அமெரிக்க டாலராக உயர்ந்தது; இலங்கையில் முதலீடு செய்துள்ள நாடுகளின் வரிசையில் இந்தியா 4-ஆம் இடத்தைப் பிடித்தது; இந்தியா வெளிநாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கும் மொத்த உதவித் தொகையில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்கை இலங்கைக்கு வழங்கத் தொடங்கியது.

இந்தியப் பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், இலங்கையில் 170 இடங்களில் எண்ணெய் இறைக்கும் பம்புகளை இயக்குவதுடன், திரிகோணமலை



படிப்பகம்

www.padippakam.com

எண்ணெய்த் தொட்டிப் பண்ணையை பராமரித்தும் வருகிறது. எரிசக்தித் துறையில் இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கழகமும், சிறீலங்கா மின் வாரியமும் இணைந்து 500 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள அனல் மின் உற்பத்தி நிலையத்தைக் கட்டத் திட்டமிட்டுள்ளன.

இந்தியாவைச் சேர்ந்த தாஜ் ஓட்டல் நிறுவனம், லார்சன் அண்ட் டூப்ரோ, அம்புஜாஸ், டாடா, அசோக் லேலண்ட் ஆகியவை இலங்கையில் இயங்கும் முக்கியமான தனியார் நிறுவனங்களாகும். இலங்கையின் கைபேசி சேவையில் பாரதி ஏர்டெல் நுழைந்திருக்கிறது. மேலும், ஏசியன் பெயிண்ட்ஸ், என்.ஐ.ஐ.டி., அப்பல்லோ ஹாஸ்பிட்டல்ஸ், சியட் உள்ளிட்டு பல்வேறு இந்திய நிறுவனங்கள் ...க்கு, சிமெண்ட், ரப்பர், சுற்றுலா, கணினி மென்பொருள், மின்னணுத் தொழில் நுட்பப் பயிற்சி ஆகிய இலாபகரமான தொழில்களில் இலங்கையில் முதலீடு செய்துள்ளன. 1991-இல் 74 இலட்சம் இலங்கை ரூபாய் மதிப்புள்ள 23 இந்தியத் தொழில் திட்டங்கள் இலங்கையில் நடந்து வந்தன. இது, 2000-ஆம் ஆண்டில் 1,250 கோடி இலங்கை ரூபாய் மதிப்புள்ள 150 இந்தியத் தொழில் திட்டங்களாக அதிகரித்துள்ளன.



கடந்த 2008 செப்டம்பரில், வவுனியாவில் இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிடும் இந்திய இராணுவ தென் பிராந்திய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ். தாக்கர்.

2001-க்குப் பிறகு இந்தியத் தரகு முதலாளிகளின் ஆதிக்கம் இலங்கையில் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. இப்பொருளாதார ஆதிக்கம் குறித்து சிறீலங்கா அதிபர் தேர்தலில் ராஜபட்சேவை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்றவரும், ஐக்கிய சோசலிசக் கட்சியைச் சேர்ந்தவருமான சிறீதுங்கா ஜெயசூர்ய பின்வருமாறு கூறியிருக்கிறார்; "இலங்கையில் மோட்டார் வாதனத் தொழிலில் ஆதிக்கம் செலுத்துபவை அசோக் லேலண்ட், மாருதி, பஜாஜ் ஆகிய நிறுவனங்களாகும்; டீசல், பெட்ரோல் விநியோகத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் பங்கு 50 சதவீதத்திற்கும் அதிகம்; இப்போது "சிலோன் தேயிலை" என ஏதும் இல்லை; இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் பெரும்பாலானவை டாடாவுக்குச் சொந்தம். எனவே நாம் இப்போது குடிப்பது இந்திய டாடா சிலோன் தேயிலைதான். இவை சில எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. இவற்றுக்குப் பின்னால் உள்ள செயல்திட்டம் பீதியூட்டக்கூடியதாகும்."

2002-ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் வகையில் ராஜபட்ச அரசாங்கம் 2006 ஆகஸ்டு, செப்டம்பரில் நடத்திய இராணுவத் தாக்குதல்களின் மூலம் திரிகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சம்பூர், முத்தூர் கிழக்கு ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியது. அங்கு ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்டதுடன், அப்பகுதியில் இருந்த 14 கிராமங்களைச் சுற்றி ஒரு அதி பாதுகாப்பு மண்டலத்தை சிறீலங்கா இராணுவம் உருவாக்கியது. அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தான் 35 கோடி அமெரிக்க டாலர் முதலீட்டில் இந்தியாவின் எரிசக்தித் துறையும், சிறீலங்கா மின்வாரியமும் இணைந்து அனல் மின் நிலையத்தை அமைக்கும் ஒப்பந்தத்தில் டிசம்பர் 2006 இல் கையெழுத்திட்டன.

இலங்கை உள்ளிட்ட தெற்காசியப் பகுதியில் அமெரிக்காவும் பிற வெளிநாடுகளும், மின்னணுத் தொழில்துறை முதலியவற்றில் பெரும் முதலீடு செய்திருப்பதால், அங்கு 'அமைதி' ஏற்பட, இலங்கை இனப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு ஏற்பட வேண்டும் என அமெரிக்க மற்றும் இந்திய முதலாளிகள் விரும்பினர். ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஒடுக்கப்படுவதற்கு பின்னே மறைந்துள்ள இந்தியத் தரகு முதலாளிகள் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களை வெளிச்சம் போட்டுக்காட்ட இந்த இரு எடுத்துக்காட்டுகள் போதுமானது.

இந்திய முதலாளிகளின் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடுகளையும், பொருளாதார ஆதிக்கத்தையும் காக்கும் நோக்கத்தில்தான் இந்தியா, சிறீலங்காவிற்கு அனைத்துவிதமான இராணுவ உதவிகளையும் செய்து வருகிறது. 'சுதந்திர' தமிழீழத்தைவிட, ஒன்றுபட்ட சிறீலங்காதான் இந்தியத் தரகு முதலாளிகளின் பொருளாதாரச் சுரண்டலுக்கும்; அவர்களின் புவிசார் ஆதிக்கத்திற்கும் உகந்ததாக இந்திய ஆளும் கும்பல் கருதுகிறது. இந்தியா, தனது இந்த ஆதிக்க நோக்கங்களை மூடி மறைத்துக் கொள்ளவே "சிறீலங்காவின் தேசிய ஒருமைப்பாடு" "புலிகளின் பயங்கரவாதத்தை எதிர்ப்பது" என்று பஜனை பாடுகிறது.

பதுக்கல் வியாபாரிகளின் கட்சியான பா.ஜ.க.வை விட்டு விடுங்கள். 'பாட்டாளிகளின் தோழனான' சி.பி.எம். அமைத்துள்ள மூன்றாவது அணி ஆட்சியைப் பிடித்தால்கூட, ஈழப் போரில் இருந்து விலகிவிட மாட்டார்கள். ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைவிட, இந்தியத் தரகு முதலாளிகளின் பொருளாதார நலன்களையும்; தெற்காசியாவை அம்முதலாளிகளுக்காக வளைத்துப் போடுவதையும்தான் முக்கியமாகக் கருதுவார்கள். எனவே, நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிப்போம் எனக் கூறிக் கொண்டு, அத்வானியையும், ஜெயலலிதாவையும் ஆட்சியில் அமர்த்தும் ஆழ்வார் வேலையில் இறங்குவதற்குப் பதிலாக, தேர்தலைப் புறக்கணித்து, இந்தியாவின் மேலாதிக்கப் போருக்குப் பதிலடி கொடுப்பதுதான் தமிழக மக்களின் கடமையாகும்!

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com

# பன்னாட்டு நிறுவனங்களின் நிலப்பறிப்பு ஏழை நாடுகள் எதிர்கொள்ளும் புதிய அபாயம்

**தகவல் தொழில்நுட்பத் துறையைப் போல, உணவு உற்பத்தியிலும் பரவும் "அவுட் சோர்சிங்", ஏழை நாடுகளைப் பட்டினிக்குள் தள்ளிவிட தொடங்கிவிட்டது.**

ஆறுகளும் பசுமையான வயல்களும், மலைகளும் நீர் வீழ்ச்சியும், காடுகளும் விலங்குகளும் கொண்ட இயற்கை அழகு நிறைந்த ஆப்பிரிக்க நாடான மடகாஸ்கர், கடந்த பிப்ரவரி- மார்ச் மாதங்களில் விவசாயிகளின் போராட்டங்களால் குலுங்கியது. ''ஒருபிடி மண்ணைக்கூட அந்நியனுக்குத் தரமாட்டோம்!; தென்கொரிய டேவூ நிறுவனமே, நாட்டை விட்டு வெளியேறு!; நாட்டைத் தாரைவார்க்கும் சர்வாதிகார அதிபர் ஒழிக!'' என்ற முழக்கங்களுடன் அந்நாட்டு விவசாயிகள் அணிதிரண்டு போராட்டங்களைத் தொடர்ந்தனர்.

போராட்டத்தை ஒடுக்க சர்வாதிகார அதிபர் மார்க் ரவலோமானனா கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாத அடக்குமுறையில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பலியாகினர். இப்போராட்டங்களைச் சாதகமாக்கிக் கொண்டு, தலைநகர மேயரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஆன்ரி ரஜேலினா சர்வாதிகார அதிபருக்கெதிரான நாட்டு மக்களின் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். அவரைச் சர்வாதிகார அதிபர் பதவி நீக்கம் செய்ததும், நாடெங்கும் போராட்டம் தீவிரமடைந்தது. அதிபர் மார்க் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போன நிலையில், இராணுவம் மற்றும் சட்டவாத நீதித்துறையின் ஆதரவோடு எதிர்க்கட்சித் தலைவரான ஆன்ரி, சர்வாதிகார அதிபரைப் பதவி நீக்கம் செய்துவிட்டு கடந்த மார்ச் மூன்றாம் வாரத்தில் புதிய அதிபராக முடிசூட்டிக் கொண்டுள்ளார்.

ஆப்பிரிக்க கண்டத்தின் கிழக்கே, இந்தியப் பெருங்கடலில் இயற்கை வளமும் தாது வளமும் கனிம வளமும் நிறைந்த மிகப் பெரிய தீவு நாடாக இருந்த போதிலும், ஏகாதிபத்தியச் சூறையாடலால் மடகாஸ்கர் இன்னமும் ஏழை நாடாகவே இருக்கிறது. வறுமையும் வேலையின்மையும் அந்நாட்டைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கின்றன. நம் நாட்டு விவசாயிகளைப் போலவே மடகாஸ்கர் விவசாயிகளும் தாராளமய-உலகமயமாக்கத்தால் ஓட்டாண்டிகளாகி நிற்கிறார்கள். ஏறத்தாழ 70% மக்கள் உலக உணவுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் அரைகுறை உணவைக் கொண்டு வாழ்க்கையை நரக வேதனையுடன் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில்; ஏகாதிபத்தியச் சூறையாடலுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் போல, சிறப்பு விவசாய மண்டலங்களை நிறுவும் திட்டத்தைக் கொண்டு வந்தார், அதிபர் மார்க். இதன்படி, தென்கொரிய தேசங்கடந்த ஏகபோக தொழிற்கழகமான டேவூ நிறுவனத்திற்கு 13 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் 99 வருடக் குத்தகைக்கு விடப்பட்டன. இது, அந்நாட்டின் மொத்த விளைநிலப் பரப்பில் ஏறத்தாழ பாதிக்கும் மேலானதாகும். பா.ம.க. தலைவர் ராமதாசு அடிக்கடி கோரிவருகிறாரே, அத்தகைய சிறப்பு விவசாய மண்டலத் திட்டம்தான் அங்கே செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஒரு லட்சம் விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், அந்நியச் செலாவணி பெருகும் என்றும், இது நாட்டின் வளர்ச்சிக்கான திட்டம் என்றும் ஆட்சியாளர்கள் கதையளந்தனர்.

ஆனால் மடகாஸ்கர் விவசாயிகள், விவசாயத்தையும் விவசாயிகளையும் நாசமாக்கும் இம்மோசடித் திட்டத்தை நம்பி ஏமாறத் தயாராக இல்லை. இது, நாட்டை அடிமைப்படுத்தும் நவீன காலனியாதிக்கம் என்று மிகச் சரியாக வரையறுத்த அவர்கள், தலைநகரை முற்றுகையிட்டு போராட்டங்களைத் தொடந்தனர். அவர்களது போராட்டங்களைச் சாதகமாக்கிக் கொண்டு ஆட்சியைப் பிடித்துள்ள புதிய அதிபரான ஆன்ரி, டேவூ நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை ரத்து செய்யப் போவதாக அறிவித்துள்ளார். இது, மடகாஸ்கர் விவசாயிகளின் போராட்டத்துக்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றி.

தனது 34-வது வயதில் மடகாஸ்கரின் அதிபராகியுள்ள ஆன்ரி, உலகின் முதலாவது இளம் அதிபர் என்று ஊடகங்களால் போற்றப்படுகிறார். எனினும் அவர் இடதுசாரியோ, சீர்திருத்தவாதியோ அல்ல; விவசாயிகளின் போராட்டத்துக்கு வடிகால் வெட்டும் வேலையைச் செய்துள்ள ஆளும் வர்க்கங்களின் எதிர்த்தரப்பு அரசியல் தலைவர்தான் அவர். எனவேதான், ''உள்நாட்டு அரசியல் குழப்பங்களால் எமது திட்டங்களுக்குத்

**''விளை நிலங்களைப் பறிக்காதே! அந்நியருக்குத் தாரை வார்க்காதே!'' மடகாஸ்கார் விவசாயிகளின் பேரெழுச்சி.**





படிப்பகம்

www.padippakam.com



பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் தள்ளப்பட்ட ஆப்பிரிக்கக் குழந்தைகள்.

தற்காலிகப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது; புதிய அதிபருடன் நாங்கள் புதிய ஒப்பந்தம் போட்டு எமது திட்டத்தைச் செயல்படுத்துவோம்'' என்று நம்பிக்கையோடு அறிவிக்கிறது டேஊ நிறுவனம். இதே மடகாஸ்கரில் ஏறத்தாழ 4 லட்சம் ஹெக்டேர் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ள இந்தியாவின் வருண் நிறுவனம், ''நாங்கள் டேஊ நிறுவனத்திடமிருந்து படிப்பினைகளைப் பெற்றுள்ளோம்; நாங்கள் விவசாயிகளின் அதிருப்திக்கு ஆளாகாமல் ஒப்பந்த விவசாயம் மூலம் திட்டத்தை நிறைவேற்றப் போகிறோம்'' என்கிறது.

மடகாஸ்கரில் நடந்த ஆட்சி மாற்றத்திற்குக் காரணமாக இருந்தது, விவசாயிகளின் எழுச்சி. இந்த எழுச்சிக்குக் காரணம், அந்நியக் கம்பெனிகளின் நிலப்பறிப்பு. இது ஏதோ, மடகாஸ்கரில் மட்டும் நடந்த விதிவிலக்கான நிகழ்வு அல்ல. உலகெங்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும், நிதியாதிக்கக் கும்பல்களும், அவற்றின் பங்காளிகளான வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசுகளும் போட்டிபோட்டுக் கொண்டு ஏழை நாடுகளின் விளைநிலங்களைக் கபளீகரம் செய்து வருகின்றன. இந் நிலங்களில் தமது நாட்டின் தேவைக்கான உணவு தானியங்களைப் பயிரிட்டுக் கொள்வது, உலகச் சந்தையில் விற்று ஆதாயமடைவது என்ற நோக்கத்துடன் இந்நிறுவனங்கள் களத்தில் இறங்கியுள்ளன.

இதனை ''உணவு உற்பத்தியில் அவுட் சோர்சிங்'' என்று குறிப்பிடுகின்றனர். ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குத் தேவையான உணவு தானியங்களை அல்லது உயிர்ம எரிபொருள் தேவைக்கான பயிர்களை அதன் எல்லைக்கு அப்பால் உற்பத்தி செய்வதையே ''உணவு உற்பத்தியில் அவுட்சோர்சிங்'' என்கின்றனர். அன்று வெள்ளைக்காரன் இந்தியாவைக் காலனியாக்கி, தனது நாட்டின் துணிகளுக்குச் சாயம் போடுவதற்காக, இந்திய விளை நிலங்களில் அவுரிச் செடியைக் கட்டாயமாகப் பயிரிட வைத்தான். இக்காலனியாதிக்க வழியில், இன்று பல்வேறு ஏகபோக நிறுவனங்களும் அரசுகளும் நிதியாதிக்கக் கும்பல்களும் ஏழை நாடுகளின் நிலங்களைக் கைப்பற்றி தமது தேவைக்காகப் பயிரிட்டு அள்ளிச் செல்வதுதான் உணவு உற்பத்தியில் அவுட்சோர்சிங் என்பதாகும்.

வெளிநாடுகளில் உணவு உற்பத்தியை மேற்கொண்டு அதன் மூலம் ஆதிக்கம் செய்யத் துடிக்கும் சௌதி அரேபியா, பஹ்ரைன், குவைத், கத்தார், ஓமன் மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு முதலான எண்ணெய் வளமிக்க நாடுகள், ''வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பு (GCC)'' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் அபரிமிதமான அந்நியச் செலாவணியைக் கொண்டு வெளிநாடுகளில் உணவு உற்பத்தியை இவை நடத்தி வருகின்றன. சூடான், பாகிஸ்தான், மியான்மர் (பர்மா), கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம், கசகஸ்தான், உகாண்டா, பிரேசில் முதலான நாடுகளில் இக்கூட்டமைப்பு லட்சக்கணக்கான ஹெக்டேர் நிலங்களை வாங்கிக் குவித்துக் கொண்டேயிருக்கின்றன. கடந்த ஓராண்டு காலமாக இக்கூட்டமைப்பு பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் முதலானவற்றை உற்பத்தி செய்து தமது நாடுகளுக்கு அள்ளிச் சென்றுள்ளன.

இக்கூட்டமைப்பிலுள்ள ஒரு நாடான கத்தார், பாகிஸ்தானின் வளமிக்க பஞ்சாப் மாநிலத்தில் ஏறத்தாழ 25,000 கிராமங்களை அழித்துவிட்டு பெரும்பண்ணை விவசாயத்தை நடத்த ஒப்பந்தம் போட்டுள்ளது. இதேபோல, சௌதி அரேபியா ஆட்சியாளர்கள் இந்தோனேசியாவில் ஏறத்தாழ 160 லட்சம் ஹெக்டேர் நிலங்களை வாங்கி உணவு உற்பத்தி செய்து தங்கள் நாட்டுக்கு அள்ளிக்கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளனர். எகிப்து நாட்டின் அரசு, ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள உகாண்டாவில் ஏறத்தாழ 8 லட்சம் ஹெக்டேர் நிலங்களை வாங்கி, தங்களுக்குத் தேவையான கோதுமை மற்றும் மக்காசோளம் உற்பத்தி செய்யக்கோரி அந்நாட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

எண்ணெய் வளமிக்க அரபு நாடுகள், கூட்டமைப்பின் மூலமாக மட்டுமின்றி, தனியாகவும் ஏழைநாடுகளின் நிலங்களை வாங்கிக் குவிக்கின்றன. எத்தியோப்பியா, கசகஸ்தானில் பல்லாயிரம் ஹெக்டேர் நிலங்களை சௌதி அரேபியா வளைத்துப் போட்டுள்ளது. ஐக்கிய அரபுக் குடியரசு, சூடானில் நிலங்களை வாங்கிக் குவித்துள்ளது. பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் தொடரும் எத்தியோப்பியாவில் பல்லாயிரம் ஹெக்டேர் நிலங்களை ஜெர்மானிய பெருந்தொழில் நிறுவனங்கள் வாங்கிக் குவித்துள்ளன. உணவு உற்பத்தி மட்டுமின்றி உயிர்ம எரிபொருள் உற்பத்திக்காகவும் ஆப்பிரிக்க கண்டத்தின் பல ஏழை நாடுகளில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆப்பிரிக்கக் கண்டத்தைப் போலவே, ஆசிய நாடுகளிலும் நிலப்பறிப்பு வேகமாக நடந்து வருகிறது. கம்போடியாவில் பழங்கள்-காய்கறிகள் பயிரிட்டு அள்ளிச் செல்ல பல்லாயிரம்

**''உணவு உற்பத்தியில் அவுட்சோர்சிங்'' என்பது ஒரு ஆக்கிரமிப்புப் போர். இப்போரை ஓட்டுச்சீட்டினாலோ ஓட்டுக்கட்சிகளாலோ தடுத்து நிறுத்திட முடியாது. அநீதியான இந்த ஆக்கிரமிப்புப் போரை உழைக்கும் மக்களின் புரட்சிப் போரினால் மட்டுமே முறியடிக்க முடியும்.**


படிப்பகம்

www.padippakam.com

ஹெக்டேர் நிலங்களை இஸ்ரேல் வாங்கிக் குவித்துள்ளது. குவைத் அரசு, தனது உயிர்ம எரிபொருள் தேவைக்காக மக்காச்சோளம் பயிரிட லாவோசில் நிலங்களை வாங்கிக் குவிக்கிறது. உலகின் இரண்டாவது மிகப் பெரிய அரிசி உற்பத்தி செய்யும் நாடான வியட்நாமில் கிடைபோடுவதற்காக ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து பல்லாயிரக்கணக்கான ஆடுகள் வந்திறங்குகின்றன.

சீன முதலாளித்துவ அரசு பல்வேறு ஏழை நாடுகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் கட்டுமானப் பணிகளில் உதவி செய்ய ஒப்பந்தங்கள் போட்டு வருகிறது. இந்த ஒப்பந்தங்களின்படி, பயனடையக்கூடிய ஏழை நாடுகள் தம்முடைய விளைநிலங்களில் ஒரு பகுதியை சீன அரசுக்குக் குத்தகைக்குக் கொடுக்க வேண்டும். இப்படி பல்வேறு ஒப்பந்தங்களின் மூலம் ஏறத்தாழ 20 லட்சம் ஹெக்டேர் நிலங்களை சீனா தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசுகள் மட்டுமல்ல; விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள், நிதியாதிக்கக் கும்பல்கள், நிதி முதலீட்டு வங்கிகள் முதலானவையும் ஏழை நாடுகளில் விவசாய நிலங்களைக் கைப்பற்றி வருகின்றன. உணவு பதப்படுத்தல் மற்றும் தானிய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஜப்பானிய கம்பெனிகள் 120 லட்சம் ஹெக்டேர் நிலங்களைப் பல நாடுகளில் வாங்கியுள்ளன. 2007-ஆம் ஆண்டில் மிட்சூயி என்ற நிறுவனம், பிரேசிலில் ஒரு லட்சம் ஹெக்டேர் விவசாய நிலத்தை, உயிர்ம எரிபொருள் தேவைக்கான சோயாவை உற்பத்தி செய்வதற்காக வாங்கியுள்ளது.

முதலீட்டு வங்கிகளான டாட்ஷே, கோல்டுமேன்சாக்ஸ் ஆகியன சீனாவின் ஒட்டுமொத்த கால்நடைத் தொழிற்துறையை — அதாவது; சீனாவின் மிகப்பெரும் வெண்பன்றிப் பண்ணைகள், கோழிப்பண்ணைகள், இறைச்சி பதப்படுத்தும் ஆலைகள் மற்றும் அவற்றின் நிலங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளன. பெரும் முதலீட்டு வங்கியான பிளாக்ராக், உலகெங்கும் நிலங்களை வளைத்துப் போடுவதற்காக பலகோடி டாலர்களை ஒதுக்கியுள்ளது. அண்மையில் திவாலாகி அமெரிக்க அரசால் மீட்கப்பட்ட முதலீட்டு வங்கியான மார்கன் ஸ்டேன்லி, உலகின் கோதுமைக் களஞ்சியம் என்றழைக்கப்படும் உக்ரைன் நாட்டில் 40,000 ஹெக்டேர் விவசாய நிலங்களைக் கைப்பற்றியுள்ளது. ரஷ்யாவின் ரினைசன்ஸ் கேபிடல் என்ற முதலீட்டு நிறுவனம் 3 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்களை உக்ரைனில் வளைத்துப் போட்டுள்ளது. சுவீடன் நாட்டைச் சேர்ந்த பிளாக் எர்த் பார்மிங், அல்ப்காட் அக்ரோ முதலான நிறுவனங்கள் ரஷ்யாவின் சைபீரிய பகுதியில் பல லட்சம் ஹெக்டேர் நிலங்களை வாங்கிக் குவித்துள்ளன.

இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளும் இத்தகைய நிலப்பறி வேட்டையில் இறங்கியுள்ளனர். அரசுத்துறை நிறுவனமான இந்திய வர்த்தகக் கழகம் மற்றும் குஜராத் அம்புஜா, ருசி சோயா, சுன்ஷன்வாலா வனஸ்பதி முதலானவை உள்ளடங்கிய 15 தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் குழுமம் சோயா மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்காக பாரகுவே, உருகுவே, பிரேசில் ஆகிய நாடுகளில் பத்தாயிரம் ஹெக்டேர் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. ''காருட்டுரி குளோபல்'' என்ற ரோஜா மலர் உற்பத்தி நிறுவனம் எத்தியோப்பியாவில் மக்காச்சோளம், நெல், காய்கறி மற்றும் இதர புணப் பயிர்களை உற்பத்தி செய்ய பல்லாயிரம் ஹெக்டேர் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துள்ளது. டாடாவின் கண்ணன் தேயிலை நிறுவனமும் எத்தியோப்பியாவில் காலூன்றியுள்ளது. இவை தவிர, இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய பர்மாவையும் பாமாயிலுக்காக இந்தோனேசியாவையும் முற்றுகையிட்டுள்ளனர்.

அந்நிய நாடுகளுக்குப் படையெடுப்பது மட்டுமின்றி, உள்நாட்டிலும் ஏற்றுமதிக்கான உணவு தானிய உற்பத்திக்காக இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் ஆங்காங்கே நிலங்களை வளைத்துப் போட்டு வருகின்றனர். குஜராத் மாநிலத்தில் ஜாம் நகர் அருகில் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டுள்ள ரிலையன்ஸ் நிறுவனம், ரேஞ்சர் ஃபார்ம்ஸ் என்ற பெயரில் ஏற்றுமதிக்கான மாம்பழங்களை உற்பத்தி செய்கிறது. டாடா நிறுவனமும் தன்பங்கிற்கு 60,000 ஏக்கர் நிலங்களை வாங்கிக் குவித்துள்ளது.




பா.ஜ.க. ஆளும் கர்நாடகத்தின் மங்களூரில் அரசின் நிலப்பறிப்பையும் மோசடியையும் எதிர்த்து கிரிஷிபூமி சம்ரக்ஷன சங்கம் (விவசாய நிலப் பாதுகாப்புச் சங்கம்) நடத்தும் ஆர்ப்பாட்டம்.

இப்படி உலகெங்கும் குறுக்கும் நெடுக்குமாக ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பல்களும் அந்நிய செலாவணி இருப்பை அபரிமிதமாகக் கொண்டுள்ள எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு ஏழை நாடுகளின் நிலங்களை வாங்கிக் குவிக்கின்றன. எதிர்காலத்தில் பெட்ரோலிய எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு மாற்று எரிபொருளுக்கான தேவை அதிகரிக்கும்போது, உயிர்ம எரிபொருள் மூலம் கொள்ளை இலாபமீட்டும் நோக்கத்துடன் மக்காச்சோளம், சோயா, காட்டாமணக்கு முதலானவற்றை உற்பத்தி செய்வதற்காக அவை பெருமளவில் நிலத்தை வளைத்துப் போட்டு வருகின்றன. இதுதவிர, பெரும் பண்ணைகளை உருவாக்கி உணவு தானியங்களை உற்பத்தி செய்து, உணவை ஒரு ஆயுதமாகக் கொண்டு ஏழை நாடுகளை ஆதிக்கம் செய்யும் நோக்கத்துடன் இப்படி விளைநிலங்களைக் கைப்பற்றி வருகின்றன.


இச்சூறையாடலுக்குச் சாதகமாக ஏற்கெனவே உலக வங்கியும், ஏகாதிபத்திய நாடுகளும் தாராளமயம் - உலகமயமாக்கத்தின் மூலம் தமது விவசாய உற்பத்திப் பொருட்களை மலிவான விலையில் கொட்டி, ஏழை நாடுகளின் விவசாயத்தையே



படிப்பகம்

www.padippakam.com

காலாவதியாக்கி விட்டன. பன்னாட்டு நிறுவனங்களோ ஒப்பந்த விவசாயம் மூலம் விவசாயிகளைப் போண்டியாக்கி வருகின்றன. ஏற்றுமதிக்கான விவசாயத்தை மேற்கொண்டு, உலகமயத்தால் போட்டி போட முடியாமல் விவசாயிகள் திவாலாகி வருகிறார்கள். உள்நாட்டுச் சந்தையிலும் வாய்ப்பில்லாமல், உலகச் சந்தையிலும் விற்க முடியாமல் விவசாயிகள் தற்கொலைக்கு ஆளாகி வருகிறார்கள். மாற்றுத் தொழில் கிடைத்தால் விவசாயத்தை விட்டே வெளியேறிவிடும் நிலையில் ஏழை நாடுகளின் விவசாயிகள் தத்தளிக்கிறார்கள். இதனைச் சாதகமாக்கிக் கொண்டு, நவீன காலனியாதிக்க முறையிலான நிலப்பறிப்பை ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பல்கள் புதிய உத்தியாகச் செயல்படுத்தி வருகின்றன.




உயிர்ம எரிபொருள் உற்பத்திக்காக விளைநிலங்களைப் பறித்து, உலக மக்களைப் பட்டினியில் தள்ளி பகற்கொள்ளையடிக்கும் கார்கில் நிறுவனத்துக்கு எதிராக, சுற்றுச்சூழல்வாதிகள் அமெரிக்காவில் நடத்தும் நூதனப் போராட்டம்.

இதற்கேற்ப பன்னாட்டு நிறுவனங்கள் வலுவான சட்டரீதியான ஏற்பாட்டையும் உருவாக்கி வருகின்றன. உலக வங்கியும் மறுசீரமைப்பு - வளர்ச்சிக்கான ஐரோப்பிய வங்கியும், நிலவுரிமை தொடர்பான சட்டங்களை பன்னாட்டுக் கம்பெனிகளின் பகற்கொள்ளைக்கு ஏற்பத் திருத்துமாறு ஏழை நாடுகளை நிர்பந்தித்து வருகின்றன. உணவுப் பஞ்சத்தில் சிக்கித் தவிக்கும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு 120 கோடி அமெரிக்க டாலர்களைக் கடனாகக் கொடுக்க உடன்பட்ட உலக வங்கி, அதற்குக் கைமாறாக ஆப்பிரிக்க நாடுகளின் நிலவுரிமை தொடர்பான சட்டங்களைத் திருத்தக் கோரியது. ஏறத்தாழ இதே வழியில், ஐரோப்பிய வங்கியும் மத்திய ஆசிய நாடுகளின் சட்டங்களைத் திருத்தக் கோரியுள்ளது. இவற்றை ஏற்று அர்ஜெண்டினா, மங்கோலியா, சிரியா, லெபனான் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் நிலவுரிமைச் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில், இந்துவெறி கும்பல் ஆளும் கர்நாடக மாநிலத்தில் பன்னாட்டுக் கம்பெனிகளின் நிலக் கொள்ளைக்கு ஆதரவாக சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெயரிலும் ஆலைகள் - அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டியமைப்பது என்ற பெயரிலும், அந்நிய நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களை அபகரித்து வருவதைப் போல, இப்போது ''உணவு உற்பத்தியில் அவுட்சோர்சிங்'' என்ற பெயரில் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் விளைநிலங்களை அபகரிக்கக் கிளம்பியுள்ளனர். மூர்க்கமாகப் பரவி வரும் இத்தகைய நிலப்பறிப்பால், பாரம்பரிய விவசாயமும் விவசாயிகளும் ஒழித்தக் கட்டப்படும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய ஆக்கிரமிப்புப் போர் தொடர்ந்தால், கோடிக்கணக்கான விவசாயிகளின் அரைகுறையான வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கும் நிலம் பறிக்கப்பட்டு அவர்கள் நிலமற்ற நாடோடிகளாக்கப்படுவார்கள். மேய்ச்சலுக்கான நிலங்களும் அந்நிய நிறுவனங்களால் கைப்பற்றப்படுவதால், இனி விவசாயிகள் ஆடு-மாடுகளைக் கூட வளர்த்து பிழைக்க முடியாது. நிலம் மட்டுமின்றி, அதை ஒட்டியுள்ள ஆறுகளும் ஏரிகளும் குளங்களும் ஆக்கிரமிக்கப்படுவதால், கிராமப்புற விவசாயிகளுக்குக் குடிக்கக் கூட தண்ணீர் கிடைக்காது.

விவசாயிகள் மட்டுமல்ல; உணவு உற்பத்தியிலிருந்து அதைப் பயன்படுத்தும் சாமானிய மனிதன் வரை சங்கிலித் தொடராக உள்ள விவசாயக் கூலிகள், கொள்முதல் செய்யும் வியாபாரிகள், சரக்குப் போக்குவரத்துத் தொழிலாளர்கள், சில்லறை வியாபாரிகள் வரை அனைவரும் விரட்டியடிக்கப்படுவார்கள். உணவு உற்பத்தியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள ஒரு சில உள்நாட்டு-வெளிநாட்டுக் கம்பெனிகளே, இவை அனைத்திலும் ஆதிக்கம் செய்யும். நஞ்சை செழிக்கும் காவிரி டெல்டா பகுதியில் இனி மக்காசோளமும் காட்டாமணக்கும் பயிரிடப்படலாம்; பசுமை நிறைந்த பஞ்சாப் வயல்களில் பாமாயிலுக்கான குட்டைப் பனை பயிரிடப்படலாம்.

இதுவொருபுறமிருக்க, உலகளவில் 110 கோடி மக்கள் நாளொன்றுக்கு 50 ரூபாய் கூட வருமானம் கிடைக்காமல் வறுமையில் சிக்கித் தவிக்கிறார்கள். 160 கோடி மக்கள் நாளொன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 100 வரை கிடைக்கும் வருமானத்தில் வாழ்க்கையை நடத்த முடியாமல் அவதிப்படுகிறார்கள். வறுமையில் தத்தளிக்கும் இவ்விரு பிரிவினரும் உலக மக்கள் தொகையில் 40 சதவீதத்தினராவர். ஒட்டு மொத்த ஆப்பிரிக்க கண்டமே பட்டினிக் கொடுஞ்சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக உலகெங்கும் உணவுப் பஞ்சம் தீவிரமடைந்து வருகிறது. இந்நிலையில், கோடிக்கணக்கான மக்களை மரணப் படுகுழியில் தள்ளிவிட்டும், அவர்களின் வாழ்வாதாரங்களைப் பிடுங்கியெறியவும், ''உணவு உற்பத்தியில் அவுட்சோர்சிங்'' என்ற பெயரில், ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பல்கள் ஓர் ஆக்கிரமிப்புப் போரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

இதுவொரு ஆக்கிரமிப்புப் போர். இப்போரை ஓட்டுச் சீட்டினாலோ ஓட்டுக் கட்சிகளாலோ தடுத்து நிறுத்திட முடியாது. அநீதியான இந்த ஆக்கிரமிப்புப் போரை உழைக்கும் மக்களின் புரட்சிப் போரினால் மட்டுமே முறியடிக்க முடியும். அனைத்துலக உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து, அத்தகைய புரட்சிப் போருக்கு நாம் அணிதிரளப் போகிறோமா? அல்லது நாட்டின் விவசாய வளர்ச்சிக்கான பாதை என்ற பெயரில் இந்த ஆக்கிரமிப்புப் போரை நியாயப்படுத்தும் ஓட்டுப் பொறுக்கிகளின் மோசடிகளை நம்பி ஏமாறப் போகிறோமா?

● சுடர்


படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்கா - ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான்

# வினை விதைத்தவன் தினை அறுக்க முடியுமா?

**ஆப்கானில் 'அமைதி'யை நிலைநாட்ட சிறிய இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளுடன் கூடிக்குலாவத் தயாராகி வருகிறது, அமெரிக்கா.**

ஆப்கானில் அமெரிக்கா நடத்தி வரும் தீவிரவாதத்துக்கு எதிரான போர் பலமுனைகளிலும் தோல்வியைத் தழுவி வருகிறது. அப்போர் தொடங்கி ஏழு ஆண்டுகளுக்கு மேலான பிறகும், அல் காய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்காவால் பிடிக்க முடியவில்லை. அல் காய்தா, தாலிபான் ஆகிய இசுலாமிய தீவிரவாத அமைப்புகளை அமெரிக்காவால் முற்றிலுமாக அழித்தொழிக்க முடியவில்லை என்பது ஒருபுறமிருக்க, ஆப்கானின் அண்டை நாடான பாகிஸ்தானையும் ஆட்டங்காணச் செய்துவிடும் அளவிற்கு அவ்வமைப்புகளின் செயல்பாடுகள் வளர்ந்து வருகின்றன.


அமெரிக்கா, ஆப்கானில் கர்சாய் என்பவர் தலைமையில் நிறுவியுள்ள பொம்மை அரசாங்கத்தின் அதிகாரம், அந்நாட்டின் தலைநகர் காபூலைத் தாண்டினால் செல்லாக்காசுதான் எனுமளவிற்கு முடங்கிப் போய்க் கிடக்கிறது. இன்னொரு புறமோ, தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற கதையாக, ஆப்கானிலும், ஆப்கான் எல்லையையொட்டியுள்ள பாகிஸ்தான் பகுதியிலும் தாலிபான் என்ற பெயரை வைத்துக்கொண்டு இயங்கி வரும் பல்வேறு இசுலாமிய தீவிரவாதக் குழுக்கள் ஆங்காங்கே குட்டி சமஸ்தானங்களை நடத்தி வருகின்றன. இந்த யுத்தப் பிரபுக்களை அழிப்பதற்காக அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தும் வான்வழித் தாக்குதல்களிலும், தரைவழித் தாக்குதல்களிலும் அப்பாவி மக்கள் கொத்துக்கொத்தாக மடிந்து வருகின்றனர்.

தனது தேர்தல் பிரச்சாரத்தின்பொழுதே ஆப்கானில் அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனப் பேசி வந்த ஒபாமா, அதிபரானவுடனேயே துருப்புகளை அதிகரிக்கும் நடவடிக்கையை எடுக்கத் தொடங்கிவிட்டார். எனினும், துருப்புகளை அதிகப்படுத்துவதால் ஆப்கானில் வெற்றியை அடைந்துவிடலாம் என்ற புது அதிபரின் புதுத் திட்டத்தை ஒபாமாவின் கூட்டாளிகளே ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். அமெரிக்காவின் ஐரோப்பியக் கூட்டாளிகள் (நேட்டோ) தங்களின் துருப்புகளை அதிகரிக்க மறுத்து வருகின்றனர்.

இன்னொருபுறமோ, ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டரும், வெளியுறவுக் கொள்கைக் கமிட்டியின் தலைவருமான ஜான் கெர்ரி, "ஆப்கானில் அமெரிக்கா தவறான பாதையில் போய்க் கொண்டிருப்பதாக" எச்சரிக்கிறார். அமெரிக்க முப்படைகளின் தலைமைத் தளபதி மைக் முல்லன், "ஆப்கானில் சமூக நலத் திட்டங்களை எந்தளவிற்கு நாம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகிறமோ அந்தளவிற்குத்தான் இராணுவ வெற்றி கிட்டும்" என்கிறார். இராணுவத் தளபதியின் இந்த யோசனையைக் கேட்டு கமுக்கமாகச் சிரிக்கிறது, ரசியா. "ஆப்கானை தான் ஆக்கிரமித்திருந்தபொழுது செயல்படுத்தாத சமூக நலத் திட்டங்களா?" என நக்கலாகக் கேட்கிறது ரசிய ஏகாதிபத்தியம்.

தோல்வியை ஒப்புக்கொண்டு ஆப்கானில் இருந்து வெளியேறுவது ஒன்றுதான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முன்னுள்ள கௌரவமான வாய்ப்பு என்பது ஒவ்வொருநாளும் துலக்கமாகி வருகிறது. அப்படி வெளியேறினால், அமெரிக்க இராணுவ பராக்கிரமம் பற்றி புனையப்பட்டுள்ள பல கதைகளும் உடைபட்டுப் போகும். உலகப் பொருளாதார வீழ்ச்சியினால், அமெரிக்கப் பொருளாதார ஆதிக்கம் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வரும் நிலையில், ஆப்கானில் இருந்து வெளியேறுவது அமெரிக்காவிற்கு இன்னொரு இடியாக இருக்கும். எனவே, அமெரிக்கா ஆப்கானில் தனது "வெற்றி"யைச் சாதிப்பதற்குச் சண்டைக்காரன் காலில் விழும் உத்தியை நடைமுறைப் படுத்த தயாராகி வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுபவை எனக் கருதப்படும் பல்வேறு இசுலாமியத் தீவிரவாதக் குழுக்கள் ஆப்கானிலும் பாகிஸ்தானிலும் இயங்கி வருகின்றன. இக்குழுக்களைச் சல்லடை போட்டுச் சலித்து, அமெரிக்காவின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானவை, பேரம் நடத்தினால் அமெரிக்காவோடு இணங்கிப் போகக் கூடிய குழுக்கள் என இரண்டாகப் பிரித்து, அமெரிக்காவோடு இணங்கிப் போகும் குழுக்களோடு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, அக்குழுக்களுக்குப் பொருளுதவியும் ஆயுத உதவியும் அளித்து, அல் காய்தாவோடு மோத விடுவது; இதன் மூலம் அமெரிக்கா மற்றும் நேட்டோ துருப்புகளுக்கு ஏற்பட்டு வரும் இழப்பை ஓரளவு குறைப்பது; இக்குழுக்களின் மூலம் அமெரிக்காவின் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வது எனத் திட்டம் போட்டு,






படிப்பகம்

www.padippakam.com

அதனை நிறைவேற்றுவதற்கான இரகசியப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தத் தொடங்கிவிட்டது, அமெரிக்கா.

அமெரிக்கா இப்படிபட்ட பிரித்தாளும் சூழ்ச்சித் திட்டத்தைத்தான் ஆப்கானில் நடைமுறைப்படுத்த வேண்டும் என புஷ் ஆட்சியின்பொழுதே அமெரிக்க அரசிற்கு ஆலோசனையாக வழங்கிய ரிச்சர்ட் ஹால்ப்ரூக் என்பவர்தான், இப்பொழுது ஆப்கான் மற்றும் பாகிஸ்தானுக்கான அமெரிக்க அரசின் சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், யூகோஸ்லாவியா நாட்டைப் பல கூறுகளாக உடைத்ததில் ஹால்ப்ரூக்கின் பங்கு முக்கியமானது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதிலிருந்தே இச்சூழ்ச்சித் திட்டத்தை வெறும் பேச்சுக்காக அமெரிக்கா சொல்லிக் கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

●●●

ஒப்பீட்டளவில் சிறிய (இசுலாமிய) மதவெறி அமைப்புகளைத் தத்தெடுத்துக் கொள்ளும் அமெரிக்காவின் இத்திட்டத்தை ஆப்கானுக்கு முன்பாகவே பாகிஸ்தானில் பரிசோதனை செய்து பார்க்கும் முயற்சிகள் தொடங்கிவிட்டன. பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையையொட்டி அமைந்துள்ள வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மௌலானா ஃபஸ்லுல்லா என்பவர் தலைமையில் செயல்பட்டு வரும் ஸ்வாட் தாலிபான் என்ற இசுலாமிய தீவிரவாத அமைப்பிற்கும் பாகிஸ்தான் இராணுவத்திற்கும் இடையே கடந்த இரண்டு ஆண்டுகளாக மோதல்கள் நடந்து வந்தன. இன்னும் தெளிவாகச் சொன்னால், பாகிஸ்தான் அரசு ஸ்வாட் தாலிபான் அமைப்பை ஒழித்துக் கட்டுவது என்ற பெயரில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் மீது ஒரு உள்நாட்டுப் போரையே நடத்தி வந்தது.

ஆப்கானில் அமெரிக்காவை எதிர்த்துப் போராடி வரும் குழுக்களுக்குத் தேவையான ஆயுதங்களைக் கடத்துவது, உள்ளூர் ஆட்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து ஆப்கானுக்கு அனுப்பி வைப்பது உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் ஸ்வாட் தாலிபான் செய்து வருவதாகக் குற்றஞ்சுமத்திய அமெரிக்கா, வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் அமைந்துள்ள வஜிரிஸ்தான் பகுதிகளின் மீது ஆளில்லா விமானங்களின் மூலம் தாக்குதல்களையும் நடத்தி வந்தது.

எனினும், இப்போரில் அமெரிக்காவிற்கும், பாகிஸ்தானுக்கும் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. இப்போரில் மட்டும் பாகிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த 1,800 சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும்; ஸ்வாட் தாலிபானை எதிர்த்துப் போராடுவதற்காக வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் இறக்கி விடப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவச் சிப்பாய்களும் காமாண்டோ போலீசு படையினரும் சொல்லிக் கொள்ளாமலேயே தங்கள் பதவியை விட்டு விலகி ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. மறுபுறம், ஸ்வாட் தாலிபான் அமைப்பு கடந்த ஆண்டு இறுதியிலேயே வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள மாலாகந்த் பகுதி முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, போட்டி அரசாங்கத்தை நடத்தத் தொடங்கியது.



ஸ்வாட் சமவெளியில் இருந்து அகதிகளாக வெளியேறிச் செல்லும் குடும்பம்.

இப்பகுதியில் இயங்கி வந்த வானொலி நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. ஸ்வாட் தாலிபான் அமைப்பு விடுக்கும் மதக் கட்டளைகளுக்கு எதிராக நடந்து கொண்டால், அவ்வமைப்பு ஷாரியத் சட்டப்படி வழங்கும் சாட்டையடி, தலையைத் துண்டித்து முண்டத்தை விளக்குக் கம்பங்களில் தொங்கவிடுவது போன்ற கொடூர-காட்டுமிராண்டித்தனமான தண்டனைகளுக்கு அஞ்சியே திரையரங்குகள், வீடியோ பார்லர்கள், இசைக் குறுந்தகடுகளை விற்பனை செய்யும் கடைகள் தாமாகவே வியாபாரத்தை நிறுத்திக் கொண்டன; அல்லது இழுத்து மூடப்பட்டன. ஜனநாயகம் என உச்சரிப்பது கூட ''ஹராம்'' என முத்திரை குத்தப்பட்டுத் தடை செய்யப்பட்டது. ஆண்கள் சவரம் செய்து கொள்வதுகூட மதத்திற்கு எதிரான குற்றமெனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதால், முடிதிருத்தும் நிலையங்கள்கூட செயல்பட முடியாத ''பயங்கர'' நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. பெண் கல்வி தடை செய்யப்பட்டு, 200-க்கும் மேற்பட்ட மகளிர் கல்வி நிலையங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

சாந்த் பீபீ என்ற பெண்ணுக்கு தாலிபான் தீவிரவாதிகள் பொது இடத்தில் அளித்த காட்டுமிராண்டித்தனமான கசையடி தண்டனை.



வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் அமைந்துள்ள ஸ்வாட் சமவெளி பாகிஸ்தானின் சுவிட்சர்லாந்து எனக் கூறப்படுகிறது. இச்சமவெளியை மையமாகக் கொண்டு நடந்து வந்த சுற்றுலா தொழில் நிலைகுலைந்து போய்விட்டதால், அம்மாகாணத்தின் பொருளாதாரமே ஆடிப் போய்க்கிடக்கிறது. இப்பொருளாதார வீழ்ச்சி, அமெரிக்கா மற்றும் பாக். இராணுவத் தாக்குதல்கள், ஸ்வாட் தாலிபானின் 'எழுச்சி' ஆகிய காரணங்களால் இம்மாகாணத்தில் இருந்து ஏறத்தாழ 5 இலட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துவிட்டனர்.

●●●


படிப்பகம்

www.padippakam.com




பஷ்டுன்கள் என்றழைக்கப்படும் பழங்குடியினத்தவர் பெரும்பான்மையாக வசித்து வரும் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் 1969-க்கு முன்புவரை தன்னாட்சி பெற்ற தனி சமஸ்தானமாகத்தான் இயங்கி வந்தது. பழங்குடியினச் சட்டங்கள், மரபுகள், நிர்வாக அமைப்புகளின் இடத்தை முதலாளித்துவ வடிவிலான நிர்வாக இயந்திரம் கைப்பற்றிக் கொண்ட பிறகு, அதற்கே உரித்தான ஊழல்-அதிகார வர்க்க முறைகேடுகள் உள்ளிட்ட அனைத்து அலங்கோலங்களையும் அப்பழங்குடி மக்கள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

1969-க்கு முன்பு இம்மாகாணம் ஷாரியத் சட்டப்படியே இயங்கி வந்தாலும்கூட, தண்டனைகள் கொடூரமானதாகவோ காட்டுமிராண்டித்தனமானதாகவோ இருந்ததில்லை. வழக்குகள் நியாயமான முறையில் எளிமையாகவும் நியாயமாகவும் தீர்க்கப்பட்டன. இதனால், இம்மாகாணம் பாகிஸ்தானோடு இணைக்கப்பட்டு 40 ஆண்டுகள் கழிந்த பிறகும்கூட, இம்மக்களால் பாகிஸ்தானின் மைய நீரோட்டத்தோடு கலக்க முடியாமல், அந்நியப்பட்டே நிற்கின்றனர். 1969-க்கு முன்பிருந்த நிலைமைக்குத் திரும்ப வேண்டும் என்ற ஏக்கம்கூட அம்மக்களிடம் இருந்து வருகிறது. பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகார அரசின் மீதும், அந்நாட்டு மேட்டுக்குடி கும்பல் மீதும் இம்மக்களுக்கு இருந்து வரும் வெறுப்பை ஸ்வாட் தாலிபான் அறுவடை செய்து கொண்டது.

1969-க்கு முன்பு இம்மாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு இனக்குழு சபையும், ஒவ்வொரு வீட்டைச் சேர்ந்த (ஒரு) ஆணும் சமூக நிர்வாகத்தில் பங்கு பெறும் அதிகாரம் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால், இப்பொழுதோ ஸ்வாட் தாலிபானின் மதவெறி சர்வாதிகாரம் அம்மக்களிம் மீது திணிக்கப்பட்டுள்ளது. சாந்த் பீபீ என்ற இளம் பெண்ணுக்கு ஸ்வாட் தாலிபான் அளித்த கசையடி தண்டனை, இவ்வமைப்பின் ஆணாதிக்கம் நிறைந்த மதவெறி பிற்போக்குத்தனத்தை ஊர் உலகமெங்கும் அம்பலப்படுத்திவிட்டது. பாகிஸ்தானிலேயே இவ்வமைப்பின் மக்கள் விரோதத் தன்மைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.


கடந்த இரண்டு ஆண்டுகளாக ஸ்வாட் தாலிபானோடு சண்டை போட்டுக் கொண்டிருந்த பாகிஸ்தான் அரசு, பிப்ரவரி 16, 2009 அன்று அவ்வமைப்போடு ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அதனைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின்படி, வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் உள்ள மாலாகந்த் பகுதியைச் சேர்ந்த ஏழு மாவட்டங்களில் (ஸ்வாட் சமவெளியையும் உள்ளடக்கி) ஷாரியத் நீதிமன்றங்களை அமைத்துக் கொள்ள ஸ்வாட் தாலிபானுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் துணை அதிபர் ஜோ பிடேன் மற்றும் அமெரிக்க இராணுவ அமைச்சர் ராபர்ட் கேட்ஸ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்துப் பேசியிருக்கின்றனர். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் அமைதியைக் கொண்டு வரும் நோக்கத்தில்தான் இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும்; இந்த அமைதியை ஆப்கானில் இயங்கும் அல் காய்தா தீவிரவாதிகளை ஒழிப்பதற்குப் பயன்படுத்தப் போவதாகவும் கூறி, இந்தப் பிற்போக்கு ஒப்பந்தத்தை அமெரிக்காவும் பாகிஸ்தானும் நியாயப்படுத்தி வருகின்றன.

இசுலாமாபாத் (மார்ரியட் ஐந்து நட்சத்திர விடுதி மீது நடத்தப்பட்ட தாக்குதல்), லாகூர் (சிறீலங்கா கிரிக்கெட் அணியினர் மற்றும் போலீசு பயிற்சி நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள்) என அடுத்தடுத்து பாகிஸ்தானில் நடைபெற்று வரும் தீவிரவாதத் தாக்குதல்கள் பாக். அரசின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. இத்தாக்குதல்கள் லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகம்மது உள்ளிட்ட பல்வேறு இசுலாமியத் தீவிரவாதக் குழுக்களின் மீதான பாக்.இராணுவத்தின் கட்டுப்பாடு தளர்ந்து வருவதையும், வளர்த்த கடா மார்பில் பாயத் தயாராகி விட்டதையும் காட்டுவதாக பாகிஸ்தானைச் சேர்ந்த பத்திரிகைகளே குற்றஞ்சுமத்துகின்றன.

பாகிஸ்தானை ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும், நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முசுலீம் கட்சிக்கும் இடையே நடந்து வரும் அதிகாரப் போட்டிக்கான மோதல்கள்; பாகிஸ்தான் அதிபர் ஜர்தாரி மற்றும் இராணுவத்திற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே நடந்து வரும் உரசல்கள்; பாகிஸ்தான்

**பெண்களுக்கு எதிரான வன்முறைகளை மதத்தின் பெயரால் கட்டவிழ்த்துவிடும் தாலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக பாக். பெண்ணுரிமை அமைப்புகள் இசுலாமாபாத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம்.**






படிப்பகம்

www.padippakam.com

இராணுவமும் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பும் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டு நடக்குமா என்பது குறித்து எழுப்பப்பட்டு வரும் சந்தேகங்கள்; பல்வேறு இசுலாமியத் தீவிரவாதக் குழுக்களுக்கு இடையேயும், சன்னி மற்றும் மொஜாஹிர் மதக் குழுக்களுக்கு இடையேயும் நடந்து வரும் தெருச் சண்டைகள்; பாகிஸ்தான் அரசு-இராணுவம் மட்டுமின்றி, சமூகமும் இசுலாமியமயமாக்கப்பட்டிருப்பது; போண்டியாகி விட்ட பொருளாதாரம் — இவையனைத்தும் அந்நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி விட்டன.



அமெரிக்காவின் சிறப்புத் தூதர் ரிச்சர்ட் ஹால்ப்ரூக் பாகிஸ்தானுக்கு வருகை தந்ததை எதிர்த்து இசுலாமிய மதவாத அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

ஒருபுறம், அமெரிக்க மேலாதிக்கம், இசுலாமிய மதத் தீவிரவாதம், இராணுவ சர்வாதிகாரம் ஆகியவற்றை எதிர்த்தும், ஜனநாயக உரிமைகளைக் கோரியும் அந்நாட்டின் வழக்குரைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் நடத்தி வரும் போராட்டங்கள், போலீசு - இராணுவத்தோடு மோதும் அளவிற்கு போர்க் குணத்தோடு நடந்து வந்தாலும், அப்போராட்டங்கள் முதலாளித்துவ ஜனநாயக வரம்பிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றன. இன்னொருபுறமோ, பாகிஸ்தான் மக்கள் மத்தியில் எழுந்து வரும் அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பை இசுலாமியத் தீவிரவாதக் குழுக்கள் கடத்திச் செல்ல முயலுகின்றன. இப்படிபட்ட சூழ்நிலையில் ஸ்வாட் தாலிபானோடு பாக். அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் எரிகிற கொள்ளியில் எண்ணெயை ஊற்றுவது போல்தான் அமையும்.

•••

**பா**கிஸ்தானில் எழுந்துள்ள இந்த அரசியல் குழப்பங்களையும், நிச்சயமற்ற தன்மையையும் காட்டி, அமெரிக்கா பாகிஸ்தானைக் கைகழுவி விட வேண்டும்; அமெரிக்கா நடத்தி வரும் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானுக்குப் பதிலாகத் தன்னை இளைய பங்காளியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என இந்தியா தூபம் போட்டு வருகிறது.

பாகிஸ்தானைக் கழட்டிவிட்டால், தெற்காசியாவிலும் மேற்காசியாவிலும் இதைவிடப் பெரிய தலைவலியைத் தான் எதிர்கொள்ள நேரிடும் என்பதை அறியாத முட்டாள் அல்ல அமெரிக்கா. மேலும், பாகிஸ்தான் வசமுள்ள அணு ஆயுதங்கள் அல் காய்தா போன்ற முசுலீம் தீவிரவாத அமைப்புகளின் கைகளில் சிக்காமல் இருக்க வேண்டும் என்றால், பாகிஸ்தான் இராணுவமும், ஓட்டுக்கட்சிகளும் ''டபுள் கேம்'' ஆடுவதை ஓரளவிற்குச் சகித்துக் கொண்டு போக வேண்டிய நிர்பந்தமும் அமெரிக்காவிற்கு இருக்கிறது. அதனால்தான் இந்தியாவின் அறிவுரைகளுக்கு மாறாக, அமெரிக்கா இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளை எதிர்த்துப் போராடுவதற்காக பாகிஸ்தானுக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் 750 கோடி அமெரிக்க டாலர் அளவிற்கு உதவிகள் அளிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. மேலும், ஆப்கான் பிரச்சினைக்கும் காஷ்மீர் பிரச்சினைக்கும் இடையே தொடர்பிருப்பதாகக் கருதும் ஒபாமா நிர்வாகம், காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா முன் வர வேண்டும் என்ற நிர்பந்தத்தையும் கொடுத்து வருகிறது.

ஆப்கானை ஆக்கிரமித்திருந்த சோவியத் ரசியாவை அந்நாட்டில் இருந்து விரட்டியடிப்பதற்காக, முஜாஹிதீன் என்றழைக்கப்பட்ட இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளைக் கட்டியமைத்து வளர்த்துவிட்டதே அமெரிக்காதான். தாலிபான்கள் ஆப்கானில் ஆட்சியைக் கைப்பற்றியபொழுது, உடனடியாக எவ்வித தயக்கமுமின்றி தாலிபான்களின் மதவெறி ஆட்சிக்கு அங்கிகாரம் அளித்த பெருமையும் அமெரிக்காவிற்கு உண்டு. அமெரிக்காவின் இந்த அங்கீகாரத்தின் பின்னே, யுனோகோல் என்ற அமெரிக்க நிறுவனத்தின் எண்ணெய் வர்த்தக நலன்கள் ஒளிந்திருந்தன. வளர்த்த கடா மார்பில் பாய்ந்த பிறகுதான், அமெரிக்கா தெற்காசியாவில் இசுலாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக முண்டா தட்டியது.

இப்பொழுது அல் காய்தா, தாலிபான் தீவிரவாதிகளை அழிப்பது என்ற பெயரில் ''நல்ல'' இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கொம்பு சீவிவிடத் துடிக்கிறது, அமெரிக்கா. இது ஒருபுறம், ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் சகோதரச் சண்டையையும் உள்நாட்டுக் குழப்பத்தையும் தூண்டி விடும்; இன்னொருபுறம், இசுலாமியத் தீவிரவாதம் தெற்காசியப் பகுதியில் இன்னும் ஆழமாக வேரூன்றுவதற்கான வாய்ப்புகளைத் தங்கத் தட்டில் வைத்துக் கொடுக்கும்.

இந்து-இந்திய தேசியத்தில் மூழ்கிப் போயுள்ள இந்திய நடுத்தர வர்க்கம் கனவு கண்டு கொண்டிருப்பதைப் போல தடா, பொடா போன்ற பாசிசச் சட்டங்களின் மூலமோ, அரசு பயங்கரவாதத்தை ஏவிவிடுவதன் மூலமோ, பாகிஸ்தான் மீது ஒரு திடீர் போரை நடத்துவதன் மூலமோ இசுலாமியத் தீவிரவாதத்தைத் தோற்கடித்து விட முடியாது.

மாறாக, அமெரிக்காவின் மேலாதிக்கத்தை எதிர்ப்பது; அமெரிக்காவின் மேலாதிக்க நோக்கங்களுக்கு அடியாளாகச் செயல்பட்டு வரும் இந்திய-பாகிஸ்தானைச் சேர்ந்த ஆளும் கும்பலை எதிர்ப்பது; இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளை மட்டுமின்றி, அமெரிக்காவின் மேலாதிக்க நோக்கங்களுக்கு எடுபிடியாக நடந்து வரும் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி பயங்கரவாத கும்பலையும் எதிர்த்துப் போராடுவது; தெற்காசியாவில் இந்தியாவின் துணை மேலாதிக்க நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி எதிர்ப்பது; தெற்காசியாவைச் சேர்ந்த நாடுகளின் சுதந்திரத்தையும், இறையாண்மையையும் பாதுகாப்பது; இப்பகுதியைச் சேர்ந்த அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமையையும், உழைக்கும் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துவது ஆகிய கோரிக்கைகளின் அடிப்படையில் புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் தலைமையில் தெற்காசிய மக்கள் ஒருங்கிணைந்த போராட்டங்களை நடத்துவதன் மூலம் மட்டுமே தெற்காசியப் பகுதி எதிர்கொண்டுள்ள அபாயங்களை முறியடிக்க முடியும்.

• செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசு கயவாளிகளுக்குச் செருப்படி மட்டும் போதாது!

## நீதி மறுக்கப்படும்பொழுது, "கண்ணியமிக்க"ப் போராட்டங்களுக்கு இடம் இருக்காது.

***"ஒரு ஆலமரம் விழும்போது பூமியில் அதன் அதிர்வுகள் இருக்கத்தான் செய்யும்".*** இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதும் டெல்லியிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் சீக்கியர்களுக்கு எதிரான கலவரங்களில், பலர் காங்கிரசு குண்டர்களால் கொல்லப்பட்டது குறித்துக் கேட்டபோது ராஜீவ் காந்தி திமிராகக் கூறிய பதில் தான் இது. அந்தக் கலவரத்தின் போது காங்கிரசு குண்டர்கள், கையில் வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு சீக்கியர்களைத் தேடித்தேடிக் கொன்றனர். இதுநாள் வரை கலவரத்துக்குக் காரணமான காங்கிரசு தலைவர்கள் யாரும் தண்டிக்கப்படவில்லை. 25 ஆண்டுகளாக பல்வேறு போராட்டங்களுக்கு பிறகும் சீக்கியர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. மன்மோகன் சிங் பிரதமராகப் பதவியேற்ற பிறகு, அவரை வைத்துச் சீக்கியர் படுகொலைகளுக்காக மன்னிப்புக் கேட்கும் நாடகம் ஒன்றை நடத்திக் காட்டினார்களே தவிர, குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை.

அந்தக் கலவரத்தைத் தூண்டி விட்டதுடன், சீக்கியர் படுகொலைகளைத் தலைமையேற்று நடத்தியதாக ஜெகதீஷ் டைட்லர், சஜ்ஜன் குமார், எச்.கே.எல் பகத் ஆகிய காங்கிரஸ் தலைவர்கள் மீது பல்வேறு வழக்குகள் பதியப்பட்டு கடந்த 25 ஆண்டுகளாக விசாரணை நடந்து வருகிறது. இதில் பகத் எவ்விதத் தண்டனையுமின்றிச் செத்துப் போய்விட்டார். மீதமிருந்த சஜ்ஜன் குமார், டைட்லர் ஆகிய இருவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்களை விடுவிப்பதாகச் சமீபத்தில் மையப் புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) அறிவித்தது. இதையடுத்து இவர்களிருவரும் காங்கிரசு சார்பாக, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக காங்கிரசு அறிவித்தது.

**உற்றார்-உறவினர்களை இழந்து, கைக்குழந்தையுடன் கதறும் சீக்கியப் பெண்.** (கோப்புப் படம்)



இவர்கள் மீதிருந்த குற்றச்சாட்டுகளை சி.பி.ஐ. விலக்கிக் கொண்டது ஏனென சி.பி.ஐ.யைக் கட்டுப்படுத்தும் உள்துறை அமைச்சரான சிதம்பரத்திடம் சீக்கியப் பத்திரிக்கையாளரான ஜர்னைல் சிங் கேட்டார். அதற்கு ராஜீவின் அதே திமிர்த்தனத்துடன் பதிலளித்த சிதம்பரம், சி.பி.ஐ.யைத் தான் கட்டுப்படுத்தவில்லை எனக் கூறினார். இதனால் கொதிப்படைந்த அந்த சீக்கியர் தான் அணிந்திருந்த செருப்பிலொன்றை சிதம்பரத்தின் முகத்துக்கு நேராய் வீசியெறிந்தார்.

தைனிக் ஜாக்ரன் எனும் தினசரியில் பணியாற்றும் ஜர்னைல் சிங் என்ற பத்திரிக்கையாளர் தான் இவ்வாறு செய்தார். உடனே மற்ற பத்திரிக்கையாளர்களும், முதலாளித்துவ அறிவுஜீவிகளும், ஒரு பத்திரிக்கையாளர் இப்படிச் செய்யலாமா, அவர் பேனாவைத்தான் ஆயுதமாக ஏந்த வேண்டும், இப்படி செருப்பையல்ல என்று புலம்பத் தொடங்கி விட்டனர். ஆனால் சம்பவத்திற்குப் பிறகு பேசிய அவர், தனது நடவடிக்கை தவறென்றாலும், தான் எழுப்பிய பிரச்சனையும் கேள்வியும் இன்னமும் விடையளிக்கப்படாமல் இருக்கிறது எனக் கூறினார்.



**சாது மிரண்டால் காடு கொள்ளாது: ஜர்னைல் சிங்.**

ஒரு நாட்டின் உள்துறை அமைச்சரின் மீதே செருப்பெடுத்து வீசிய ஜர்னைல் சிங்கின் நியாயமான உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு நாம் முதலில் சீக்கியர் படுகொலை பற்றியும், அதற்குப் பிறகு 25 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படும் விசாரணை பற்றியும், அவை சீக்கிய சமுதாயத்தினரின் மனதில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

•••

**அ**க்டோபர் 31, 1984; டெல்லியின் திரிலோக்புரி காலனி; அடித்தட்டு வர்க்க சீக்கியர்கள் அதிகமாக வசிக்கும் அந்தக் காலனியின் 32-வது பிளாக்கிற்குள் நுழைகிறது ஒரு கும்பல். கையில் காங்கிரசுக் கொடியுடன், கத்தி, கம்பு, மற்றும் மண்ணெண்ணெய்க் கேனுடன். 'பழிக்குப் பழி, இரத்தத்திற்கு இரத்தம்', 'சீக்கியர்கள் துரோகிகள்; அவர்களைக் கொல்லுங்




படிப்பகம்


www.padippakam.com

கள்' என முழங்கிக் கொண்டு கொலைவெறியுடன் நுழைகிறது அந்தக் கும்பல். காலனியின் நுழைவாயில் கான்கிரீட் குழாய்களைக் கொண்டு மூடப்பட்டது. அதன் பிறகு நிறுத்தி நிதானமாக உணவு இடைவேளைவிட்டு, அடுத்த 48 மணி நேரத்தில், எந்த நாகரீக மனிதனும் செய்யத் துணியாத காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை அந்தக் கும்பல் செய்தது. 350 சீக்கிய ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்பட்டனர். சீக்கிய ஆண்களின் தலைமுடியை பலாத்காரமாக வெட்டுவதில் தொடங்கி, அவர்களது கைகளையும் கால்களையும் ஒவ்வொன்றாக வெட்டினார்கள். சிலரை உயிருடன், கழுத்தில் டயரை மாட்டி, எரித்துக் கொன்றார்கள். சிறு குழந்தைகள் என்றும் பார்க்காமல் நெருப்பில் தூக்கியெறிந்தார்கள். நவம்பர் 2-ஆம் தேதி பத்திரிக்கையாளர்கள் சென்ற போது, கால் பதித்து நடக்கமுடியாத அளவிற்கு அந்தப் பகுதியே இரத்தமும் சதையுமாக நிரம்பிக் கிடந்தது.

சீக்கிய பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் பஞ்சாபில் பாசிச இந்திரா கட்டவிழ்த்து விட்ட அரசு பயங்கரவாத அடக்குமுறையாலும், சீக்கியர்கள் புனிதமாகக் கருதும் பொற்கோயில் மீது நடத்திய இராணுவத் தாக்குதலாலும் சீக்கிய மக்கள் குமுறிக் கொண்டிருந்த நிலையில், இந்திரா காந்தி, அவரது சீக்கியப் பாதுகாவலர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அன்று தொடங்கி, அவர் அடக்கம் செய்யப்படும் வரை மூன்று நாட்கள் டெல்லி முழுவதுமிருந்த சீக்கியர்கள் இது போலத் தாக்கப்பட்டார்கள், அவர்களது உடைமைகள் சூறையாடப்பட்டன, குருத்துவாராக்கள் கொளுத்தப்பட்டன. மூவாயிரத்துக்கும் அதிகமான சீக்கியர்களைப் பலி கொண்ட இந்தத் தாக்குதல்கள் அனைத்தும், அரசின் ஆதரவுடன் நடைபெற்றது. போலீசோ இதனைக் கைகட்டி வேடிக்கை பார்த்தது.

**பதவியும் அதிகாரமும் கொடுத்து பாதுகாக்கப்படும் காங்கிரசு பயங்கரவாதப் படைத் தளபதிகள்: சஜ்ஜன் குமார், ஜெகதீஷ் டைட்லர் (கீழ்படம்).**





கலவரம் நடந்ததோ மூன்று நாட்கள் தான்; ஆனால், அது பற்றிய விசாரணையோ கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்கிறது. இந்தக் கலவரத்தில் ஈடுபட்ட காங்கிரசு தலைவர்களைக் காப்பாற்ற விசாரணைக் கமிசனுக்கு மேல் விசாரணைக் கமிசன்ாக அடுத்தடுத்து வந்த அரசுகள் அமைத்தன. மார்வா கமிசன் (நவ. 1984), மிஸ்ரா கமிசன் (மே 1985), தில்லான் கமிட்டி (நவ. 1985), கபூர் மிட்டல் கமிட்டி (பிப். 1987), ஜெயின் பானர்ஜி கமிட்டி (பிப். 1987), அகுஜா கமிட்டி (பிப். 1987), பொட்டி ருசா கமிட்டி (மார்ச் 1990), ஜெயின் அகர்வால் கமிட்டி (டிச. 1990), நருலா கமிட்டி (டிச. 1993), நானாவதி கமிட்டி (மே 2000) என இதுவரை பத்து விசாரணைக் கமிசன்கள் அமைத்தும் ஒரு குற்றவாளிகூட இதுவரை தண்டிக்கப்படவில்லை.



**இரத்தக் கவிச்சியுடன் பிண வண்டியாகிய இரயில்கள்: சீக்கிய இனத்துக்கு எதிராக காங்கிரசு நடத்திய கொலை வெறியாட்டம்.** (கோப்புப்படம்).

இந்தக் கலவரங்களுக்குத் தலைமையேற்ற சஜ்ஜன்குமார், ஜெகதீஸ் டைட்லர் போன்ற தலைவர்களுக்கெதிராக சாட்சி சொன்னவர்கள் தொடர்ந்து மிரட்டப்படுவதும், லஞ்சம் கொடுத்து சாட்சிகளின் வாயை அடைப்பதும் நடந்தன. இதில் டைட்லருக்கெதிராக சாட்சியமளித்தவர்களில் முக்கியமானவர்கள் இருவர். சுரீந்தர் சிங் என்ற சீக்கிய மதத்தலைவர் ஒருவர், ஜஸ்பீர் என்பவர் மற்றொருவர். ஜஸ்பீர் ஆரம்பத்தில் டைட்லர் கலவரக் கும்பலை வழிநடத்தியதைப் பார்த்ததாகக் கூறினாலும், பின்னர் அப்படியில்லை என மறுத்துவிட்டார். தனது வாக்குமூலத்தை மறுத்ததற்கு மறுநாள் அமெரிக்காவிற்குச் சென்றவர் இன்றுவரை திரும்பவில்லை.

வழக்கை விசாரித்து வந்த சி.பி.ஐ. சாட்சியைக் காணவில்லை, கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறியது. ஆனால்,



படிப்பகம்

www.padippakam.com

ஜஸ்பீரோ கலிபோர்னியாவிலிருந்து, 'இந்தியாவிற்குத் திரும்பினால் எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லை' எனத் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். இதுவரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றே சி.பி.ஐ. கூறிவருகிறது.

இன்னொரு சாட்சியான சுரீந்தர் சிங் 2000-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நானாவதி கமிசன் வரைக்கும் டைட்லருக்கு எதிராக சாட்சியமளித்தவர். அவரே 2002-ஆம் ஆண்டில் தனது சாட்சியத்தை மறுத்தார். அவரும் தற்போது டைட்லரின் மிரட்டலுக்கு பயந்துதான் சாட்சியத்தை மறுத்ததாகக் கூறிவருகிறார்.

சாட்சிகளைக் கலைப்பதற்குப் போதுமான அவகாசம் கொடுத்து விட்டு இப்போது டைட்லரும், சஜ்ஜன்குமாரும் நிரபராதிகள் என சி.பி.ஐ. கூறுகிறது. விசாரணை நடைபெற்ற காலத்தில் டைட்லரோ, சஜ்ஜன் குமாரோ காங்கிரசு கட்சியில் ஓரங்கட்டப்பட வில்லை. அவர்கள் எல்லா பதவிகளையும் அதிகாரங்களையும் அனுபவித்துத்தான் வந்துள்ளனர். இந்திரா குடும்பத்து விசுவாசிகளான அவர்களை இன்றளவும் பாதுகாக்கும் நோக்கத்தில்தான், பிரச்சனை ஏற்படும் எனத் தெரிந்தும், இந்தத் தேர்தலில் அவர்களுக்கு சீட்டுக் கொடுக்கப்பட்டது. சீக்கியர்களைக் கொடூரமாகக் கொன்று குவித்தவர்களை ஆதரிக்கும் காங்கிரசு கட்சிக்குத்தான் 'இடது', வலது போலி கம்யூனிஸ்டு கட்சியினர், மதசார்பற்ற கட்சி என முற்போக்கு வேசம் கட்டி வருகின்றனர்.

விசாரணைக் கமிசன்கள், சி.பி.ஐ. யின் கழுத்தறுப்பு வேலைகளைக் கண்டு மனமுடைந்துதான் ஜர்னைல் சிங் சிதம்பரத்தின் மீது செருப்பெடுத்து வீசினார். ஆனால், கட்சிக்குத் தனது விசுவாசத்தைக் காட்டுவதற்காகவும், பதவிகளையும் அதிகாரத்தையும் பெற்றுப் பொறுக்கித் தின்பதற்காகவும், ஆயிரக்கணக்காண அப்பாவிச் சீக்கியர்களைக் கொன்று, தனது பணபலத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி இதுவரை தண்டனையிலிருந்து தப்பி வரும் டைட்லரைப் போன்ற கொலைகாரர்களைச் செருப்பால் அடித்தால் மட்டும் போதாது, அவர்களை மக்கள் மன்றத்தில் நிறுத்தித் தூக்கிலிட வேண்டும், அதுதான் அவர்களுக்குச் சரியான தண்டனையாக இருக்க முடியும்.

● திப்பு

# கருப்புப் பணத்திற்கு எதிராக பா.ஜ.க.வின் சவடால்: குரைக்கிற நாய் கடிக்காது!

கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கொண்டு கல்லெறிகிறது, பாரதீய ஜனதா கட்சி. தேர்தல் என்றாலே கருப்புப் பணத் திருவிழா என்பது ஊரறிந்த உண்மை. கட்சிக்குள் ''சீட்'' வாங்குவதில் தொடங்கி, தேர்தலில் வென்று, ஆட்சியைப் பிடித்து, ஆட்சி கவிழ்ந்து விடாமல் காப்பது முடிய ஓட்டுக்கட்சி அரசியலில் கருப்புப் பணம் புகுந்து விளையாடுவது ஒவ்வொரு நாளும் அம்பலமாகி வருகிறது. அப்படிபட்ட புழுத்து நாறும் ஓட்டுச்சீட்டு அரசியலில் புரண்டு கொண்டிருக்கும் பா.ஜ.க., ''தாம் ஆட்சிக்கு வந்தால், சுவிஸ் நாட்டில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை நூறு நாட்களுக்குள் தோண்டியெடுத்துக் கொண்டு வந்துவிடுவோம்'' எனத் தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளது.

காங்கிரசுக் கட்சியோ இக்கருப்புப் பண வேட்டை பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ''பா.ஜ.க., கருப்புப் பணம் பற்றிப் பொய்யான தகவல்களைப் பரப்புவதாக''க் குற்றஞ்சுமத்தி வரும் அக்கட்சி, கருப்புப் பணம் பற்றிய உண்மை விவரங்களை வெளியிட மறுக்கிறது. வலது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குருதாஸ்தாஸ் குப்தா, ''இக்கருப்புப் பணம் பற்றி நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் தான் எழுதிய கடிதத்தை அவர்கள் குப்பைக் கூடைக்குள் தூக்கியெறிந்து விட்டதாக''ப் புலம்பி வருகிறார்.

சுவிஸ் வங்கியில் பதுக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை நோண்டினால், ராஜீவ் காந்தி குடும்பம் போஃபர்ஸ் ஊழலில் கொள்ளையடித்த பணம் சுவிஸ் வங்கியில் பதுங்கிக் கிடக்கும் மர்மமும் அம்பலமாகிவிடுமே என்ற அச்சம்கூட காங்கிரசின் மௌனத்திற்குக் காரணமாக இருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, முதலாளிகள் மீது விதிக்கப்படும் வரிகள் அதிகமாக இருப்பதனால்தான், இந்தியாவில் கருப்புப் பணப்புழக்கம் அதிகமாக இருப்பதாகக் கூறிவரும் கோஷ்டியைச் சேர்ந்தவர் மன்மோகன் சிங்; கருப்புப் பணத்தை ஒழிப்பதற்கு முன் முதலாளிகளின் மீது விதிக்கப்படும் வரிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் மன்மோகன் சிங். எனவே, கருப்புப் பணத்தை ஒழிக்குமாறு மன்மோகன் சிங்கிடம் வேண்டுவது, கள்ளச் சாராயத்தை ஒழிக்குமாறு போலீசிடம் கோருவதற்கு ஒப்பானதாகும்.

இந்தியாவைச் சேர்ந்த முதலாளிகள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் ஆகியோர் சுவிஸ் வங்கிகளில் பதுக்கி வைத்துள்ள பணத்தைக் கொண்டு வருவது தொடர்பாக பொதுமக்களின் கருத்தறிய தில்லியிலும் குஜராத் மாநிலத்திலும் மாதிரி தேர்தல்களை நடத்தியிருக்கிறது, பா.ஜ.க. இப்பிரச்சினை தொடர்பாக அக்கட்சி அமைத்துள்ள நிபுணர்கள் குழு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை இந்தியாவிற்குக் கொண்டு வருவது தொடர்பாக சில 'உருப்படியான' யோசனைகளை வழங்கியிருப்பதாக ''இந்து'' நாளேடு பாராட்டியிருக்கிறது. முசுலீம்களை வேட்டையாடுவதில் வல்லவரான நரேந்திர மோடி, இப்பொழுது இக்கருப்புப் பணத்தை வேட்டையாடக் கிளம்பிவிட்டதாக பொதுக்கூட்டங்களில் மார்தட்டி வருகிறார். இப்படியாக பா.ஜ.க., தனது தேசபக்தியை நிரூபிக்க தீவிரவாத எதிர்ப்பு என்பதோடு, கருப்புப் பண எதிர்ப்பையும் சேர்த்துக் கொண்டுள்ளது.

இக்கருப்புப் பணப் பிரச்சினை தொடர்பாக பா.ஜ.க.வால் நடத்தப்பட்ட மாதிரித் தேர்தல்களில், ''வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை எந்தக் கட்சி இந்தியாவிற்குத் திரும்ப எடுத்து வரும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?'' என்ற கேள்வி கேட்கப்பட்டிருந்ததாம். ''தனது பிறப்பு தொடங்கியே பதுக்கல் வியாபாரிகள் மற்றும் லேவாதேவிக்காரர்களின் கட்சியாக அறியப்பட்டு வரும் பா.ஜ.க.விற்கு கருப்புப்


படிப்பகம்


www.padippakam.com

பணத்தை வேட்டையாடும் தகுதியுண்டா? என்று இந்தக் கேள்வியைக் கொஞ்சம் இப்படி மாற்றிக் கேட்டிருந்தால், அத்தேர்தலில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு வாக்களிப்பது எளிதாக இருந்திருக்கும்.

போர்டு பவுண்டேஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2002-ஆம் ஆண்டு தொடங்கி 2006-ஆம் ஆண்டுக்குள் 6,92,328 கோடி ரூபாய் பெறுமான கருப்புப் பணத்தை இந்தியர்கள் வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 1,36,466 கோடி ரூபாய் பெறுமான கருப்புப் பணம் இந்தியாவிலிருந்து வெளியேறியிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியிலிருந்த காலத்தில், அதாவது, 2002, 2003 மற்றும் 2004 ஆகிய மூன்று ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து தோராயமாக நான்கு இலட்சம் கோடி ரூபாய் பெறுமான கருப்புப் பணம் வெளியேறியிருக்கிறது. அப்பொழுதே இக்கருப்புப் பணக் கடத்தலைத் தடுக்காமல் பா.ஜ.க. மௌனமாக இருந்தது ஏன்? அப்பொழுது இக்கருப்புப் பணக் கடத்தலைக் கண்டு கொள்ளாமல்விட்ட பா.ஜ.க. கும்பல், இப்பொழுது ஆட்சிக்கு வந்த நூறு நாட்களுக்குள் கருப்புப் பண முதலைகளைக் கையும்களவுமாகப் பிடித்து விடுவார்கள் என்பதை எப்படி நம்ப முடியும்?

பா.ஜ.க.விற்கு மிகவும் நெருக்கமான ராமஜென்ம பூமி டிரஸ்டின் தலைவர்களுள் ஒருவனும், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தலையை வெட்டச் சொன்னவனுமான ராம்விலாஸ் வேதாந்தி, ஹவாலா கிரிமினல் பேர்வழி என்பதையும்; கமிஷன் வாங்கிக் கொண்டு கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றிக் கொடுப்பதற்காகவே அவன் ''மாத்ரி சேவா டிரஸ்ட்'' என்ற பெயரில் ஒரு நிழல் உலக நிறுவனத்தை நடத்தி வருவதையும் ஐ.பி.என் தொலைக்காட்சி நிறுவனம் இரகசிய கேமிரா மூலம் படம் பிடித்து அம்பலப்படுத்தியது. இப்படிப்பட்ட கருப்புப் பண கிரிமினல் பேர்வழியை நாடாளுமன்ற உறுப்பினராக்கி அழகு பார்த்த கட்சிதான் பா.ஜ.க.

பா.ஜ.க.வின் சகோதர அமைப்புகளான ராமஜென்ம பூமி நிவாஸ் மற்றும் விசுவ இந்து பரிசத் ஆகிய இரண்டு அமைப்புகளும் கருப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றிக் கொடுப்பதற்காகவே போலியான பத்து டிரஸ்டுகளை நடத்தி வருவதாகவும்; அவ்வமைப்புகளுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பல வழிகளில் பணம் வருவதாகவும்; அவ்வமைப்புகளிடம் மட்டும் கணக்கில் காட்டப்படாத கருப்புப் பணம் 10,000 முதல் 15,000 கோடி ரூபாய் வரை இருக்கலாம் என்றும் வருமான வரித் துறையின் முன்னாள் ஆணையர் விசுவ பந்து குப்தா குற்றஞ் சுமத்தியிருக்கிறார்.



சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை மீட்பது தொடர்பாக, பா.ஜ.க. தில்லியில் நடத்திய வாக்கெடுப்பு.

இவை எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடும் வண்ணம், ஹவாலா கிரிமினல் பேர்வழிகளான ஜெயின் சகோதரர்களிடமிருந்து பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் அத்வானி இலஞ்சம் வாங்கியதற்கான ஆதாரங்கள்கூட பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு அம்பலமாகி, அவரின் யோக்கியதை சந்தி சிரித்தது. உச்சநீதிமன்றம் அக்குற்றச்சாட்டில் இருந்து அத்வானியை விடுதலை செய்து விட்டதே என அவரது ஆதரவாளர்கள் சுட்டிக் காட்டலாம். அந்த வழக்கில் இருந்து அத்வானி மட்டுமா விடுதலை செய்யப்பட்டார்? ஜெயின் சகோதரர்களிடமிருந்து இலஞ்சம் வாங்கிக் கொண்டு அவர்களின் கிரிமினல் நடவடிக்கைகளுக்குத் துணையாக இருந்த அத்துணை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உச்சநீதிமன்றத்தால் நிரபராதிகளென விடுதலை செய்யப்பட்டனர். ஜெயின் டைரி வழக்கு எனப் பெயர் பெற்ற அவ்வழக்கும் அரசியல் காரணங்களுக்காகக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இருந்த பொழுது, மொரிஷியஸ் தீவுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்தால், அந்நிறுவனங்களின் இலாபத்தின் மீது இந்தியாவில் வரி விதிக்கப்படாது என்ற சலுகை அளிக்கப்பட்டது. இச்சலுகை அந்நிய நாடுகளில் குவிந்துள்ள கருப்புப் பணம் இந்தியப் பங்குச் சந்தையில் நுழையவும் வெளியேறவும் ஏராளமான வாய்ப்புகளைத் திறந்துவிடும் என விமர்சிக்கப்பட்டு, இச்சலுகையை ரத்து செய்ய

**கருப்புப் பணத்தை ஒழிக்குமாறு மன்மோகன் சிங்கிடம் வேண்டுவது, கள்ளச் சாராயத்தை ஒழிக்குமாறு போலீசிடம் கோருவதற்கு ஒப்பானது.**


படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் எனக் கோரப்பட்டது. அப்பொழுது நிதியமைச்சராக இருந்த பா.ஜ.க.வைச் சேர்ந்த யஷ்வந்த் சின்கா இச்சலுகையை ரத்து செய்ய மறுத்து, கருப்புப் பணம் வெள்ளையாக மாற உதவினார்.

அந்நிய நாடுகளில் வசிக்கும் இந்தியரோ, வெளிநாட்டவரோ தமது முக அடையாளத்தையோ அல்லது முகவரியையோ வெளிக்காட்டிக் கொள்ளாமல் இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு வசதியாக ''பி.என்.'' என்றொரு வாய்ப்பு உருவாக்கித் தரப்பட்டுள்ளது. அந்நிய நாடுகளில் குவிந்துள்ள இந்தியர்களின் கருப்புப் பணம் மட்டுமல்ல, தீவிரவாத அமைப்புகள்கூட இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்யலாம் என்பதால் இந்த ''பி.என்.'' வசதியை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என இந்தியப் பங்குச் சந்தை வாரியம் கூடப் பரிந்துரை செய்த பின்னும், காங்கிரசு கூட்டணி அரசு இதனை ரத்து செய்ய மறுக்கிறது.

இந்தியப் பங்குச் சந்தையில் தீவிரவாத அமைப்புகள் புகுந்துவிட்டதாகப் பீதி கிளப்பி வரும் பா.ஜ.க., இந்த பி.என். வசதியை கருப்புப் பண பேர்வழிகள் பயன்படுத்துவது பற்றி இப்பொழுதுகூட வாய் திறக்க மறுக்கிறது. இந்தியப் பங்குச் சந்தையில் கருப்புப் பணம் புகுந்து விளையாடுவதைத் தடுத்துவிட்டால், இந்தியப் பங்குச் சந்தை வளர்ச்சி புஸ்வாணமாகிவிடும் என்பது பா.ஜ.க.விற்குத் தெரியாத தேவ இரகசியமல்ல.

ஆட்சியைப் பிடித்த நூறு நாட்களுக்குள் அந்நிய நாடுகளில் பதுங்கிக் கடக்கும் இந்தியர்களின் கருப்புப் பணத்தை நோண்டியெடுக்கப் போவதாகச் சபதம் போட்டு வரும் பா.ஜ.க., அக்கருப்புப் பண பேர்வழிகளைச் சட்டப்படித் தண்டிப்போம் எனக் கூற மறுப்பதேன்? சுவிட்சர்லாந்திலும், வேறு சில நாடுகளிலும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணம் பற்றி சண்டமாருதம் செய்யும் பா.ஜ.க., உள்நாட்டில் புகுந்து விளையாடும் கருப்புப் பணத்தைப் பற்றி வாய் திறக்காத மர்மம் என்னவென்றும் தெரியவில்லை. உள்நாட்டு கருப்புப் பண பேர்வழிகளைக் கிடுக்கிப்பிடி போட்டுப் பிடிக்க, தேர்தலைவிட நல்ல தருணம் வேறு ஏதாவது உண்டா என்ன?

**பா.ஜ.க.வை ஆதரிக்கும் பண முதலைகளுள் யார் யார் சுவிஸ் வங்கிகளில் பணத்தைப் பதுக்கி வைத்துள்ளனர் என்ற பட்டியலை பா.ஜ.க. முதலில் வெளியிடட்டும்.**

தேர்தல்கள் முடிந்த பிறகு தொங்கு நிலை நாடாளுமன்றம்தான் உருவாகப் போகிறது. அந்த நேரத்தில் பா.ஜ.க.விற்கு எம்.பி.க்களை விலை பேசுவதற்கு கருப்புப் பண முதலைகளின் தயவு தேவை. செய்நன்றிக் கடனை மறந்துவிட்டு இக்கருப்புப் பண கிரிமினல் கும்பலை பா.ஜ.க. தண்டித்துவிடும் என்பதைக் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாது.

அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கும் முதலாளித்துவ பொருளாதாரத்தை, கருப்புப் பணத்தை வெளியே கொண்டு வருவதன் மூலம் தூக்கி நிறுத்த ஏகாதிபத்திய நாடுகள் முயன்று வருகின்றன. அந்த அடிப்படையில்தான் ''ஜி-20'' நாடுகள் கருப்புப் பணத்திற்கு எதிராக வாயைத் திறந்துள்ளன. கருப்புப் பணத்திற்கு எதிராக பா.ஜ.க. கிளர்ந்து எழுந்துள்ளதன் பின்னேயுள்ள மர்மம் இதுதான்.

அந்நிய நாடுகளில் பதுங்கிக் கிடக்கும் இந்தியாவுக்குச் சொந்தமான பணத்தை நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்வதோ, அக்கருப்புப் பண பேர்வழிகளைத் தண்டிப்பதோ பா.ஜ.க.வின் நோக்கமல்ல. மாறாக, கருப்புப் பண பேர்வழிகள் தங்கள் பணத்தை வெள்ளையாக மாற்றிக் கொள்வதற்கு ஒரு பொது மன்னிப்புத் திட்டம் வழங்குவது தான் அக்கட்சியின் நோக்கம். அத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு நாட்டிற்குள் பணப்புழக்கத்தை ஏற்படுத்த முயலுவதுதான் அக்கட்சியின் நோக்கம். கருப்புப் பணத்தை ஒழிக்க முடியாது என்பதையும் தாண்டி, கருப்புப் பணம் இல்லையென்றால் முதலாளித்துவப் பொருளாதாரம் இயங்க முடியாது என்ற கேவலமான நிலைமை உருவாகி விட்டதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது.

பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்து, அதன் பிறகு சுவிஸ் வங்கிகளில் பதுங்கிக் கிடக்கும் இந்தியர்களின் கருப்புப் பணத்தை நோண்டுவது கிடக்கட்டும்; தனது கட்சியைச் சேர்ந்த அல்லது தனது கட்சியை ஆதரிக்கும் பண முதலைகளுள் யார் யார் சுவிஸ் வங்கிகளில் பணத்தைப் பதுக்கி வைத்துள்ளனர் என்ற பட்டியலை பா.ஜ.க.முதலில் வெளியிடட்டும். இப்பட்டியலை வெளியிட ஆட்சியைப் பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை; நூறு நாள் அவகாசமும் தேவையில்லை என்பது பா.ஜ.க.விற்கே தெரியும்.




● ரஹீம்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com



ஓசூரில்...



சென்னையில்...

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

களது உணர்வு பூர்வமான போராட்டம், எமது மக்களின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்'' என்று கண்ணீர் மல்க, நா தழுதழுக்க வாழ்த்தினார்.

இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து தருமபுரியில் இவ்வமைப்பினர் நடத்திய பொதுக் கூட்டமும், கண்ணீரும் செந்நீருமாகத் தத்தளிக்கும் ஈழத்தமிழரின் அவலத்தை கண் முன்னே நிறுத்திய ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் நாடகமும், தமிழக மக்களைப் போராட அறைகூவின.


வீதி நாடகம்

பாட்டாளி வர்க்க ஆசான் தோழர் லெனினது பிறந்த நாளில், ஈழத்தின் மீதான இந்திய மேலாதிக்கப் போரை முறியடிக்க சூளுரை ஏற்று, விவசாயிகளைத் திரட்டி உசிலம்பட்டியிலும்,தொழிலாளர்களைத் திரட்டி சென்னையிலும் இவ்வமைப்புகள் எழுச்சிகரமான கூட்டங்களை நடத்தியுள்ளன.

இவை தவிர, ஈழத்தமிழர் மீதான இன அழிப்புப் போரின் கொடூரத்தைச் சித்தரிக்கும் காட்சி விளக்கத் தட்டிகள், வீதி நாடகங்கள், தெருமுனைக்கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள்- என தமிழகமெங்கும் இவ்வமைப்புகள் வீச்சாக பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசு துரோகிகளுக்குப் பாடம் புகட்ட, பார்ப்பன பா.ஜ.க.-அ.தி.மு.க பாசிச கும்பலை ஆதரிக்கும் கடைகோடி சந்தர்ப்பவாதத்தில் தமிழினவாதிகள் புதைந்துவிட்ட நிலையில், சரியான அரசியல் முழக்கங்களுடன் இந்திய மேலாதிக்கத்துக்கு எதிராக பல்வேறு அடக்குமுறைகள் - இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு இவ்வமைப்புகள் தமக்கே உரித்தான போர்க்குணத்தோடு தொடர்ந்து போராடி வருகின்றன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.



கடலூரில்...



தஞ்சையில்...


படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# ஈழத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கப்போருக்கு பதிலடி கொடுப்போம்! தேர்தலைப் புறக்கணிப்போம்!



## ஈழத்தமிழ் மக்களின்
## குலையறுக்கும் காங்கிரசு-தி.மு.க...
## தலையறுக்கும் பா.ஜ.க.-அ.தி.மு.க...
## ஈழத்தமிழர் பிணத்தைக் காட்டி
## பதவி வேட்டையாடும்
## பச்சோந்திகளுக்குப் பாடம் புகட்டுவோம்!

## போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்!
## புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!

- என 10.04.09 அன்று தமிழகமெங்கும்

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**
**பெண்கள் விடுதலை முன்னணி**

ஆகிய புரட்சிகர அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்



